ஜூலை 2016
Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/133/News/2016

# சோதிடகேசரி

ISSN 2012-5143
மலர்: 9 இதழ்: 04
விலை ரூபா 75 /-
ஆடி மாத இதழ்



அருள் தரும் ஆடிப்பூரம்

சூரிய தோசம் போக்கும் திருத்தலம்

அம்பிகையின் ஆயுதங்கள்

அமெரிக்காவில் 'ராதாமாதவ் தாம்' ஆலயம்

## குரு பெயர்ச்சிப் பலன்கள்!

JEYECHANDRANS
The Art of Fashion
Wellawatte / Pettah
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்



433, காலி வீதி, வெள்ளவத்தை
011 - 4528435, 011 - 4528438
Skype: jeyechandrans888

194, மெயின் வீதி, கொழும்பு - II
011 - 2448870, 011 - 2448860
Skype: jeyechandrans888

Web : www.jeyechandrans.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா

# இலங்கை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## கொழும்பு மாநகரில் அதி அற்புத ஆலயம்



"பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அமைக்கப்படும் ஆலய திருப்பணியை ஆரம்பிக்கும் அல்லது அதில் பங்கு கொள்ளும் பக்தரின் ஏழு பிறப்பிற்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் அவரின் மூதாதையரும் நரகலோகத்திலிருந்து மீட்சி பெறுவர்" என ஸ்கந்த புராணம் கூறுகிறது.

ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் அரைவாசி வேலைகள் முடிந்த நிலையில், நீங்களும் பகவான் கிருஷ்ணரின் ஆலயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் வந்து பங்கு கொண்டு பிறவிப் பயனை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



▲ நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நன்கொடைகளை ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமர்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச் செய்யலாம்.

**Commercial Bank - Kotahena**
A/C Name : ISKCON - Temple Fund
A/C No : 1120017042

**Hatton National Bank - Kotahena**
A/C Name : ISKCON
A/C No : 207010000891

ISKCON

www.iskcon.lk

### சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் - இலங்கை

ஸ்தாபக ஆச்சாரியார் : அருட்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

### ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்

இல. 188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.
தொ : 011 2433325 | மின்னஞ்சல் : iskcon@slt.lk

50 ஆண்டு நிறைவு 1965 - 2015



பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகிறது. இவர்களுக்கு சிறந்த கல்வியும் நற்பழக்கவழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. தங்களின் அல்லது தங்களின் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம்,தங்களின் திருமண நாள் உறவினர்களின் ஞாபகார்த்தம் பேன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறுவர்களுக்கு உதவலாம்.

தற்போதய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க ஒரு நாளைக்கு **ரூபா 25,000/-** செலவாகிறது.

கருணை இல்லமாக விளங்கும் பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

# கோகுலம்

Commercial Bank
A/C Name - ISKCON
A/C Number - 1050669901
Shift Code - CCEYLKLX

**COKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel: 011 2948398 Web: www.iskcon.lk

**OFFICE** No. 188, New Chetty Street, Colombo 13. Tel: 011 2433325 E-mail: iskcon@slt.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடகேசரி
SOTHIDA KESARI
*Astrological Magazine - Tamil*
மலர்: 9 | இதழ்: 4



# வாழ்க்கையில் வெற்றிபெற

## உழைப்பும் தன்னம்பிக்கையும் அத்தியாவசியமானவையே!

ஒருவர் வாழ்க்கையில் வெற்றிபெற நல்ல சிந்தனையும் தெய்வ பக்தியும் .இருப்பது அடிப்படை அவசியமாகும். இவை இரண்டிற்கும் அடுத்தாற்போல், ஒருவர் வாழ்க்கையில் வளங்களை பெற்று மென்மேலும் உயர்ந்திட உழைப்பும் தன்னம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டியது மிக மிக முக்கியமாகும். ஒருவர் உள்ளத்தில் வைத்திருக்கும் உயர்ந்த சிந்தனைகளுக்கு ஏற்பவே அவருடைய வாழ்க்கை நிகழ்வுகளும் இடம் பெறுவது நியதியாகும். இதைத்தான் கற்றறிந்த ஆன்றோர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே உள்ளத்தளவே உயர்வு, உள்ளுவதெல்லாம் உயர்வு என்றெல்லாம் கூறியுள்ளார்கள்.

சில நேரங்களில் வாழ்க்கையில் ஏற்படும் சிறு சிறு பின்னடைவுகளையும் தோல்விகளையும் கண்டு துவண்டு விடாமல், சிரமங்களை தொடர்ந்தே சென்று சிகரங்களை அடைவேன் என்று மனதில் தளரா ஊக்கத்துடன் எண்ணிக் கொள்ள வேண்டும். மேலும் "வாழ்க்கையில் நான் நிச்சயம் வெற்றி பெற்றே தீருவேன், என்னுடைய வாழ்க்கையை சாதனைகள் நிறைந்ததாக அமைத்துக்கொள்வேன், வாழ்க்கையில் நேரிடும் தடைகளையும் இடைஞ்சல்களையும் பெரிதாக கருதாமல், முடங்கியும் இருக்காமல், உழைப்பையும் தன்னம்பிக்கையையும் என் இரு கண்களாய் பாவித்து முன்னேறிக்கொண்டே இருப்பேன்" என்று ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்தால் எஞ்சியுள்ள வாழ்க்கையில் தோல்வியின் நிழல் கூட தீண்டப் பெறாமல் வெற்றி அடைவது என்பது திண்ணம். "வெற்றி பெறுவோம்"! என்ற பூரண உறுதிப்பாடும் முயற்சியோடு கூடிய ஓயாத உழைப்பும் வாழ்க்கையில் வெற்றிகளை குவிக்கும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை!.

இம்மாத இதழில் குருப்பெயர்ச்சி சிறப்பு பலன்கள், வாழ்வில் வளம் சேர்க்கும் வரலட்சுமி விரதம், ஆடி மாதத்து சிறப்புக்கள், காவிரி தாய்க்கு நன்றி நவிலும் ஆடி பெருக்கு, அருளை அள்ளித் தரும் அம்பிகைக்கு ஆடிப்பூரம், விசித்திர கண்ணாடி, மோட்ச சந்நியாசி யோகம், ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும் ஆடி மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கை ஆகின்றன.

✦ ஆசிரியர்

## துர்முகி வருடம் ஆடி மாதம் 16.07.2016 முதல் 16.08.2016 வரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | ராசி<br>24.07.2016 சிம்ம புதன்<br>1.08.2016 சிம்ம சுக்கிரன்<br>2.08.2016 கன்னி– குரு<br>குருபெயர்ச்சி | | சூரியன் புதன் சுக்கிரன் |
| | | | குரு ராகு |
| ல | சந்திரன் சனி (வ) செவ்வாய்(வ) | | |

| | | | |
|---|---|---|---|
| கேது | ல | | |
| | அம்சம் | | சூரியன் செவ்வாய் |
| | | | |
| குரு சந்திரன் புதன் | | சனி(வ) | சுக்கிரன் ராகு |

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 117 322700 (30 Lines) Fax: +94 117 522704
Website: www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி முதல்வருக்கு முதல் வணக்கம்!

காமாக்ஷி வெங்கட்



எந்த ஒரு காரியத்தை நாம் தொடங்கினாலும் அது எவ்விதத் தடையும் இல்லாமல் முற்றுபெற விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பிப்பது நமது வழக்கம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் பிடித்தமானவர் விநாயகர். எளியவர்களுக்கெல்லாம் எளியவராய் விளங்கும் விநாயகர் பெரும்பாலும் அரச மரத்தடி குளக்கரை போன்ற இடங்களில் அமர்ந்துதான் தரிசனம் தரு கிறார்.

இவருக்கு படைக்கப்படும் பொருட்களும் எளிமையானவையே. காட்டில் பூத்துக் கிடக்கும் எருக்கம்பூ வாய்க்கால் வரப்புகளில் பரவலாக முளைந்திருக்கும் அறுகம்புல் போன்ற மிக எளிமையான பொருட்களைத் தாம் ஏற்றுக் கொண்டு தன் பக்தர்களுக்கு அருளை வெள்ள மென பெருக்கி அருள்கிறார். இவருக்கு இருபத் தோரு திருநாமங்கள் உள்ளதாக புராணங்கள் சொல்கின்றன. இவரை வணங்கினால் எந்த செயலிலும் வெற்றி நிச்சயம்.

## எளிமையான விநாயகர் ஸ்லோகங்கள்:

1. கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

★★★

2. விநாயகனே வெவ் வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

★★★

3. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்

★★★

4. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு


★★★

5. பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சி 2016
## பொதுப் பலன்கள்



### பொதுப்பலன்கள்

02.08.2016 குரு பெயர்ச்சி
17.01.2017 துலா குரு அதிகாரம்
10.03.2017 கன்னி குரு (அதிகார முடிவு)
02.09.2017 துலா குருப்பெயர்ச்சி

**இயற்பெயர் :** பிரகஸ்பதி, மனைவி பெயர் தாரா
திசை ஆண்டுகள் பதினாறு
குரு நட்சத்திரங்கள் புனர்பூசம், விசாகம், பூரட்டாதி
**ஆட்சி வீடு** தனுசு, மீனம்,
**உச்ச வீடு** கடகம்,
**நீசவீடு** மகரம்
**நட்பு வீடு** ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், கும்பம்
பகை வீடு மேசம், விருச்சிகம்
**நட்பு கிரகம்** சூரியன், சந்திரன், சனி, கேது, செவ்வாய்
**பகை கிரகம்** புதன், சுக்கிரன், ராகு
புத்திரகாரகன், சர்க்கரை நோய், இதய நோய் காரகன்
தங்கம், வங்கி பணி, ஆசிரியர் பணி, பண புழக்கம் போன்றவற்றிற்கு காரகத்துவம் உள்ள கிரகம்
**பார்வை இடம்** 5,7,9
**பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள்**
மேசம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு கும்பம்
**பிரியமானது** கொண்டைக்கடலை, முல்லைப்பூ. மஞ்சள் வஸ்திரம்



## தெய்வஜாதியினர்!

"நான் மட்டும் வாழ வேண்டும். மற்றவர்கள் கஷ்டப் படட்டும். நான் சுகமாக வாழ்வதற்காக மற்றவர்கள் கஷ்டப் பட்டாலும் அதை நான் பொருட்படுத்தமாட்டேன்" என்று நினைப்பது மிருக இயல்பு.

தங்கள் ஆற்றலை சுயநலனுக்கு மட்டும் பயன்படுத்தும் இவர்களை "அசுரர்கள்" என்றும் சொல்லலாம். தாங்களும் வாழ்ந்து மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் மனிதர்கள். தன் பொருட்டு வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவர்கள் தங்கள் ஆற்றலை சமுதாய நலனுக்குப் பயன் படுத்துபவர்கள் தேவர்கள். இவர்கள், ஒரு தேவை என்று வரும் போது தாங்கள் துன்பப்பட்டாலும் மற்றவர்கள் வாழ வேண்டும் என்று நினைத்துச் செயல்படுவார்கள்.

"ஒன்று பரம்பொருள், நாம் அதன் மக்கள்" என்று கருது பவர்கள் தெய்வஜாதியினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**



# மேஷம்

மனதில் உறுதியும் செயலில் வலிமையும் கொண்டு விளங்கும் மேச ராசி வாசகர்களே! இம்மாதம் உங்கள் ராசிக்கு குரு பார்வையும் சுகஸ் தானத்தில் புதனுடன் சுக்கிரனும் இணைவு பெறுவது வாகன வசதிகளையும் வீட்டு வேலைகளையும் சரியாக செய்து கொள்வீர்கள்.

**பணியாளர்களுக்கு**

கருத்து ஒற்றுமையும், தொழிற்சங்க செயல்பாடுகளில் திறமையும் கொண்டு விளங்குவீர்கள். தனக்கு கொடுத்த வேலையை சரியாக செய்து முடிப்பீர்கள். தொழிலில் முன்னைவிட சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது நலனில் வேகமாக செயல்படுவீர்கள். உங்களை நம்பி வந்தவருக்கு உதவிகளை செய்வீர்கள். சிறு செயல்களாக இருந்தாலும் அதில் தொய்வு வராமல் பார்த்து கொள்வீர்கள். பொருளாதாரத்தில் மேன்மை பெறுவீர்கள்.



**வியாபாரிகளுக்கு**

உங்களின் தொழில் ஸ்தானாதிபதி சனி எட்டாமிடத்தில் அமருவது தொழிலில் போட்டிகள் இருந்தாலும் உங்களின் கவனம் வளர்ச்சியை பெற்று தரும். பிறருக்காக செய்யும் காரியத்தில் சில பின்னடைவுகளை சந்திக்க நேரும். கருத்துகளில் ஒற்றுமையும் தொழிலில் நேர்மையும் உங்களை கடக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் சிரமமின்றி கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிலும் முன்கூட்டியே யோசித்து செயல்படுவீர்கள். வெளியூர் நிகழ்ச்சிகளில் ரசிகர்களின் மனம் அறிந்து செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் சிலருக்கு ஏற்றம் உண்டாகும்.

**பெண்களுக்கு**

பெண்களின் எண்ணம் எளிதில் வளர்ச்சியை தரும். கனவுகளை நனவாக்க செயலில் வேகம் காட்டுவீர்கள். உறவுகளில் சில சச்சரவுகள் வந்தாலும் நினைத்தபடி செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியும் முன்னேற்றமும் காண்பீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் உங்கள் கவன குறைவுகளால் சில நேரம் தேர்வில் மதிப்பெண்கள் குறையும் எதிலும் கவனமுடன் செயல்படுவது வெற்றியையும் தேர்வில் நன்மையையும் பெறுவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

11.08.2016 வியாழன் பகல் 11.12 முதல் 13.08.2016 சனி இரவு 10.08 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

அவசியமான காரியம் இனிதே நிறைவேறும். எதிலும் அவசரமின்றி செயல்பட்டால் எல்லாம் நன்மையாக அமையும். உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும்.

**பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

குறுகிய காலத்தில் பல சாதனைகளை செய்வீர்கள். முதலீடு இல்லாத தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். உற்ற நண்பர்களின் உதவி உங்களுக்கு ஊக்கம் தரும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்**

பொது விடயத்தில் விட்டு கொடுக்காமல் செயல்படுவீர்கள். தொழிலில் முன்பை விட கவனம் செலுத்தி வளர்ச்சி பெறுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** ஆரஞ்சு, இளம் மஞ்சள், கரும் பச்சை

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு

## லட்சுமி சுலோகம்

ரிஷப ராசியில் பிறந்தவர்கள் மகாலட்சுமி பூஜை செய்தும் வெள்ளிக்கிழமை விரதம் இருந்தும் கீழ்க்கண்ட சுலோகத்தைத் தினசரி 11 முறை கூறி வந்தால் சகல செல்வங்களும் கிடைக்கும். "ஸ்ரீ லக்ஷ்மீம் கமல தாரிண்யை ஸிம்ஹ வாஹின்யை ஸ்வாஹா"

**அதிர்ஷ்ட கிழமைகள் :** ஞாயிறு, புதன், செவ்வாய்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

சனி, ஞாயிறுகளில் ராகு காலத்தில் சிவன் கோவிலில் பைரவருக்கு நெய் தீபமிட்டு உளுந்து உணவு வைத்து வழிபட கஷ்டம் நீங்கி சுபிட்சம் பெறுவீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

**02.08.2016 முதல் 02.09.2017 வரை குரு பெயர்ச்சி பலன்கள்**

செவ்வாய் கிரகத்தில் ஆதிக்கம் பெற்ற மேச ராசி வாசகர்களே! இதுவரை உங்களின் ராசியை ஒன்பதாம் பார்வையாக பார்த்து வந்த குரு பகவான் இனி உங்களின் இரண்டாமிடத்தையும், பத்தாமிடத்தையும், பன்னிரெண்டாமிடத்தையும் பார்வை இடுகிறார்.

குரு பார்க்க கோடி நன்மை என்பதும் குரு எந்த வீட்டை பார்வை இடுகின்றாரோ அந்த இடம் சிறப்பாக அமையும் என்பது உண்மை. இது வரை உங்களின் உடல் நலத்தில் ஆரோக்கியம் இருந்து வந்தது. சனி உங்களுக்கு அட்டம சனி யாக இருப்பதிலிருந்து உங்களை குரு பார்த்து அந்த பாதிப்பில் இருந்து காத்து வந்தார். இனி கவனமுடன் செயல்படுவது அவசியமாகும். நீங்கள் விரும்பும் தொழிலை செய்து லாபம் ஈட் டுவீர்கள். உங்களுக்கு புதிய செலவுகள் வராமல் காத்து கொண்டிருப்பார். மேலும் உங்களின் ராசிக்கு ஒன்பதாமிடத்து அதிபதியும், பன்னி ரெண்டாம் இடத்து அதிபதியுமான குரு தனது விரையஸ்தானத்தை பார்வை இடுவது உங்களு க்கு நல்லதல்ல என்பது உங்களின் ராசிக்கு பகை கிரகம் என்பதால் நீங்கள் தொடர்ந்து தட்சிணா மூர்த்தியையும், நவக்கிரக குருவையும் வணங்கி வர வேண்டியது அவசியமாகும்.

மேலும் உங்களின் இரண்டாமிடமான தன ஸ்தானத்தை பார்வை இடுவது பண புழக்கங்க ளுக்கு குறைவிருக்காது. உறவுகள் பலப்படும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும் உங்களின் ராசிக்கு ஆறாமிடத்தில் குரு அமர்வது புதிய கடன்படுவதுடன் வங்கி மூலம் கடன் பெறும் வாய்ப்புகளும் அமையும். உங்களின் தொழில் ஸ்தானத்தை குரு பார்வை இடுவது தொழிலில் இருந்து வந்த சிரமங்கள் மறையும். பண வரவுகள் நன்றாக இருக்கும். புதிய தொழி லில் முயற்சிகள் நல்ல பலன் பெற்று தரும். வரவுக்கு தகுந்த செலவுகள் வந்து சமநிலையில் பணப் புழக்கம் இருக்கும்.

நினைத்ததை அடைய சில சிரமங்களை பட வேண்டி வரும். அட்டம சனியின் நெருக்கடி உங்களுக்கு பல வழிகளில் சிரமம் தந்தாலும் உங்களின் தன்னம்பிக்கையும், மன உறுதியும் எதையும் சந்திக்கும் மனோநிலையை தரும். விரையஸ்தானத்தை பார்வை இடுவது பண விரையம் சுப விரையமாகவும், வீடு கட்டுதல், திருமண செலவு போன்ற சுப செலவுகளால் கடன் படாமல் எளிதில் செயல்படும் நிலை உண்டாகும். மேலும் குரு அதிகாரம் பெற்று 17.01.2017இல் துலாத்திற்கு போகும் போதும் மீண்டும் 10.03.2017இல் கன்னிக்கு வக்கிரம் பெறுவதும் உங்களின் செயல்களில் உத்வேகப் பெறும் காலமாக அது அமையும்.

எதிலும் மனத்தளர்வு கொள்ளாமல் உள் அன் புடன் செயல்படுவதன் மூலம் உங்களின் பிரச் சினைகளை எளிதில் ஜெயிக்கும் வலிமையை பெறுவீர்கள். தெய்வ வழிபாடுகள் உங்களின் செயல்களுக்கு பலம் பெற்று தருவதுடன் விடு படும் வாய்ப்பையும் பெற்று தரும்.

**பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்ப தால் அடிக்கடி நவக்கிரக குருவையும், தட்சி ணாமூர்த்தியையம் வியாழக்கிழமை வணங்கி வரவும். வெற்றி பெறுவது நிச்சயம்.**

## அறவாழ்வில் துன்பமும் பேரறம்தான்!



வாழ்க்கைக்கு உயிராக விளங்கு வது அறம். "அற வழியில் வாழ்பவர் களுக்கு இந்த உலகத்திலும் இன் பம் கிடைக்கும். மறு உலகத்திலும் இன்பம் கிடைக் கும்" என்று, புத்தர் கூறியிருக்கிறார். அற வாழ்க்கை யைப் பின்பற்று வதால் துன்பம் வந்தாலும் அதைப் பின்பற்றுவதும் இன்பமே. அந்தத் துன்பமும் பேரறம்தான் என்று பெரி யோர்கள் கருதுவார்கள். இதற்கு ஸ்ரீராமர் மேற்கொண்ட வனவாசம், அரிச்சந்திரன் பட்ட துன்பம் போன்ற பல சான்றுகள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடி மாதத்து சிறப்புக்கள்

**ஆடிமாதப் பிறப்பு வந்து விட்டாலே இந்துக்களுக்கான அனைத்துக்கடவுளையும் வேண்டிக்கொண்டு கொண்டாடும் பண்டிகைகளும், பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கும் விரதங்களும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கும்.**

இம்மாதத்தின் மற்ற சிறப்புகளைக் காட்டிலும் லோக நாயகியான உமாதேவிக்கு ஆடி மாதம் உரியதாகக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதம் முழுவதும் அம்மன் ஆலயங்களில் பல்வேறு உற்சவங்களும் அன்ன தானங்களும், கூழ் காய்ச்சி பக்தர்களுக்கு ஊற்றுவதும் நடைபெறும். ஆடி மாதத்தின் பூர நட்சத்திர தினம் அன்னை உமா தேவிக்கு மிகவும் விஷேடமான தினம். உலக மக்களைக் கருணையோடு காத்திட "சக்தி" இவ்வுலகில் தோற்றம் எடுத்தது. ஆடிப்பூர நன்னாளில்தான் எனப் புராணங்கள் தெரி விக்கின்றன.

ஆடிப்பூரதினம் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் வந்தால் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. துர்முகி ஆண்டில் வருகின்ற ஆடிப்பூர தினம் வெள்ளிக்கிழமையன்று வருகிறது. சக்தி உபாசகர்கள் இந்நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். உலகோர் நலனைப் பெரிதும் நாடும் சித்தர்களும், ஞானிகளும் அன்னை சக்தியின் அருள் பெறவும் அஷ்டமா சித்திகளைப் பெற்றிடவும் தங்களின் முயற்சிகளை ஆடிப்பூர நன்னாளிலேதான் தொடங்குவார்கள். இந்த நன்னாளிலேயே ஸ்ரீ பூமிதேவி ஆண்டாளாக இவ்வுலகில் அவதரித்தார். ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆடிப்பூர விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.



"பொருளில்லார்க்கு இல்லை இவ்வுலகம்" என்ற முதுமொழிக்கிணங்க, மனிதருக்கு இன்று வாழ வழி வகுக்கின்ற வாழ்வியல் ஆதாரமாகத் திகழ்வது பொருள் தான். எனவேதான், இன்றைய உலகில் பொருளாதாரம் எண்ணற்ற விடயங்களுக்கு அச்சாணியாக இருக்கின்றது. இந்தப் பொருள் செல்வத்தையெல்லாம் மனிதனுக்கு அளித்து வளமோடு வாழவைப்பவள் திருமகள் என்றழைக்கப்படும் லக்ஷ்மி தேவியே. லக்ஷ்மி என்ற பதத்தின் அர்த்தமே "லக்ஷணம் பொருந்தியவள்" என்பது தான் செல்வத்திற்கு அதிபதியான லக்ஷ்மி எல்லோராலும் பூஜிக்கப்பட வேண்டியவள். தன்னைத் துதிப்போருக்கு அஷ்ட ஐஸ்வர்யங்களையும் அள்ளித்தருபவள் ஐஸ்வர்ய தேவியான திருமகள். ஆகவேதான் மக்கள் லக்ஷ்மி தேவியைப் போற்றிப் புகழ்ந்து பொருள் செல்வத்தைப் பெறுகின்றார்கள். வேதகாலம் தொட்டே உலகின் பல பகுதிகளிலும் திருமகள் வழிபாடு தொடர்ந்து இருந்து வந்துள்ளது. வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் தீபாவளித் திருநாளன்று லக்ஷ்மி பூஜையை நடத்துகின்றார்கள். ஆடி கடைசியில் அல்லது ஆவணி முதல் வாரத்தில் பௌர்ணமிக்கு முன்னால் வரக்கூடிய வெள்ளியன்று லக்ஷ்மியை வழிபடும் பூஜைக்கு "வரலக்ஷ்மி பூஜை" என்று பெயர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றையதினம் சுமங்கலிகள், இல்லத்தைச் சுத்தம் செய்து அலங்கரித்து, கலசம் வைத்து, லக்ஷ்மி துதி சொல்லி அனைத்து வளங்களும் எல்லோரும் பெற்றிடல் வேண்டும் என மனதில் நினைத்து பூஜை செய்வார்கள். வரலட்சுமி விரதத்தைக் கடைப் பிடித்தவர்கள் சகல சௌபாக்கியங்களையும் அடைந்தார்கள் என பத்ம புராணம் தெரிவிக்கின்றது. கணவன் நல்ல உடல் நலத் துடனும், ஆரோக்கியத்துடனும் பெருகிவரும் செல்வத்தோடும் இருந்திடவும், தாலி பாக்கியம் நிலைக்கவும், இல்லத்தில் செல்வம் செழித்திடவும் வரலக்ஷ்மி விரதம் வழி வகுக்கும். இதுஒரு மங்களகரமான விரதம், மனதுக்கு நிம்மதி அளித்திடும் விரதம். இம்மையிலும் மறுமையிலும் நல்லதையே தந்திடும் இனிய விரதம்.



பெரும்பாலும் தென்னிந்திய மாநிலங்களில் ஆடி மாதத்தின் பதினெட்டாவது நாளை "பதினெட்டாம் பெருக்கு" என்றும் "ஆடிப் பெருக்கு" என்றும் கொண்டாடுகின்றார்கள். இது ஒரு சமூகக் கொண்டாட்டமாகவே நடத்தப்படுகின்றது. அன்று பலவகை உணவுக்களை எடுத்துக் கொண்டு மக்கள் குடும்பம் குடும்பமாக நதி, ஆறு, பூங்காக்களுக்குச் சென்று குழந்தைகளுடனும் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் ஓய்வாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்துவிட்டு மாலையில் வீடு திரும்புகிறார்கள். இச்சமயத்தில் நதிகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால், மக்கள் மனதிலும் மகிழ்ச்சி வெள் ளம் பெருக்கெடுக்கின்றது. விவசாயிகளும் "ஆடிப்பட்டம் தேடி விதை" என்பதற்கிணங்க தமது தோட்டங்களிலும் வயல்களிலும் விதைப்பு வேலைகளைத் தொடங்குகின்றனர். ஆடி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் ஆடிக் கிருத்திகை விரதம் முருகனை நினைத்துச் செய்யப்படும் ஒரு சிறப்பான விரதம் ஆடி மாதத்தில் இருந்து தொடங்கி ஆறு மாதங்கள் கார்த்திகை விரதம் இருந்து தை மாதக் கார்த்திகையில் விரதத்தை முடிப்பார்கள். ஆடிக்



கிருத்திகை விரதம் மன நிம்மதியையும், சகல செல்வங்களையும் அளிக்கும் என்று ஆன்மீகச் சான்றோர்கள் கூறியுள் ளனர்.


சூரியனும் சந்திரனும் ஒரே பாதையில் பூமிக்கு நேராக வரும்போது அமாவாசை ஏற்படுகின்றது. ஆடி மாதம் வரும் அமாவாசை சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒரு முக்கிய நாளாக இருக்கின்றது. மறைந்த முன் னோர்களுக்கு உரிய பிதுர் பூஜைகள் செய்கின்ற புண் ணிய சிரார்த்த தினம் ஆகும் இந்த ஆடி அமாவாசை தினம் சூரியன் தெற்கு நோக்கி சஞ்சாரம் செய்ய ஆரம்பிக்கும் நாளான ஆடி அமாவாசை பிதுர் தர்ப்பணத்திற்கு மிகவும் சிறப் பான காலமாகக் கருதப்படுகின்றது.

- மழைக்காலத் தொடக்கமான தட்சணாயணம் பொதுவாக அனைத்து இறைவழிபாடுகளுக்கும் உற்றதாகும் என்பது புராண காலந்தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு நடைமுறை. இப்புண்ணிய காலத்தில் நாமும் அம்மனை வழிபட்டு நலம் பெறுவோமாக!

✦ நவநீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வேத காலத்தே யக்ஞவல்கியர் என்ற மகரிஷி ஒருவர் இருந்தார். நான்கு வேதங்களில் ஒன்று எசுர் வேதம். அது வேள்விப் பூசை பற்றிய விவரங்களைக் கூறுவது. அந்த எசுர் வேதம் இரண்டு பிரிவு உடையது. 1. சுக்கில எசுர் வேதம், 2. கிருஷ்ண எசுர் வேதம், சுக்கில எசுர் வேதத்தை இயற்றியவர் யக்ஞவல்கியர்.**

யக்ஞவல்கியர் இளமையில் வைசம்பாயனர் என்னும் குருவிடம் சாத்திரம் பயின்றார். அவர் குரு மட்டுமல்ல! யக்ஞவல்கியருக்குத் தாய் மாமனும் ஆவார். அவரும் ஒரு ரிஷி. இவரும் ஒரு ரிஷி.

வைசம்பாயனர் ஆசிரமத்திற்கு அருகே வர்த்தமான புரம் என்ற நகரம் இருந்தது. அதனை சுப்ரியா என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான்.



# வேள்வியின் மகத்துவத்தை உணர்த்திய யக்ஞவல்கியர்

அவன் நடத்தை கெட்டவன். ஒழுக்கம் இல்லாதவன். அவன் ஒரு முறை நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்தான். அரண்மனை வைத்தியர்கள் எவ்வளவு முயன்றும் அவன் நோய் தீரவில்லை. கடைசியில் வைசம்பாயனரிடம் தஞ்சம் புகுந்தான். நீங்கள்தான் எனது நோயைப் போக்க வழி செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டான். அரசன் உடல் நலம் பெற வேண்டும் என்ற சங்கல்பம் வைத்து வேத விதிப்படி வைசம்பாயனர் தன் ஆசிரமத்தில் சிறப்பாகத் தினமும் ஓமம் நடத்தினார்.

ஒவ்வொரு தினமும் ஓமம் முடிந்தபிறகு வேள்விப் பிரசாதத்தையும் கலச தீர்த்தத்தையும் சீடர்களிடம் கொடுத்து அரசனுக்கு அனுப்பி வைத்தார். சில நாட்கள் கடந்தன. அரசன் உடல் நிலையில் சற்றே முன்னேற்றம் ஏற்பட்டது. எனினும் வைசம்பாயனர் நடத்தும் ஓமத்திலும், கலச தீர்த்தத்திலும் அவனுக்கு நம்பிக்கை இல்லை அரண்மனை வைத்தியர்கள் கொடுத்த மருந்துதான் இப்போது வேலை செய்கிறது. அதனால்தான் நமக்கு நல்ல குணம் ஏற்பட்டு வருகிறது என்றே உள்ளுக்குள் நினைத்தான். எனவே ஆசிரமத்திலிருந்து வந்த கலச தீர்த்தத்தையும் அரை மனதோடுதான் அருந்தி வந்தான். ஒரு நாள் வைசம்பாயனர் தன் சீடர் யக்ஞவல்கியரிடம் கலச தீர்த்தமும் வேள்விப் பிரசாதமும் கொடுத்து, "இதனை அரண்மனைக்கு எடுத்துச் சென்று அரசனிடம் கொடுத்துவிட்டு வா!" எனக்கூறி அனுப்பினார்.

யக்ஞவல்கியரும் ஆர்வத்துடன் அதனை எடுத்துக் கொண்டு அரசண்மனைக்குப் போனார். கலசத் தீர்த்தத்தையும் வேள்விப் பிரசாதத்தையும் அரசனிடம் நீட்டினார். அந்த அரசனோ அதனைக் கை நீட்டி வாங்காமல் அலட்சிய மனோபாவத்துடன் "அங்கே வைத்துவிட்டுப் போ!" என்றான். அது கண்டு யக்ஞவல்கியருக்கு ஆத்திரமும், கோபமும் வந்தன. ஆயினும் அடக்கிக் கொண்டு, ஏ! அரசனே! இதிலெல்லாம் உனக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது. இதன் சக்தி எப்படிப்பட்டது என்று தெரியுமா உனக்கு? இதில் நம்பிக்கை இல்லாதவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் ஆசிரமத்திற்கு வந்தாய்? என் குருவிடம் ஏன் உதவி கேட்டாய்? ஒவ்வொரு நாளும் மெனக்கெட்டு நாங்கள் எதற்காக இந்தக் கலச தீர்த்தம் எடுத்துக் கொண்டு இங்கே வர வேண்டும்? என்றார்.

அது கேட்டு, "ஓ! அப்படியா? இந்தக் கலச தீர்த்தத்திற்கு அவ்வளவு மகிமை உண்டா? அப்படியானால் எங்கே அதன் மகிமையை நிரூபித்துக் காட்டு பார்ப்போம்!" என்றான் அரசன். அது கேட்ட யக்ஞவல்கியர் அவனுக்கு நேரடியாக எந்தப் பதிலும் சொல்லாமல் ஒரு மந்திரத்தை உச்சாடனம் செய்து அந்தக் கலச தீர்த்தத்தை அருகிலிருந்த பட்டுப்போன ஒரு மரப் பொந்தில் தெளித்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டார்.



அவர் ஆசிரமத்தை அடைவதற்குள் அந்தக் கலச தீர்த்தத்தின் மகிமை எப்படிப்பட்டது என்பது அந்த அரசனுக்குப் புரியத் தொடங்கிவிட்டது. ஆம்! மந்திரம் கூறித் தெளித்துவிட்டு அவர் சென்ற சில நிமிடங்களில் பட்டுப் போயிருந்த அந்த மரப் பொந்திலிருந்து இலையும் தளிரும் கூடிய கிளை ஒன்று படர்ந்து வெளிப்பட்டது. அடுத்து அந்தக் கிளையில் பூக்கள் பூத்தன. காயாக மாறின. அடுத்துப் பழங்கள் பழுக்கத் தொடங்கின.

இந்த அதிசயத்தைப் பார்த்து அரசனும், அங்கிருந்தவர்களும் ஆச்சரியப்பட்டு வாய் பிளந்தபடி நின்றனர். அந்த அரசனின் அகம்பாவம் அகன்றது. உடனே ஆசிரமத்திற்கு ஆள் அனுப்பிக் கலச தீர்த்தமும், பிரசாதமும் கொடுத்தனுப்பும்படி அரசன் கேட்டான். வைசம்பாயனர் திகைத்து நின்றார். நடந்தவை என்ன என்று யக்ஞவல்கியர் விளக்கினார். வேள்விப் பூசைக்கும் அதில் வைக்கப்பட்ட கலசத் தீர்த்தத்திற்கும்" எவ்வளவு மகிமை என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு. வைசம்பாயனர் ஒரு ரிஷி! உபாசனை பலம் மிக்கவர். வேத மந்திரங்களில் துணை கொண்டு ஓமம் நடத்தி இத்தகைய சக்தியைக் கலசத்திற்கு காட்டினார். அவரது சீடர் யக்ஞவல்கியரும் ரிஷி! மந்திர உபாசனையில் வல்லமை பெற்றிருந்தார். இந்தச் சம்பவம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் என்றோ எப்போதோ நடந்தது.

### அன்னையின் அவதார காலத்தே...

அன்னை ஆதிபராசக்தியின் அவதார காலத்தே எளிய தொண்டர்களைக் கொண்டு, தமிழ் மந்திரங்களுக்குச் சக்தி கொடுத்து, அவர்களை வேள்வி செய்ய வைத்து, இக் கலச தீர்த்தத்தின் மகத்துவத்தைப் பலரும் புரிந்து கொள்ளச் செய்தாள். வேள்விப் பூசையில் மகத்துவத்தையும் புரிந்து கொள்ளச் செய்தாள் அவற்றுள் சில வருமாறு:

### கலசத்திலிருந்து முளைத்த தென்னங் குருத்து:

பவானிசாகர் அருகே தொட்டம்பாளையம் வார வழிபட்டு மன்றத்திலிருந்து சக்தி மாலை இதழுக்கு எழுதி அனுப்பியிருந்தார்கள். செவ்வாடைத் தொண்டர் ஒருவர் மன்றத்தில் வைத்திருந்த ஒரு செம்பை எடுத்து, அதில் தேங்காய் வைத்துக் கலசம் ஆக்கினார். அந்தக் கலசத்தை அன்னையின் படத்திற்கு முன் வைத்து ஆராதனை நடத்தி வந்தனர். நாளடைவில் அந்தக் கலசத்தின் தேங்காயிலிருந்து குருத்து வெளிவந்தது. தென்னை வளர்ப்பது எவ்வளவு சிரமம் என்பது விவரம் அறிந்தவர்களுக்குத் தெரியும்.

இத்தனை அடி நீளம் இத்தனை அடி அகலம், இத்தனை அடி ஆழம் என்று அளவிட்டுக் குழி வெட்ட வேண்டும். மணல் பரப்ப வேண்டும். விடாமல் தண்ணீர் ஊற்றி வர வேண்டும். அவ்வப் போது உரம் வைக்க வேண்டும். இப்படியெல்லாம் கண்ணும் கருத்துமாக வளர்த்தால்தான் தென்னை வளரும்.

ஒரு கலச செம்பின் மேல் வைத்த தேங்காயிலிருந்து குருத்து வெளியே வருவது எப்படி? அன்னையின் அருளால்தானே? அதற்கு மந்திர உரு ஏற்றியதால்தானே...? இதை வைத்து யக்ஞவல்கியர் நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்க வேண்டும். யாகத்திற்கும் கலசத்திற்கும், மந்திர உபாசனைக்கும் எவ்வளவு பலம் இருக்கிறது என்பதை உணர வேண்டும்.

✍வேம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

**02.08.2016 முதல் 02.09.2017 வரை குரு பெயர்ச்சி பலன்கள்**

சுக்கிரன் ஆதிக்கம் பெற்று திறமையை வளர்த்துக் கொள்ளும் ரிஷப ராசி வாசகர்களே! உங்களின் ராசிக்கு நட்பு கிரகமான குரு பகவான் உங்களின் ராசியை பார்வை இடுவதும் உங்களின் ராசிக்கு ஒன்பதாம் இடமான பாக்கிய ஸ்தானத்தையும் லாபஸ்தானத்தையும் பார்வை இடுவதும் ராசிக்கு ஐந்தாமிடத்தில் அமருவதும் இதுவரை இருந்து வந்த பல்வேறு பிரச்சினைகளைக்கு நல்ல மேன்மையையும், திறமையான ஈடுபாடுகளும் உண்டாகும்.

சொந்த தொழில் செய்து வருபவருக்கு இனி நல்ல வியாபார விருத்தியும், கொடுத்த இடத்தில் பணம் திரும்பி வரும் வாய்ப்புகளும் அமையும். உடல் நலனில் ஆரோக்கியமும் நோயாளிகளுக்கு மருத்துவ வசதி பெற்று விரைவில் குணம் அடையும் வாய்ப்பும் அமையும். சர்க்கரை நோய்க்கு உரிய கிரகம் குரு என்பதால் அதற்கு தகுந்த சிகிச்சையை பெற்று ஆரோக்கியம் பெறுவீர்கள். உங்களின் ராசிக்கு ஐந்தாமிடத்தில் குரு அமருவது உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலப்படும். தீயவர்களின் பழக்கங்களை துண்டித்து கொள்வீர்கள். மனத்தில் என்ன தோன்றுமோ அதை உடனே செய்து வருவீர்கள். சிலருக்கு வங்கி கடன் பெறும் வாய்ப்புகள் அமையும்.

உங்களின் புத்திரருக்கு புதிய தொழில் வாய்ப்பு வேலை வாய்ப்புகள் அமையும். உங்களை பிரிந்து வெளியூரில் வேலை பார்க்கும் வாய்ப்புகள் உருவாகும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு பதவி உயர்வும், உயர்கல்வி வாய்ப்பும் கிடைக்கும். நேரில் வந்து உறவினர்களும், நண்பர்களும் உங்களை மகிழ்விப்பார்கள். சிலருக்கு புனித யாத்திரை சென்று புண்ணிய் தீர்த்தங்கள் தெய்வ தரிசனம் செய்யும் வாய்ப்புகள் அமையும். ஆன்மீக குருக்கள் மகான்கள் தரிசனம் மனதிற்கு ஆறுதலையும், மன ஆற்றலையும் தந்து வெற்றி பாதைக்கு அழைத்து செல்லும். தங்க ஆபரணங்கள் வங்கி சேமிப்பு போன்ற வகையில் சேர்க்கைகள் அமையும்.

உங்களின் லாபஸ்தானத்தை குரு பார்வை இடுவது தொழிலில் கூடுதல் லாபம் பெறுவதுடன் சேமிப்பு மூலம் ஆதாயம் பெறுவீர்கள். வாரா கடன் வசூலாகும். தினமும் பணப்புழக்கம் இருப்பதுடன் உங்களின் , விருப்பத்தை நிறைவேற்றிக் கொள் ளும் வாய்ப்புகளை பெறுவீர்கள். உங்களின் லாபாதிபதியே லாபஸ்தானத்தை பார்வை இடுவது உங்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய பலமாக அமையும். மீனவர், கடல் சார்ந்த தொழிலில் ஈடுபாடு கொள்பவர்களுக்கு கூடுதல் ஆதாயம் கிடைக்கும்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு துலாம் ராசிக்கு அதிகாரமாக செல்லும் காலம் சில காரிய தடைகள் இருந்தாலும் பெரிய பாதிப்புகள் எதுவும் நிகழாது. மனதில் தெளிவாகவும் செயல் நேர்மையும் கொண்டு செயல்படுவீர்கள். உங்களின் எண்ணம் போலவே வாழ்வு அமையும். கலைத்துறையினர் வாழ்வில் எழுச்சியும் புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். அரசியல்வாதிகளின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும்.

**உங்களின் ராசி குரு பார்வை பெறுவதால் பரிகாரம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றாலும் நவக்கிரக குருவையும் தட்சிணா மூர்த்தியை தொடர்ந்து வணங்கி வர வாழ்வில் பலதரப்பட்ட வளர்ச்சியை பெறுவதுடன் பொருளாதார மேன்மையை அடைவீர்கள்.**



## உதவும் உள்ளத்தை இறைவன் நேசிக்கிறான்!

மற்றவர் துன்பத்தில் மகிழ்ச்சிகொள்வது ஒரு வினோதமான நோய். இதில் சிக்கிய யாரும் வாழ்ந்ததில்லை. அத்தகையவர்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே இருளுக்கு இழுத்துச் செல்கிறார்கள். அன்பும் அறமும் கொண்டதாக மனித வாழ்க்கை அமைய வேண்டும். துன்பப்படுபவர்களுக்கு உதவும் நல்ல உள்ளங்களை இறைவன் நேசிக்கவும், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**




தனக்கென சில வரைமுறைகளை வகுத்து கொண்டு வாழும் ரிஷப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சனி செவ்வாய் வக்கிர பார்வையால் கூட்டு தொழிலில் முன் னேற்றம் அடைவீர்கள். மறைமுகமான வருமான கிடைக்கும். அரசாங்க உதவிகள் கிடைக்கும்.

**பணியாளர்களுக்கு**

தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராட வும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணவும் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். எதிர்காலத்தில் வளமான வாழ்வு அமையும். சிறந்த தொழில் சங்க நிர்வாகிகளால் உங்களின் நிலை உயரும் பொருளாதாரம் சிறக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது கருத்துகளின் உங்களின் நிலை சீராக அமையும். எல்லோருடனும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்து எல்லோரின் நலனில் ஒத்துழைப்பு தருவதுடன் இணைந்து செயல்படுவீர்கள். சிலருக்கு பொருளாதார மேன்மை சிறப்பாக அமையும்.



**வியாபாரிகளுக்கு**

தொழிலில் முன்னைவிட சிறப் பாக செயல்படுவீர்கள். அடைக்கப் பட்ட (பதப்படுத்தப்பட்ட) பொருட்களின் வியாபாரம் வளர்ச்சியை தரும். தொழிலில் மாற்றங்களையும் வாடிக்கையாளர்களின் எதிர் பார்ப்புக்கு தகுந்தபடி சிறப்பாக தொழில் நுட்ப முறையில் செயல்படுவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் நினைத்ததை சாதித்து கொள் வீர்கள். உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. விருப்பமான கலை பணிகளில் சிறந்து விளங்குவீர்கள். உங்களை ஏமாற்றுபவரை தக்க நேரத்தில் பதிலடி கொடுப்பீர்கள். பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் நலனுக்கு உறுதியுடன் ஒத்துழைப் புகள் தருவீர்கள். சுயதொழிலில் ஏற்றம் பெறு வீர்கள். கருத்துக்கள் வெளிப்படுத்தி சிறப்பாக செயல்படுவீர்கள். பண புழக்கம் இருக்கும்.

**மாணவர்களுக்கு**

கல்வியின் சிறந்து விளங்குவீர்கள். வங்கி கணக்கு தடயவியல், மருத்துவ கல்வியில் உயர்ந்த நிலையை அடைவீர்கள். பொருளாதார கல்வி சிறப்பாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

17.07.2016 ஞாயிறு பகல் 02.43 முதல் 19.07.2016 செவ்வாய் இரவு 11.19 மணி வரையும்

13.08.2016 சனி இரவு 10.09 முதல் 16.08.2016 செவ்வாய் காலை 07.00 மணி வரையும்

**நட்சத்திர பலன்கள்**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்**

அரசாங்க வேலை தேடுபவர்களுக்கு வாய்ப்பு கள் அமையும். சுயதொழிலுக்கு வங்கி கடன் வசதி யையும், பயிற்சியை பெற நன்மைகள் அமையும்.

**ரோஹிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

மனதில் பட்டதை செயல்படுத்தும் பக்குவத்தை அடைவீர்கள். எதிலும் சுறுசுறுப்பாக செயல்பட்டு விரைவில் முடித்து கொடுப்பீர்கள். உடல் நலம் சீராக இருக்கும்.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

மனை கட்டும் வாய்ப்பும், காணி நிலத்தில் விவசாயம் செய்யும் நிலை யும் அமையும். சகோதரர்களின் சமா தான பேச்சு நன்மையாக அமையும்.

## தட்சிணாமூர்த்தி மந்திரம்

**தனுசு ராசியில் பிறந்தவர்கள் வியாழக்கிழமை அன்று தட்சிணா மூர்த்தி கடவுளுக்கு அர்ச்சனை செய்து கீழ்க்கண்ட மந்திரத்தை பாரா யணம் செய்து வந்தால் சகல நன்மை கள் உண்டாகும். "ஓம் ஓம் க்லீம் பிரஹ ஸ்பதயே நம"**

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, கருநீலம், மஞ்சள்

**அதிர்ஷ்ட திசைகள்:** தெற்கு, தென்மேற்கு, மேற்கு


**அதிர்ஷ்ட கிழமைகள் :** வெள்ளி, புதன், திங்கள்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளிக்கிழமை அம்மன் வழிபாடும், செவ்வாய்க்கிழமை சுப்பிரமணியரும், ஆஞ்சநேயர் வழிபாடும் உங்களின் வளமான வாழ்க்கை உறு துணையாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அபிதா மணாளன்

இருந்திடவும், தம்முடைய தாலி பாக்கியம் நிலைத்திடவும் இல்லத்தில் செல்வம் செழித்திடவும் வரலட்சுமி விரதத்தை பெரும்பாலான பெண்கள் தவறாமல் அனுஷ்டிக்கின்றார்கள். இந்த விரதம் மங்கலகரமான ஒன்றாகும். விரதத்தை கடைப்பிடிக்கும் அனைவருக்கும் மன நிம்மதியையும் இம்மையிலும் மறுமையிலும் நன்மையை தந்திடும் இனிய விரதம் ஆகும் இது.

வரலட்சுமி விரதத்தை தம்முடைய இல்லங்களில் சற்றே சாஸ்திர பூர்வமாக அனுஷ்டிக்க விரும்பும் பக்தர்கள், விரதமிருந்து பூஜையை செய்ய விரும்பினால், முதலில் விக்னேஷ்வர

## வாழ்வில் வளம் சேர்க்கும்
# வரலட்சுமி விரதம்!

மனிதர்களுக்கு வாழ்க்கைக்கு தேவையான எல்லாவித செல்வங்களையும் வளங்களையும் தந்து வாழ வைப்பது லட்சுமி தேவியே ஆவாள். செல்வ வளத்திற்கு அதிபதியான திருமகளை வாழ்வில் உயர்ந்திட எண்ணியிருக்கும் எல்லோரும் பூஜிக்க வேண்டியது அவசியமே. புராண காலங்கள் தொட்டே உலகின் பல பகுதிகளிலும் திருமகள் வழிபாடு இருந்து வந்துள்ளது. இந்தியாவின் வடபகுதிகளில் தீபாவளி திருநாளன்று லட்சுமி பூஜையை நடத்துகின்றார்கள்.

ஆடி மாத கடைசியில் அல்லது ஆவணி முதல் வாரத்தில் பௌர்ணமிக்கு முன்பு வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று லட்சுமியை முறையாய் வழிபடுகின்ற பூஜைக்கு வரலட்சுமி பூஜை என்று பெயர். அன்றைய நாளில் இல்லத்தரசிகள் வீடுகளை சுத்தம் செய்து, அலங்கரித்து, கலசம் வைத்து லட்சுமி திதி சொல்லி அனைத்து வளங்களும் எல்லோரும் பெற்றிடல் வேண்டும் என்று மனதில் நினைந்து பூஜை மேற்கொள்வார்கள். வரலட்சுமி விரதத்தை அதற்குண்டான முறைப்படி கடைப்பிடிப்பவர்கள் வாழ்க்கைக்கு தேவையான சகல சௌபாக்கியங்களையும் அடைவார்கள் என பத்ம புராணம் தெரிவிக்கின்றது.

குடும்ப உறுப்பினர்களும் கணவனும் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் செல்வ வளத்தோடும்

பூஜை செய்து அதற்கு அடுத்தாற்போல் சங்கல்பம், கலச பூஜை, பிராணப்ரதிஷ்டை, சோடபச்சாரம், அங்க பூஜை, லட்சுமி அஸ்டோத்திரம், தோரக் ரந்தி பூஜை, பிரார்த்தனை, ஆரத்தி என்று விரிவாகவும் முறையாகவும் செய்ய வேண்டும். எல்லோராலும் மிக விரிவாக செய்ய இயலாவிட்டாலும், ஈடுபாட்டோடு தெரிந்த பாடல்களை பாடி மகாலட்சுமி அஸ்டோத்திரம் சொல்லி, பூக்களால் அர்ச்சனை செய்து, நிவேதனம் செய்து, நோன்பு சரட்டினை கையில் கட்டி நிவேதனத்தை எல்லோருக்கும் கொடுத்து, வயதான சுமங்கலி பெண்களை வணங்கி தானங்கள் செய்தும் இந்த விரத பூஜையை நிறைவு செய்யலாம்.

**பூஜைக்கு தேவையான பொருட்கள்:** மஞ்சள் பொடி (பூஜையின் போது பிள்ளையார் உருவம் செய்திட), நுனிவாழை இலை, அரிசி, தேங்காய், எலுமிச்சம் பழம், குங்குமம், சந்தனம், புஷ்ப வகைகள், வெற்றிலை, பாக்கு, பழம், கற்பூரம், ஊதுபத்தி, சாம்பிராணி, அட்சதை, வஸ்திரம், மஞ்சள் சரடுகள், பஞ்சாமிர்தம், குத்துவிளக்கு, திரிநூல், தீப்பெட்டி, தாம்பாளம், பஞ்சபாத்திரம், உத்தரிணி, கிண்ணம், கற்பூரத்தட்டு, தூபக்கால், தீபக்கால் மற்றும் பூஜைக்கான மணி, நிவேதன பொருட்களாக பொங்கல், பாயசம், அப்பம், வடை, கொழுக்கட்டை, லட்டு, தயிர், பசும்பால், நெய், தேன் மற்றும் கற்கண்டு முதலியவற்றை வைத்துக் கொள்ளலாம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விஷ்ணு பகவானின் அந்தரங்க தாசராய் விளங்கி சகல கைங்கரியங்களையும் அவருக்காக செய்திடும் ஸ்ரீ கருட பகவானின் பெருமைகள் சொல்லி முடியாதவையாகும். முக்கியமான தெய்வ கைங்கரியங்கள் நடைபெறுவதற்கு முன்பாக கருடன் வட்டமிட்டாலும் கருடன் ஒலி எழுப்பினாலும் மிகவும் விசேடமாக கருதப்படுகின்றது. ஸ்ரீ கருட பகவான் ஆடி மாதம் சுக்ல பட்சத்தில் சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தவர் ஆவார். ஸ்ரீ கருட பகவானின் அம்சமாக சொல்லப்படுகின்ற பெரியாழ்வாரும் சுவாதி நட் சத்திரத்தில் அவதரித்தார். அதர்ம சிந்தனையை அழிக்க அவதரித்த ஸ்ரீ நரசிம்மரும் சுவாதி நட்சத்திரத்தில் தான் தோன்றினார். இதன் காரணமாகவே சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் குழந்தைகள் புகுந்த வீட்டிற்குச் சென்றால் அங்கு லட்சுமி கடாட்சம் நிறைந்திருக்கும் என்று நம்பப்படுகின்றது.



# துதிப்போர்க்கு ஞானமும் சக்தியும் நல்கிடும் ஸ்ரீ கருடாழ்வார்!

பெருமாளின் வெற்றியை காட்டுகின்ற கொடியில் பட்டொளி வீசி பறக்கின்றவரும் இந்த கருட பகவானே. இவரை துதிப்பவர்களுக்கு ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீரியம், தேஜஸ் போன்றவற்றை வாரி வழங்குபவராயும் நாள் பட்ட கர்ம வினைகளுக்கு அருமருந்தாகவும் விளங்குகின்றார். கடலூர் மாவட்டத்தில் திருவந்திபுரம் சுவாமி வேதாந்த தேசிகருக்கு ஹயகிரீவர் மூர்த்தியை அருளியது மட்டுமல்லாமல் பல்வேறு வடிவங்களை எடுத்து கொண்டு பெருமாளுக்கு பல்வேறு தொண்டுகளை புரிபுவரும் கருடாழ்வாரே. ஆபத்துக் காலங்களை கருடாழ்வாரை நினைந்து வேண்டிக் கொண்டால் துன்பங்களை போக்குவதோடு மட்டுமல்லாமல் விபத்தால் ஏற்படும் மரண பயத்தையும் போக்குவார் கருடாழ்வார். எம்பெருமானின் திருமேனிக்கு ஏற்றவாறு இனிமையான இதமான காற்றைத் தரும் சாமரமாக கருடன் இருக்கின்றார் என வேதாந்த தேசிகர் தெரிவிக்கின்றார். கண்ணபிரான் வேறு வேலையாக வெளியில் சென்று விட்ட போது துவாராகபுரியை காத்தருளியவரும் கருடாழ்வார் தான். கருட பகவான் திருப்பதியில், ஸ்ரீ வைகுண்டத்தில் எட்டு விமானங்களில் ஒன்றான கிரிடாஜலத்தை கொண்டு வந்து அதில் திருமாலை எழுந்தருளச் செய்தார். இதுவே திருமலை திருப்பதியில் தற்போது பெருமாள் எழுந்தருளிய ஸ்ரீ "ஆனந்த நிலைய" விமானமாகும். திருப்பதியில் உள்ள ஏழு மலைகளில் ஒன்றிற்கு கருடாச்சலம் என்ற பெயர் விளங்குகின்றது. பக்தர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நால்வகை பலன்களையும் ஒரு சேர அருளிப்பவர் கருட பகவானே. மனம் உருகி வேண்டிக் கொண்டால் நாம் நினைத்தவற்றை அற்புதமான முறையில் நமக்காக சாதித்து கொடுப்பவரும் இவரே. கருட பகவானின் திருவருள் கிடைக்கப் பெற்றால் நல்ல ஞாபகசக்தி, பேச்சு சாதுரியம் முதலியவை கிட்டிடும் என "ஈஸ்வரர் சம்ஹிதை" தெரிவிக்கின்றது.

✦ எஸ். ஆகாஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத்கீதையில் கிருஷ்ணரால் போற்றப்படும்

# மாரிசி மகரிஷி!



**தூய்மையான பக்தியாலும், வலிமையான தவத்தாலும் இந்த உலகில் அடைய முடியாதது ஒன்றுமில்லை என்று ஜகத்குரு ஆதிசங்கரர் உறுதியாக தெரிவித்திருப்பதற்கிணங்க, புராண காலங்களில் எண்ணற்ற மகரிஷிகள் தமது மாறாத இறை பக்தியாலும் குறையாத தவத்தாலும் செயற்கரிய சாதனைகள் பலவற்றையும் சாதித்து உலக ஆன்மீக சரித்திரத்தில் அழியா இடம் பெற்றிருக்கின்றார்கள்.**

நல்ல சிந்தனை, தூய்மையான பக்தி, வாழ்வில் உறுதிப்பாடு இவற்றால் அத்திரி மகரிஷியின் தர்ம பத்தினியான அனுசுயா தேவி தானும் ஒரு ரிஷியாக முப்பெரும் தேவர்களையும் சந்தர்ப்பத்தை சமாளிக்கும் பொருட்டு குழந்தைகளாய் மாற்றி தொட்டிலில் இட்டு விட்டார், தன் கணவனின் உயிரை காப்பாற்ற வேண்டுமென்பதற்காக சூரியனையே உதிக்காமல் செய்தார் நளாயணி தேவி, தன் கணவனின் உயிரை காப்பாற்றிக் கொள்ள பதிவிரதா தேவியான சாவித்திரி எமனிடம் வாதாடி வென்றார் என்றெல்லாம் புராண வரலாறுகள் தெரிவிக்கின்றன.

இதன் மூலமாக அறிந்து கொள்வது என்ன வென்றால் ரிஷிகளோடு சேர்ந்து அல்லது பக்தியில் திளைத்த பெண்டிரும் தெய்வீக சக்திகளை பெற்று உலகில் பிறரால் சாதிக்க முடியாதவற்றையெல்லாம் சாதித்திருக்கிறார்கள். இதற்கு அடிப்படை காரணம் இறைவனின் மீதுகொண்ட மாறாத பக்தியும் தன் மீதே கொண்ட தன்னம்பிக்கையும் தான். இவ்வாறே பிரஜாபதிகளின் ஒருவரான மாரிசி மகரிஷியின் இறை பக்தியிலும் தவ வலிமையிலும் தலை சிறந்து விளங்கினார். முதல் மன்மந்த்ராவைச் சார்ந்த சப்த மகரிஷிகளாகவும் இவர் விளங்கினார்.

மாரிசி மகரிஷியின் மனைவி தர்மவ்ரத்தா என்றும் அவருடைய மகன் காசியப்பர் என்பதும் அவர் பற்றியதான புராணங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளன. இந்த மகரிஷியின் பெயரிலேயே ஒரு மிகச் சிறந்த யோகப் பயிற்சியும் அவருடைய காலத்தில் இருந்து வந்துள்ளது. மார்சி ஆசனா என்பது அந்த யோகாசனாவின் பெயராகும். இது நான்கு நிலைகளை கொண்டதாகும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகாசனத்தை செய்வதன் மூலமாக உடலில் சக்தி பல பங்குகளாய் அதிகப் படுத்தப்படுகின்றது; வயிற்றில் பாகங்கள் சரி செய்யப்பட்டு இடுப்பைச் சுற்றியுள்ள கூடுதல் கொழுப்பு குறைக்கப் படுகின்றது.

புராண வரலாறுகளில் விவரிக்கப்பட்டுள்ள கீழ்கண்ட நிகழ்வானது மாரிசி மகரிஷியின் தவ வலிமையையும் பெருமையையும் உணர்த்துவதாக இருக்கின்றது.

ஒரு முறை மாரிசி மகரிஷி அடர்ந்த காட்டுக் குள் விறகு கட்டைகளையும் மலர்களையும் சேகரிப் பதற்காக பிரவேசித்தார். பின்பு வேலைகள் முடிந்த பிறகு மிகவும் சோர்வுடன் தனது இருப்பிடத்திற்கு திரும்பினார். திரும்பியவுடன் தன் மனைவியை அழைத்து தன் பாதங்களை கழுவிடுமாறு கட்டளை யிட்டார்.

அவ்வாறே அவரின் மனைவி தர்மவ்ரதா மகரிஷியின் கால்களை கழுவிட ஆரம்பித்தார். அச்சமயத்தில் மாரிசியின் தந்தையான பிரம்மதேவர் அந்த இடத்திற்கு வருகை தரவே, மகரிஷியின் மனைவியான தர்ம்வ்ரதா கணவரின் பாதங்களை சுத்தம் செய்வதைத் தொடர்வதா அல்லது தன் மாம னாராகிய பிரம்மதேவரை வரவேற்பதா என்னும் குழப்பத்திற்கு ஆளாகி கடைசியில் பிரம்மதேவரை வரவேற்க சென்று விட்டார்.

இதனால் கோபம் கொண்ட மாரிசி மகரிஷி தன் மனைவியை கல்லாய் சமைந்திட சாபம் இட்டு விட்டார். கணவரின் இந்த சாபத்தினால் பெரிதும் வருந்திய தர்மவ்ரதா, இது தனக்கு கிடைத்த தேவை யற்ற தண்டனை என்றே கருதினார். இதனை தொடர்ந்து தர்மவ்ரதா விஷ்ணுவை நோக்கி கடு மையான தவம் இருந்தார். தவத்தை மெச்சிய விஷ்ணு என்ன வரம் வேண்டும் என கேட்ட போது தன்னுடைய சாபம் நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் துரதிஷ்டவசமாக மகரிஷி மாரிசியின் தவ வலிமையின் மேன்மையை முன்னிட்டு விஷ்ணுவால் தர்மவ்ரதாவின் சாபத் தினை நீக்கியருள முடியவில்லை. அதற்கு பதிலாக தர்மவ்ரதாவை அனைவராலும் போற்றப்படுகின்ற புனித கல்லாய் மாற்றித்தந்தார் விஷ்ணு.

மேலும் மகரிஷி மாரிசியைப் பற்றிய குறிப் பானது பகவத் கீதையிலும் இடம் பெற்றுள்ளது என்று பார்க்குமிடத்து, மாரிசி மகரிஷியின் பெரு மைகள் உணரப்படுகின்றன. பகவத்கீதையில் கிருஷ்ண பகவான் ஆதித்தியர் களில் நான் விஷ்ணு வாகவும், ஒளி மிகுந்தவற்றில் உலக ஜோதியாய் பரிணமிக்கும் சூரியனாகவும், மகிமைமிக்க ரிஷி களில் நான் மாரிசியாகவும், மின்னுகின்ற நட்சத்தி ரங்களில் நான் சந்திரனாகவும் இருக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

✍ஒத்தக்கடை ராமன்



# தனியொருவருக்கான உணவு

**தனியொருவருக்காக ஜகத்தை (உலகத்தை) அழிப்பது பாரதியின் நோக்கமல்ல. "எல்லோருக்கும் உணவு கிடைக்க வேண்டும்" என்ற தமது நோக் கத்தை அவர் அவ்விதம் தெரிவித்திருக்கிறார்.**

சுவாமி விவேகானந்தர் இவ்விதம் கூறு கிறார்

எனது நாட்டில் ஒரே ஒரு நாய் உணவில் லாமல் பட்டினி இருந்தாலும், அதற்கு உணவு கிடைக்க வழி காண்பது தான் என் மதமாகும்.

நமது நாட்டு ஏழைகள் உணவில்லாமல் பட்டினி கிடப்பதைப் பார்க்கும்போது பூஜை முதலியவற்றையும், கல்வியையும் தூர எறிந்து விட்டு, தவத்தாலும் புலனடக் கத்தாலும் வந்த ஆற்றலால் பணக்காரர் களின் மனத்தைத் திருப்பி, பணம் திரட்டி ஊர் ஊராகச் சென்று ஏழைகளுக்குத் தொண்டு செய்வதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டா கிறது.

"நான் ஒரு சோஷலிஸ்டு, சோஷலிஸத் திட்டம் பரிபூரணமானது என்ற கருத்தில் அதை நான் ஆதரிக்கவில்லை. உணவே இல்லாமல் இருப்பதைவிட, அரைவயிறு உணவு சிறந்தது என்பது என் கருத்தாகும்.

எல்லோரும் எல்லாமும் பெற வேண் டும் என்ற உண்மையான விருப்பம் எல்லா மனதிலும் இயற்கையாக இருக்க வேண்டும். அப்போது தான் ஏழையின் வறுமை உண்மை யிலேயே நீங்கும்.


✦சுவாமி கமலாத்மானந்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யமுனை என்னும் புனித நதி



உத்தர்கண்ட மாநிலத்தில் 4,421 மீற்றர் உயரத்தில் சம்பாஸர் க்ளேசியரில் யமுனை ஆறு உற்பத்தியாகிறது. இந்து புராணங்களில் இந்தப் புனித யமுனை சிறப் பாகக் குறிப்பிடப்படுகிறது. சிலர் உறை பனிக்கட்டி ஏரியான சப்தரிஷிகுண்டம் என்னுமிடத்தை இதன் உற்பத்திஸ்தலம் என்கின்றனர். 3,235 மீற்றர் உயரத்தில் இந்த இடத்தில் யமுனோத்ரி என்ற ஒரு புனிதக் கோயில் உள்ளது. யமுனைக்கடவுள் குடிகொண்டுள்ள இந்தக் கோயில் நவம்பர் முதல் மே வரை மூடப்படுகிறது. ஹனுமான் சட்டியில் யமுனையோடு ஹனுமான் கங்கை இணைகிறது. ஒதுக்குப்புறமான இந்த மலைப்பகுதி அஹித்முனிவரின் வாசஸ்தலம் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன.

ஸ்ரீ கிருஷ்ண பிரானின் துணைவி என்று யமுனை சொல்லப்படுகிறாள். கிருஷ்ணரின் தெய்வீகவாசஸ்தலமான "கோகுலம்" யமுனை யின் வீடாகும். ஸ்ரீ கிருஷ்ணனைச் சுற்றி வலம் வந்த பிறகே, யமுனை குன்றிலிருந்து இறங்கி காண்ட வனம் என்ற இடத்தில் சமவெளியை அடைகிறாள். அந்த இடத்தில்தான் டெல்லி நகரம் உருவாக்கப்பெற்றுள்ளது.

சூரியக் கடவுளின் மகன் யமன் என்றும் மகள் யமுனை என்றும் நம்பப்படுகிறது. அதனால் யமுனையில் குளித்தால் மரண பயம் இருக்காது என்று மக்கள் கருதுகின்றனர்.

கங்கை யமுனையோடு, அந்தர் வாஸினி யான சரஸ்வதியும் இணையும் இடம் புனித திரி வேணி சங்கமமான அலகாபாத் ஆகும். மகாபா ரதத்தோடும் கிருஷ்ணனின் லீலை களோடும் யமுனை ஆறுக்கு நிறைய தொடர்பு உண்டு. வசுதேவர் குழந்தை கிருஷ்ணனை சிறையிலி ருந்து தூக்கிச் சென்றபோது யமுனை விலகி வழிவிட்டது. அப்போது கிருஷ்ணர் நீரில் விழு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். அவர் காலடி பட்டவுடன் யமுனை புனிதமடைகிறாள். மேலும் கிருஷ்ணன் தன் நண்பர்களோடும் கோபிகைகளோடும் செய்த குறும்பெல்லாம் இந்த யமுனைக்கரையில் நடைபெற்றதாகவே சொல்லப்படுகிறது.



இமயமலையில் யமுனோத்ரியில் உற்பத்தியாகி வட இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலம் வழியாக ஆரம்பிக்கும் இதன் பயணம் பிருந்தாவனம், மதுரா நோக்கிச் செய்கிறது. பின்னர் தெற்கு, தென்கிழக்கில் திரும்பி, தான் செல்லும் இடங்களை வளப்படுத்துகிறாள். பிரயாகை அல்லது அலகாபாத்தை அடைகிறாள். அங்கு கங்கையுடன் இணைந்து கொள்கிறாள். பின்னர் இருவருமாக இணைந்து ஷீரசாகரம் வரை செல்கிறார்கள்.

கடலை அடைவதற்கு முன்பு கங்கையும் யமுனையும் ஒருவரையொருவர் வாழ்த்திக் கொள்கின் றனர். கிருஷ்ண பிரானின் உத்தரவுப்படி கங்கை பாதாள உலகிற்குச் செல்கிறாள். கிருஷ்ண பிரானின் இடது பக்கத்தில் தோன்றிய யமுனை திரும்பவும் மேலே சென்று கிருஷ்ணனின் இருப்பிடத்தை அடைய விரும்புகிறாள். மலைச்சிகரத் தில் ஏறி வான் வழியாகச் சென்று கிருஷ்ணரின் இருப்பிடத்தை அடைவதாகவும் கதைகள் உண்டு.

**உற்பத்திஸ்தலம் - யமுனோத்ரி**

**நீளம் - 1,370 கி.மீ.**

**பாயும் இடங்கள் - உத்தராஞ்சல், உத்தரப் பிரதேசம், ஹரியானா, டெல்லி**

**உப நதிகள் - பேட்வா, சிந்த், கென்**


## மன உறுதி உள்ளவர்கள் ஆசைகளால் அல்லல் படுவதில்லை!

பாவம் செய்யாமல் இருப்பதற்கு ஒரே வழி ஆசையை அழிப்பதுதான். உலக ஆசைகளிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் அருள் தேவை. கடல் அலைகள் மோதினாலும் கற்பாறை அசையாமல் இருக்கும். அது போல், மனஉறுதி கொண்டவர்கள் ஆசைகளால் அலைக்கழிக்கப்படுவதில்லை.

கீழ் இமயமலைப் பகுதியில் முஸோரி மலைத் தொடரில் பந்தர் புஞ்ஜ் சிகரத்திற்கு அருகில் உத்தரகாசி மாவட்டத்தில் யமுனோத்ரி க்ளேசியர் உள்ளது. மிக அழகிய மலைச் சிகரங்கள் வழியாக வரும் இந்த ஆற்றின் கரையில் அழகிய இயற்கைக் காட்சிகள் கண்களைக் கவருபவை. இந்த யமுனோத்ரி கோவிலை ஜெய்பூர் மகாராணி குலாரியா 19ஆம் நூற் றாண்டின் கடைசியில் கட்டி னார். உருவச்சிலைகள் மட்டும் இருக்க கோயில் 1923இல் அழிந்துபோனது.

பிறகு புதுப்பிக்கப்பட்ட கோயில் 1982 மறுமுறையும் சீர்குலைந்தது. யமுனோத்ரியிலுள்ள வெந்நீர் ஊற்றில் பிரசாதங்கள் சமைக்கப்படுகின்றன. முதல் 170 கி.மீ. தொலைவில் யமுனை ஆறோடு ரிஷிகங்கை, குந்தா, ஹனுமான் கங்கை, தோன்ஸ், கிரி ஆகிய உபநதிகள் இதனுடன் இணைகின்றன.

**டொக்டர் லக்ஷ்மி விஸ்வநாதன்**





ஜூலை சோதிடகேசரி 2016



# உடல் - உயிர் கூட்டியக்கமே! 'மனம்'

தான் பிறந்து வாழும் காலத்தில் செய்யும் செயல்களின் விளைவுப்பதிவு, தொழிலால் ஏற்பட்ட அறிவின் அனுபவம் மூளையில் பதிந்து. திரும்பத் திரும்ப அது மனதுக்கு ஆன்மாவுக்கு நினைவூட்டிச் செயலாக மாற்றும் விதியைப் "பிராரப்த கர்மம்" என்று கூறுகிறோம்.

### ஆகாமிய கர்மம்

புற மன இயக்கப் பதிவுகளால் புலன்களில் அமைவன. இச்சை வயப்பட்டுச் செய்யப்படும் செயல்களின் விளைவு. ஞான கர்மேந்திரியங்களில் பதிவாகி திரும்பவும் உயிருக்கு ஊக்கமூட்டி செயல்படுத்தும் பதிவுகள். மனம், மொழி, செயல், ஆற்றல்கள் உடல் கருவிகளாகிய புலன்கள் உறுப்புகள் இவற்றில் திரும்பவும் உயிருக்கு ஊக்ககூட்டி செயல்படுத்தும் விதியை "ஆகாயமிய கர்மம்" என்று வழங்குகிறோம்.

"மனம் மொழி செயல் மூன்றின் ஆற்றலுக்கும் விளைவுண்டு
மறைக்கவோ மறுக்கவோ மறப்பதோ முடியாது
மனம் களங்கம் அடையும் உடலில் நோய் பதிவாகும்
மனிதன் செயலைப் பாவம் எனச் சொன்னார் மதி மிக்கோர்."

மனிதனுக்குப் பாவப்பதிவுகள் என்று இருந்தால் எப்படி அதைக் கண்டுபிடிப்பது அதனுடைய அடையாளம் என்ன என்றால் "உள்ளத்திலே களங்கம் உடலிலே நோய்" இதுதான் பாவப் பதிவுகளுடைய அடையாளம். சில சமயம் உடலிலுள்ள நோய்கள் வெளியில் தெரியாமல் கூட இருக்கலாம் அதனால் என்னிடம் எந்தப் பாவமும் இல்லை, பதிவும் இல்லை, நோயும் இல்லை என்ற எண்ணிக் கொள்ள முடியாது.

ஒரு செடி வளர்கிறது, வளரும் போதே அதில் இலை, பூ, காய், பழம் பார்க்க முடியுமா என்றால்

# சைவ அசைவப் படையல்கள்!

மனிதன் தன் வாழ்வின் ஆதாரங்களை எதிலிருந்து பெறுகிறானோ அதைத் தன் கடவுளாக உணருகிறான். தனக்குக் கிடைப்பதையும் தான் மகிழ்ச்சி என்று எண்ணுவதையும் அந்தக் கடவுளுக்கு நன்றியுடன் படைக்கிறான். எனவே வெஜிடேரியன் சாமிக்கு வெஜிடேரியனையும், நன்வெஜிடேரியன் நன்வெஜிடேரியனையும் படைப்பது இயல்புதான். ஒரு சிலர்தான் தங்கள் நெடுநாளைய இருப்பை மறுபரிசீலனை செய்கிறார்கள். தன்னில் உள்ள தவறுகளை உணருகிறார்கள். ஒப்புக்கொள்கிறார்கள். மாற்றியமைக்க நினைக்கிறார்கள். அளவுக்கு மீறிய அகங்காரம் உடையவர்கள் தாங்கள் செய்வது தவறே அல்ல என்று நிலைநாட்டவே விரும்புவார்கள். அசைவ உணவு உலகின் வெகுஜன உணவு உலகு தொடங்கிய நாளாக அதுதான் பரந்துபட்டு ஆட்சி செலுத்துதுகிறது. ஏன் வேத பிராமணர்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. ஆனால், அதிலே எல்லாம் அடங்கி யிருக்கிறது. அந்தந்த பருவம் வரும் போது தான் அதன் இலை, பூ, காய் தெரியவரும். அதே போல நம் உடலிலுள்ள பழிச்செயல் பதிவுகள் கூட அந் தந்த காலத்திலே அந்தந்த வயதிலே, அந்தந்தத் தொடர்பு வரும் போது தான் அது துன்பமாகவோ, நன்மையாகவோ தெரிய வரும்.

பாவப் பதிவுடைய சின்னம்தான் இந்த உடலே என்றாலும் இத்தகைய வினைகளிலிருந்து விடு தலை பெற்று வினைத்தூய்மை, மனத்தூய்மை பெற்று இறைவனோடு கலக்க வேண்டும் என்ற சிந்தனை பெரும்பாலோருக்கு உள்ளது. அதற்கு மன உறுதியும் விழிப்பு நிலையும் பெறுவதற்கு ஒரு பயிற்சி முறையாகத் தேவை.

அதற்கு குண்டலினியோகமோ அல்லது வேறு ஒருதியானமுறையோபழகினால்தான்மனவலியும், விழிப்பு நிலையும், பொறுப்புணர்ச்சியும் ஏற்படும். அதன் பிறகு அன்றாட வாழ்வில் நமது மனம், மொழி செயல்களை நலம் தரும் முறையில் திட்டமிட்டவாறு செயல்படுத்தலாம். அதற்கு முன்பாக மனம் என்பது என்ன? அதன் செயல் என்ன? அதன் நிலைகள் எத்தனை? அதை இயக்க வைப்பது எது என்றும், இயங்கும் நிலைகளையும் நன்கு தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உடலும் உயிரும் ஒன்று கூடிய ஒரு கூட்டி யக்கத்தின் சிறப்பான வெளிப்பாடுதான் "மனம்". உடலில் உயிர் சுழன்று இயங்கும் போது அதி லிருந்து எழும் விரிவு அவையான, உடலில் இருப்பாக நிறைந்துள்ள சுத்த வெளியோடு கலக் கும்போது, அது சீவகாந்த ஆற்றலாக மாறுகிறது. அந்த சீவகாந்த ஆற்றலானது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்து தன் மாத்திரைகளாக எப்போதும் மாறிக் கொண்டே உள்ளது. அதன் மூலம் உடலியக்கங்கள் அனைத்தும் நடைபெற்ற வண்ணம் உள்ளன. உயிர் மையத்தில் அமைந் துள்ள இருப்பு நிலையானது, உடல் முழுவதும் நிறைந்துள்ள இருப்பு நிலையோடு கலந்து இருக் கிறது. உயிர் மையத்தில் அமைந்துள்ள இருப்பு நிலைதான் உயிர்களிடத்தில் அறிவாக இருக்கிறது. இந்த அறிவானது சீவகாந்தத்தின் மூலம் உடல் முழுவதும் விரிந்து சீவகாந்தத்தின் தன்மாற்ற நிகழ்ச்சிகளை உணர்ந்து கொள்கிறது.

இந்த உயிர் மையத்தில் அமைந்துள்ள இருப்பு நிலை அறிவாக அமைந்திருப்பதையும், அவ்வறிவு சீவகாந்தத்தின் மூலம் விரிவடைந்து தன்மாற்ற



நிகழ்ச்சிகளை உணரும் நிலையில் மனமாக இருக்கிறது. எனவே உயிரின் படர்க்கை நிலை ஆற்றலே மனம் என்று கூறுவதும் இதனால்தான். இந்த மனம்தான் புலன்கள் வாயிலாக உடலுக்கு அப்பால் உள்ள பிற பொருள்களோடு தொடர்பு கொள்ளும் நிலையில் முறையே உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு முடிவு என்ற நிலை எய்துகிறது.

இந்த நிலைகள் அனைத்தும் கூடிய ஒரு கருத்துதான் "மனம்" என்பதாகும்.

✍ யோகிராஜ் வேதாத்ரி மகரிஷி

அசைவம் உண்டதற்கு ஆதாரம் இருக்கிறது. மெல்ல மெல்ல பண்பு நலன்கள் வளர வளர, பிற உயிர்க்கு ஊறு செய்வது பிழை என்கிற ஒளியுணர்வு தோன்றியதால்தான் சைவ உணவே உருவானது. சைவ உணவு மனித இனப் பண்பாட்டின் வளர்ச்சி நிலை அதை இறை வழிபாட்டுடன் இணைத்துக்கொண்டவர்கள் வெகு சிலர். மாமிச உணவு நமக்கே கெடுதலானது என்று புரிந்து கொண்டுவிட்டால் நாம் அதனை விட்டுவிடுவோம். நாம் விட்டுவிட்டால் நமது



தெய்வத்திற்குப் படைப்பதையும் விட்டு விடுவோம். ஆனால் சைவ உணவுகளை வளர்த்து பயிரிடமுடியாத பகுதிகளும் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. அங்கு அசைவம் மட்டுமே சாத்தியம் என்பதையும் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

எனவே மாற்றம் நல்லது என்று உணரலாம். மாறாக நடப்பதைக் கிண்டலடித்து நம்மை ஏன் தாழ்த்திக் கொள்ள வேண்டும்?

✍ சுகிசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமாக்களில் ராஜா “கோவிந்த நாமமே”!



திருப்பாவையின் இருபத்தெட்டாவது பாசுரத்தில் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி “குறை வொன்று மில்லாத கோவிந்தா” என்று பாடிய போது கோவிந்த ராஜ பட்டாபிஷேகத்தில் எம்பெருமான் மனதில் இருந்த நெடுநாளைய குறை ஒன்று தீர்ந்து, அவன் குறைவொன்றுமில்லாதவனாக மாறினான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறாள் என்று தோன்றுகிறது.

என்ன குறை தெரியுமா?

ராமாவதாரத்தில் பட்டாபிஷேகம் நடந்தபோது “அஷ்ட வஸுக்கள் தேவேந்த்ரனுக்குப் பட்டா பிஷேகம் பண்ணின மாதிரி இருந்தது” என்று வால்மீகி வர்ணிக்கிறார். தன்னால் பாப விமோசனம் பெற்ற அஹல்யையிடம் தப்பாக நடந்து கொண்ட மஹாபாபியான இந்திரனது பட்டாபிஷேகத்தை தனது பட்டாபிஷேகத்தோடு ஒப்பிட்டு இந்திரனைத் தனக்கு உவமையாகச் சொன்னதில் மனக்குறை ஏற்பட்டதாம். இந்த இந்திரனையே ஜெயித்து இந்திரஜித் என்று பேர் பெற்றிருந்த மேகநாதனை லக்ஷ்மணன் கொல்ல, அவனுடைய தந்தை ராவணனை வென்ற தம்மை தமது எதிரியிடம் தோற்றுப்போன இந்திரனோடு ஒப்பிட்டது பெருங்குறையாக நெஞ்சில் நின்றுவிட்டதாம்.

இந்த குறை கிருஷ்ணாவதாரத்தில் ஸாக்ஷாத் அந்த இந்திரனே, “தோற்றேன்” என்று இவர் காலில் வந்து விழுந்து இவருக்கு கோவிந்த பட்டம் தந்து அபிஷேகம் பண்ணின போதுதான் தீர்ந்தது. ராம பட்டாபிஷேகத்தில் உண்டான குறை கோவிந்த பட்டாபிஷேகத்தினால்தான் தீர்ந்தது. இதைத்தான் ஆண்டாள் “குறை வொன்று மில்லாத கோவிந்தா” என்று சொன்னாளோ என்னவோ!

பூர்ணாவதாரம் என்று வர்ணிக்கப்படும் கிருஷ்ணாவதாரத்தில் குறையொன்றும் இருக்க நியாயம் இல்லை. அதனால்கூடச் சொல்லியிருக்கலாம். மஹாவிஷ்ணுவுக்குப் ப்ரீதியான நாமாக்கள் பன் னிரண்டில் “கோவிந்த” என்பது ஒன்று. அதிலும் மூன்றுமுறை ஆசமனம் செய்கிறபோது நாம் சொல்லும். அச்யுத அனந்த கோவிந்த என்ற மூன்று நாமாக்களில் கோவிந்த நாமா ஒன்று. இதையெல்லாம் விட ஜகத்குருவான ஆதிசங்கரர் மனிதனுக்குத் தத்துவ உபதேசங்கள், விவேக வைராக்யங்களைக் கூற வந்தபோது அவர் பாடிய “மோஹமுத்கரம்” என்று நூலில் ஒவ்வொரு சுலோகத்தின் இறுதியிலும் நாம் திரும்பத் திரும்பப் பாடும் “பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்” என்று அதனை மூன்று முறை ஆசார்யார் சொல்லிச் சொல்லி ஆனந்தப்பட்டிருக்கிறார். பின்னாளில் ஆண்டாளும் தனது திருப்பாவைப் பாசுரத்தில் மூன்று முறை கோவிந்த நாமாவைச் சொல்லியிருக்கிறாள்.

**“கூடாரைவெல்லி” என்று சிறப்பாக வைணவர்களால் கொண்டாடப்படும் மார்கழி 27ஆம் நாளில் பாடப்படும் 27ஆவது பாசுரத்தில் “கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா” என்கிறாள்.**

**அதற்கு அடுத்த பாசுரத்தில் “குறைவொன்று மில்லாத கோவிந்தா” என்கிறாள்.**

இருபத்தொன்பதாவது பாசுரத்தில்

“இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா” என்கிறாள்.

இந்த இரு அருளாளர்கள் வாயினின்றும் மும்முறை வெளிவந்த இந்த நாமம் ஹிந்து மரபில் மூன்று முறைத் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தவே என்பதற்கிணங்க சத்யச் சொல்லாக அறுதியிட்டு உறுதியாகக் கூறப்பட்டுள்ளதால் நாமாக்களின் ராஜா “கோவிந்த நாமமே”

ஆர்.பி.வி.எஸ்.மணியன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்முகி வருடம் ஆடி மாதத்துச் சுபதினங்கள்



**திருமணம், மாங்கல்யம் செய்ய, புது வாகனம் வாங்க, தொழில் துவங்க, சீமந்தம், கடன் வாங்க**

**இம்மாதம் கிரக ஆரம்பம், கிரக பிரவேசம், சாந்தி முகூர்த்தம், திருமணம், வாசல்கால் கூடாது**
**வாஸ்து நாள் 26.07.2016 காலை 07.35 முதல் 08.20 வரை**

| திகதி | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | நேரம் காலை | லக்னம் | லக்னம் |
|---|---|---|---|---|---|---|---|
| 18..07.2016 | திங்கள் | சதுர்தசி | மூலம் | சித்த | 06.00 - 07.30 | கடகம் | வளர் |
| 21.07.2016 | வியாழன் | துவதியை | திருவோணம் | சித்த | 08.00 - 09.30 | சிம்மம் | தேய் |
| 07.08.2016 | ஞாயிறு | பஞ்சமி | ஹஸ்தம் | சித்த | 08.45 - 10.15 | கன்னி | வளர் |
| 14.08.2016 | ஞாயிறு | ஏகாதசி | மூலம் | அமிர்த | 09.00 - 10.00 | கன்னி | வளர் |

## கடன் தீர்க்க

| திகதி | கிழமை | நேரம் பகல் |
|---|---|---|
| 18.07.2016 | திங்கள் | 12.00 - 02.00 |
| 19.07.2016 | செவ்வாய் | 12.00 - 01.00 |
| 26.07.2016 | செவ்வாய் | 12.00 - 01.00 |
| 28.07.2016 | வியாழன் | 12.00 - 01.00 |
| 01.08.2016 | திங்கள் | 12.00 - 02.00 |
| 02.08.2016 | செவ்வாய் | 12.00 - 01.00 |
| 09.08.2016 | செவ்வாய் | 12.00 - 01.00 |
| 12.08.2016 | வெள்ளி | 12.00 - 01.30 |
| 19.08.2016 | வெள்ளி | 12.00 - 01.30 |



## சத்திர சிகிச்சை செய்து குழந்தை பிரசவிக்க

| திகதி | கிழமை | நேரம் காலை / பகல் |
|---|---|---|
| 16.07.2016 | திங்கள் | 10.30 - 11.30 |
| 19.07.2016 | செவ்வாய் | 10.30 - 12.00 |
| 20.07.2016 | புதன் | 03.00 - 04.00 |
| 21.07.2016 | வியாழன் | 03.00 - 03.45 |
| 22.07.2016 | வெள்ளி | 10.00 - 10.30 |
| 23.07.2016 | சனி | 10.30 - 11.30 |
| 24.07.2016 | ஞாயிறு | 02.00 - 03.30 |
| 25.07.2016 | திங்கள் | 02.00 - 03.30 |
| 26.07.2016 | செவ்வாய் | 02.00 - 03.00 |
| 30.07.2016 | சனி | 03.00 - 03.30 |
| 01.08.2016 | திங்கள் | 09.30 - 10.30 |
| 04.08.2016 | வியாழன் | 09.30 - 10.30 |
| 05.08.2016 | வெள்ளி | 07.00 - 08.30 |
| 07.08.2016 | ஞாயிறு | 09.00 - 10.30 |
| 09.08.2016 | செவ்வாய் | 07.00 - 08.30 |
| 10.08.2016 | புதன் | 07.00 - 07.30 |

**கணிப்பு:**
**சோதிடர்**
**வாடிப்பட்டி**
**R.ஆனந்தன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருள்மிகு வேங்கைநாதர் ஆலயம்



**"பிரகதாம்பாள் ஸ்தோத்திரம்"**

**நவஸாலபுரி மத்யே மோக்ஷபுரினாமதேய**
**ஸ்ரீ வியாக்ரபுரி ஸ்தல மத்யே**
**நீலோத்பல ரூப லாவண்ய**
**ஸர்வ கோடி சந்த்ர சூர்ய பிரகாஸ**







**ஸாமுத்ரிகா லக்ஷண ஸர்வாலங்கிருத**
**சொர்ணாபர்ண பூஷித அதியெளவன**
**பால்ய ரூப வனிதாம்.**
**ஸர்வ கோடி ஜன ரக்ஷக**
**ஸகல மங்கள கார்ய ஸித்திப்ரதாப**
**ஸர்வ சக்தி ஸ்வரூப**
**ஸதானந்த லோசன ஸர்வாபீஷ்ட**
**ஸித்திப்ரதாயினீம்**
**சிவ சக்தி ஸ்வரூபிணீம்**
**ஸ்ரீசக்ர பீட தாரிணீம்**
**ஸ்ரீபிரகதாம்பாள் அம்பிகாம்**
**பாதார விந்தம் பாத நமஸ்தே**
**பாத நமஸ்தே நமோன் நமஹ!**

முக்திப் பதி, அமைதிப் பதி, அதிசயப் பதி என்று புகழ்ந்து பேசப்படும் தலம் திருவேங்கைவாசல்.

**ஆலய தரிசனம்**

புதுக்கோட்டையிலிருந்து சுமார் ஏழு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கிறது இத் தலம். இறைவன் வியாக்கிரபுரீஸ்வரர் அல்லது அருள்மிகு வேங்கை நாதர். தேவி பிரகதாம்பாள் அல்லது அருள்மிகு பெரியநாயகி.

இறுமாப்பு கொண்டு தேவேந்திரனை அலட்சியம் செய்துவிட்டது காம தேனுப் பசு. தேவசபைக்கு வேண்டுமென்றே தாம தமாக வந்தது. கோபம் கொண்ட தேவேந்திரன், காமதேனுவை பூலோகத்தில் காட்டுப் பசுவாகத் திரியும்படி சாபமிட்டு விடுகிறார்.

பூலோகத்தில் மகிழ மரங்கள் நிறைந்த வகுளா ரண்ய க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்கிறது காமதேனு. கங்கை நீர் கொண்டு வந்து இறைவனை வழிபட்டு வந்தால் சாப விமோசனம் கிடைக்கும் என்று யோசனை கூறுகிறார் கபில முனிவர்.

காமதேனுவும் தினமும் தன் காதுகளில் கங்கை நீர் நிரப்பி வந்து மகிழவனேஸ்வரரை வழிபட்டு வந்தது. பசு தன் காதுகளில் கங்கை நீர் கொண்டு வந்து வழிபட்டதால் இறைவன் கோகர்ணேஸ்வரர் என்று அழைக்கப்படலானார். தலமும் திருக்கோகர்ணம் ஆயிற்று. இந்தத் திருக்கோகர்ணம் தலம் புதுக்கோட்டையிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. புதுக்கோட்டையை ஆண்ட தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமாக, விளங்கிய இத்தலத்து இறைவி பிரகதாம்பாள், பிற்காலத்தில் அரைக்காசு அம்மன் என்று பிரபலமாகப் பேசப்படலானாள்.

காமதேனுப் பசுவின் பக்தியைச் சோதிக்க விரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினார் இறைவன். கங்கை நீர் எடுத்து வரும் போது வேங்கை வடிவில் வழிமறித்தார். தன் பசிக்கு இரை யாகும்படி அதன்மீது பாயத் தயாரானார். தன்னிடம் யாசிப்பவர்களுக்கு கேட்டதைக் கொடுக்கும் குணமுடையது காமதேனு. ஆனால் சிவபூஜை தடைப்பட்டுவிடுமே என்று தயங்கியது.

சிவபூஜையை முடித்துவிட்டு வேங்கையிடம் தானே வருவதாக உறுதி கூறிச் சென்றது. அவ்வாறே சிவவழிபாட்டை முடித்துக்கொண்டு, தன் கன்றுக் குப் பால் கொடுத்துவிட்டு வேங்கையிடம் திரும்பி வந்தது. இறைவன் மனமகிழ்ந்து உமாதேவி சகிதம் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்து காமதேனுவின் சாபம் நீக்கி மோட்சமும் அளித்தார்.

வேங்கை உருவில் வந்து இறைவன், காமதே னுவைத் தடுத்தாட்கொண்ட இடம்தான் திருவேங் கைவாசல் திருத்தலம்.

## மன்னிக்கும் மனப்பாங்கு

நாம் செய்யும் தவறுகளைப் பிறர் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அது போன்று பிறர் செய்யும் தவறுகளை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும், அல்லது அவர்களைத்திருத்த முயற்சி செய்யவேண்டும், அல்லது இரண்டையுமே செய்ய வேண்டும்.







திருக்கோகர்ணத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. இங்கு சுயம்பு லிங் கமாகத் தோன்றியிருப்பவர் அருள்மிகு வேங்கை நாதர் கல்வெட்டுகளில் இத்தலம் திருமேற்றளி என்றும் இறைவன் சதிரவிடங்க நாயனார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

காமதேனுவுக்கு முக்தியளித்த ஸ்தல மாதலால் முக்திப்பதி என்றும்பெயர் பெற்றது அருள்மிகு வேங்கைநாதர் ஆலயம் மிகவும் பழை மையானது. 1500 ஆண்டுகளுக்கும் முற்பட்டது

இறைவன் வேங்கை வடிவில் வந்ததால் மிகவும் உக்கிரமாக இருப்பார் என்று கருதி பல காலம் இந்த ஆலயத்தில் பூஜை வழிபாடு எதுவும் நடைபெறாமல் இருந்ததென்றும், ஆனால் இங்கு இறைவன் உமாதேவி சகிதம் ரிஷப வாகனத்தில் காட்சி கொடுத்து காமதேனுவின் சாபம் நீக்கியதால், இத்தலம் அமைதித் தலம் என்று ஆனதாகவும் சொல்லப்படுகிறது.

இத்தலம் அதிசயப் பதி என்றும் அழைக்கப் படுகிறது.

ஸ்ரீ பிரகதாம்பாள் உடனுறை அருள்மிகு வேங் கை நாதர் ஆலயத்தின் அமைப்பு வழிபாட்டு முறை கள் பல இதர சிவாலயங்களிலிருந்து மாறுபட்டு இருப்பது ஒரு அதிசயம்தான். முதல் பூஜை விநாயகருக்கு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட பூஜா விதி. ஆனால், திருவேங் கைவாசல் அருள்மிகு வேங்கைநாதர் ஆலயத்தில்

முதல் மரியாதை விநாயக ருக்கு அல்ல!

கம்பத்தடி கருப்பருக்குத்தான். முதல் ஆராத னை! கருப்பர் இத்தலத்து எல்லைக் காவல் தெய்வம். வனத்தில் சுயம்புவாகத் தோன்றிய சிவலிங்கத் திருமேனிக்கு மன்னன் கோயில் கட்டுவதற்காக மதில் சுவர் எழுப்பிய போது மும்முறை முயன்றும் முடியவில்லையாம், இடிந்து இடிந்து விழுந்ததாம்!

எல்லைக்காவல் தெய்வமான கருப்பர், எழுப்ப இருக்கும் ஆலயத்தில் தனக்கு ஒரு தனி சந்நிதி வேண்டும். அல்லது முதல் ஆராதனையாவது தனக்கு அளிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

மன்னர் இறைவனிடம் முறையிட, மன்னர் கனவில் தோன்றிய இறைவன், கருப்பருக்கு ஆல யத்தில் தனி சந்நிதி வேண்டாம். முதல் ஆராதனை அளிக்கலாம் என்று அனுக்கிரகம் செய்தாராம்.

இப்போதும் இந்த ஆலயத்தில் முதல் பூஜை கொடி மரத்துக்கு அருகில் நடப் பட்டிருக்கும் கம்பத்தடி கருப்பருக்குத் தான் நடைபெறுகிறது.

**K. குருமூர்த்தி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுக்தேஸ்வர் கிரி!

## சிறந்த முன்னுதாரணமாய் திகழ்ந்தார்

யுக்தேஸ்வர்கிரி மகாராஜ் (1855 1936) லாஹிரி மகாசயரின் சீடரும், பரமஹம்ச யோகானந்தரின் (யோகா சத்சங்க சொஸைட்டியை நிறுவியவர்) குருவும் ஆவார். யுக்தேஸ்வர்கிரி அவர்கள் "The Wholy Science" என்ற நூலை வெளியிட்டும், பல சாதுசபா மையங்களை (இந்தியாவில் செராம்பூர், பூரி ஆசிரமம் உட்பட) நிறுவியும் கிரியா லோகத்தை பரவச் செய்தவர். தமது பிரதான சீடர்களில் ஒருவரான பரமஹம்ச யோகானந்தரை அமெரிக்கா அனுப்பி கிரியா யோகத்தைப் போதிக்கும்படி பணித்தார்.


ஆன்ம நாட்டம் உள்ள இளைஞர்களை தம்பால் ஈர்க்கும் அபூர்வ சக்தி கொண்டவர் யுக்தேஸ்வர். தெய்வீகப் பொலிவுடையது அவருடைய முகம், சாந்தம் தவழும் கண்கள், பிடரி சிலுப்பும் சிங்கம் போன்ற தலை, குறுந்தாடி ஞானம் செறிந்த மொழி இவை யுக்தேஸ்வரின் சிறந்த தோற் றத்தைச் சித்திரிப்பவை. தம்மைத் தேடி வரும் சாதகர்களுக்குத் தமது நிபந்தனையற்ற அன்பை எவ்விதத் தயக்கமும் இல்லாமல் வழங்குவார் அவர். யுக்தேஸ்வர் செராம்பூரில் வசித்த போது தான் பரமஹம்ச யோகானந்தர் அவரைத் தேடிச் சென்றது. அவர் யுக்தேஸ்வரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

லாஹிரி மகாசயரின் திருவுருவப் படமொன்று யுக்தேஸ்வரின் ஆசிரமத்தில் இருந்தது. தினமும் மல்லிகைப் பூ மாலையால் அந்தப்படம் அலங்கரிக்கப்படும். அவ ருடைய ஆசிரமக் கட்டடம் பெரியதாகவும், பழமையானதாகவும் இருந்தது. முக்கனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தரும் பழத்தோட்டமொன்று ஆசிரமத்தின் பின்புறம் இருந்தது. கட்டடம் இரண்டு மேல் தளங்கள் கொண்டது. இருக்கைகள், மேசைகள் என்று பலபொருட்கள் இருந்தாலும் ஆசிரமம் எளிமையாகக் காணப்பட்டது. அந்த இடம் அவரது தந்தை அவருக்கு விட்டுச் சென்ற வீடு. அவருடைய தந்தை செல்வச் செழிப்புள்ள ஒரு தொழிலதிபர். யுக்தேஸ்வர் உயர் கல்வி கற்றவரல்ல. ஆனால் அவர் உரிய வயதில் மணவாழ்க்கையில் ஈடுபட்டு ஒரு மகளுக்குத் தந்தையானார். அந்தப் பெண்ணுக்கும் திருமணமாகி கணவன் வீடு சென்று விட்டாள். யுக்தேஸ்வரின் மனைவி அகால மரணமடைந்ததால் அவர் சன்னியாசம் ஏற்றார். லாஹிரி மகாசயரிடம் உபதேசம் பெற்றபின் அவர் ஸ்ரீ யுக்தேஸ்வர்கிரி ஆனார். (அவருடைய இயற்பெயர் ப்ரியநாத்) யுக்தேஸ்வர் தினமும் காலையில் நடைப்பயிற்சி மேற்கொள்வார். நதியில் நீராடுவார். அவருக்காக ஆசிரமத்து இளைஞர்கள் இருவர் உணவு சமைப்பார்கள். அவர் சைவ உணவே உண்பார். காய்கறி, கீரை, பருப்பு, நெய் அவருடைய அன்றாட உணவில் இடம்பெறும். மாம்பழம், ஒரஞ்சு போன்ற ஏதேனும் ஒரு பழமும் உண்பார்.



மாலையில் தம்மைச் சந்திக்க வருகிறவர்களுடன் உரையாடுவார். தம்மைவிட வயதில் மிகச் சிறியவர்களையும் அன்பு காட்டி, மரியாதையாக நடத்துவார். ஞானவான்கள் யாரிடமும் வேற்றுமை பாராட்டுவதில்லைதானே! அதிகா ரத்தில் உள்ளவர். அதிகம் படித்தவர். செல்வந்தர் என்று யாருக்கும் அவர் விசேஷ சலுகை காட்டமாட்டார். கல்வியறிவு இல்லாதவர். ஏழை என்கிற காரணத்துக்காக யாரையும் அவர் இழிவுப்படுத்தியதில்லை. மாலை நேரங் களில் அவர் உரை நிகழ்த்துவார். புதுமையான சிந்தனைகளை முன் வைப்பார். அவருடைய அண்மையில் இருக்கும் போது தெய்வ சந்நிதியில் இருக்கிற உணர்வுதான் ஏற்படும். தம்மை ஒருபோதும் பெரிய மனிதனாகக் காண்பித்துக் கொள்ள அவர் முயன்றதில்லை. இரவு நெடுநேரம் கழித்தே உறங்கச் செல்வார். எவ்வித சொகுசும் இல்லாத ஒரு சாதாரண பலகையில்தான் படுத்துறங்குவார். ஆன்ம சாதகர்களுக்கு முன்னுதாரணமாக இருந்தது. அவருடைய வாழ்க்கை நடைமுறை. யுக்தேஸ்வர் பேசுவார். ஆனால் அதிகம் பேசாத இயல்புடையவர். பார்க்கிறவர்களுக்கு அவர் மிகுதியான நேரத்தை மௌனத்தில் கழிப்பதாகத் தோன்றும். அவர் இயற்கையின் நியதிகளை மதிப்பவர். கட்டற்ற விவாதங்களில் ஈடுபடுவதில்லை. பரமஹம்ச யோகானந்தர் தமது குருவைப் பற்றி இப்படிக் குறிப்பிடுவார். "என் குருநாதர் ஆரவாரமின்றி அற்புதங்களை நிகழ்த்துகிறவர். ஆனால் அவை பற்றி ஒரு வார்த்தை கூட பேசமாட்டார். அவரிடம் வெளிப்பகட்டு கிடையாது. எல்லாரையும் போல் அவரும் ஒரு நாள் இறந்து போகலாம். ஆனால், இறைவனுடன் முன்பே ஒன்றியிருப்பவர் அவர். நான் அவருடைய புனிதமான திருவடிகளைத் தீண்டுவதில் எழுச்சி அடைவேன் என்று. லாஹிரிமகாசயர் தமது சீடரை (யுக்தேஸ்வர்) நமது பிள்ளை போல் நடத்தினார். யுக்தேஸ்வர் பரமஹம்ஸ யோகானந்தர் இடையேயும் ஒரு தந்தை மகன் பிரியம் இருந்தது. கிரியா யோகத்தின் அவசியம் பற்றித் தமது சீடர்களுக்கு எப்போதும் நினைவுபடுத்திக் கொண்டிருப்பார் அவர். யுக்தேஸ்வர் கூடியமட்டும் தமது வேலைகளைத் தாமே செய்து கொண்டு விடுவார். வழக்கமான குருமார்களைப் போல் அவர் சீடர்களின் பணிவிடையை எதிர்பார்த்திருப்பதில்லை.

(தொடரும்...)

✦C.S.தேவநாதன்

## பெரியோர் துணை

உலகில் நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது அறிவிலும், ஒழுக்கத்திலும், தவத்திலும் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருளை அள்ளித்தரும்

# அம்பிகைக்கான ஆடிப்பூரம்

ஆடிப்பூரத் திருநாள் அம்பிகைக்குரிய நன்னாளாக பல அம்மன் திருத்தலங்களிலும் கொண்டாடப்படுகின்றது. ஆடி மாதத்தில் பூர நட்சத்திரம் உச்ச நிலையில் உள்ள போது கொண்டாடப்படுவது தான் "ஆடிப்பூர"த் திருநாள். மனித குலத்தை துன்பங்களில் இருந்து மீட்பதற்காக உலக அன்னை இப்பூவுலகில் தோன்றிய நாள் தான் ஆடிப்பூரமாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ ஆண்டாள் நள ஆண்டு ஆடி மாதம் பூரம் நட்சத்திரத்தில் வளர்பிறைக் காலத்தில் செவ்வாய்க்கிழமை (கி. பி.ஒன்பதாம் நூற்றாண்டில்) ஸ்ரீ வில்லிப்புத்தூரில் பூமிப்பிராட்டி அவதாரமாய் பெரியாழ்வார் நந்தவனத்தில் ஒரு துளசிச் செடியின் கீழ் அவதரித்தார். துளசி செடியின் அடியில் ஒரு குழந்தையை கண்ட பெரியாழ்வார், சர்வ அலங்காரத்துடன் இடதுகையில் கிளியுடன், இடக் கொண்டையுடன் ஸ்ரீ ஆண்டாளைக் கண்டார். ஸ்ரீ கண்ணனும் இப்பூவுலகில் தோன்றும் போது சங்கு சக்கரத்துடன் தோன்றியதும் வசுதேவர் வேண்டுகோளுக்கிணங்கி குழந்தையாக மாறியதும் நாம் அறிந்ததே.

ஸ்ரீ ஆண்டாளின் கையில் உள்ள கிளி பிரத்யேகமான இலைகளாலும், தழைகளாலும் தயாரிக்கப்படுவதால் நெடுநாள் கெடாமலும் அழியாமலும் இருக்கும் தன்மை உடையது. ஆண்டாளும் அவள் வணங்கிய கண்ணனும் அவதாரத்தில் ஒத்திருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சீதாப்பிராட்டி, ருக்குமணி பிராட்டியைப் போல் ஆண்டாளும் பூமியில் அவதரித்ததால், பூமிப் பிராட்டியாகக் கருதப்படுகிறாள். மீராபாய், ஜக்குபாய் என்பவர்களைப் போல் பக்தியில் சிறப்புற்ற பக்தைகளில் ஒருவராகவும் கருதப்படுகிறாள்.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவை வேதமனைத்திற்கும் வித்தாகக் கொள்ளப்படுகிறது. திருப்பாவை தமிழில் இயற்றப்பட்ட ஒரே பக்திப் பாசுரம் என்பதும் நினைவில் வைக்கத்தக்கது. திருப்பாவை நம்மை அறியாமை என்ற இருளில் இருந்து எழுப்பி நமக்கு வழிகாட்டி, பகவானிடம் அழைத்துச் சென்று நமக்காக வாதாடி வழக்குரைத்து அவன் அருளைப் பெற வைக்கின்றது. பன்னிரண்டு ஆழ்வார்களின் ஒரே பெண் ஆழ்வார் ஸ்ரீ ஆண்டாள் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாக பகவானை அன்பினால் ஆண்டாள். அதனாலேயே ஆண்டாள் ஆனாள். இதன் காரணமாகவே அன்பினால் ஆளப்பெற்ற பகவானும் ஆண்டவன் ஆகின்றார். எளிமையான பக்தி ரசத்திலும், கருத்திலும் நம் மேன்மையிலும் திருப்பாவை கீதையை விட பன்மடங்கு உயர்ந்து நிற்கின்றது. கண்ணன் கீதையில் சொல்லும் "சரணாகதி" தத்துவத்தை ஸ்ரீ ஆண்டாள் தன் திருப்பாவையில் முதல் பாசுரத்திலேயே "நாராயணனே நமக்கே பறை தருவான்" எனச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து விட்டாள்.

அனைத்து உலகத்தையும் படைத்தும், காத்தும், கரந்தும் அருளும் அகிலம் ஆண்ட அன்னைக்கு அனைத்து அம்மன் ஆலயங்களிலும் மஞ்சள் காப்பு, சந்தனக் காப்பு, குங்குமக்காப்பு, சர்க்கரைக் காப்பு, கற்கண்டுக்காப்பு முதலியன செய்வது வழக்கமானதாகும். இதையெல்லாம் விட மேலாக, அகிலாண்ட நாயகிக்கு வளை(யல்)காப்பு நடத்தும் நாளே ஆடிப்பூரத்திருநாளாகும். அன்னை மனம் மகிழ்ந்து மாந்தர்கள் அனைவருக்கும் அருளை வழங்கும் நாள் ஆடிப்பூரம்.

ஆடி மாதம் என்பது தக்ஷிணாயன காலத்தின் தொடக்க காலம், இதுவரை வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சூரியன், தனது தெற்கு நோக்கிய பயணத்தையும் தொடங்கும் மாதம் நம்முடைய ஒரு வருடம். தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். அவர்களது இரவுக் காலமே இந்த தக்ஷிணாயன காலம். உத்தராயணக்காலம் சிவபெருமானை வழிபட உகந்த காலம் என்றால் தக்ஷிணாயானம் அவரது கவாம பாகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருக்கும் அம்பிகையை வணங்குவதற்குரிய காலமாகும். சகல விடயங்களிலும் அம்மனுக்கு உகந்தது ஆடி மாதம். இவ்வளவு சிறப்புக்கள் நிறைந்த ஆடி மாதத்தில் வரும் பூர நாள் அம்பிகைக்கு வளை காப்பு நடத்தி கண்டு களித்திடவும் சிறந்தநாள் மாலை நேரங்களில் அன்னைக்கு வளையல்களால் சிறப்பு அலங்காரம் செய்து வழிபட்டு அந்த வளையல்களை பெண்மணிகளுக்குப் பிரசாதமாக வழங்குவது வழக்கம்.



பல்வேறு ஆலயங்களில் ஆடிப்பூரம் அம்மனுக்குரிய பிரம்மோற்சவமாக பத்துநாள் திருவிழாவாக வாகன சேவையுடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. திரு வாரூரில் கமலாம்பாளுக்கும் திரு நாகையில் (நாகபட்டினம்) நீலயாதாக்ஷி அம்மனுக்கும் திருக்கருகாவூரில் கர்ப்பரட்சாம்பிகைக்கும் பத்து நாள் பிரம் மோற்சவம் ஒவ்வொரு ஆண்டும் கோலாகலமாக நடத்தப்படுகிறது. மேல் மருவத்தூரில் ஆதி பராசக்திக்கு ஆடிப்பூரம் மிகப் பெரிய பண்டிகையாக அம்மனுக்குக் கூழ்வார்க்கும் சிறப்புப் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

ஆடியில் ஆண்டாள் அவதரித்த ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆடிப்பூரத்தில் திருத்தேர் பவனி நடைபெறுவது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

வேத சாரத்தையே வாழ்வின் சாரமாய் கொண்டுள்ள திருப்பாவையைப் படித்தும் ஆடிப் பூரத்தில் அன்னை ஸ்ரீ ஆண்டாளை வணங்கியும் பிறவிப் பயனை அடைவோமாக!

✦S.ஆகாஷ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**



# மிதுனம்

ஆக்கபூர்வமான சிந்தனையும் செயல்களும் கொண்டு விளங்கும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கேதுவை தவிர பிற கிரகங்கள் சாதகமான நிலையில் இருப்பது எடுத்த காரியம் சிறக்கும், வெளிபடையான செயல்பாடுகளால் நற்பெயர் உண்டாகும். பொருளாதார வளர்ச்சி கிட்டும்.

**பணியாளர்களுக்கு**

மலைபோல வந்த தடைகளை நீக்கி பனி போல மறைந்து கடந்த கால நிகழ்வுகளை மறந்து விரைவான வளர்ச்சியை பெறுவீர்கள். உங்களை மதிக்க தவறியவர் கூட உங்களை பார்த்து வணங்குவார்கள். திருப்பத்தை எதிர்பார்த்து காத்திருப்பீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் கிடைக்க வாய்ப்பு அமையும். பொது நலவாதிகளின் பலம் மேலும் உயரும். காலத்திற்கு தகுந்தபடி உங்களை மாற்றிக் கொள்வீர்கள்.



**வியாபாரிகளுக்கு**

எந்த தொழில் செய்தாலும் அதில் ஆர்வத்தை செலுத்தி செயல்படும். நீங்கள் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். விடுபட்ட விடயங்களில் கவனம் செலுத்தி வெற்றியை பெறுவீர்கள். தொழிலில் முதலீடு நன்மையை தருவதுடன் வருமானம் அதி கரிக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைஞர்களின் வசனகர்த்தா, உதவி இயக்குனர்களுக்கு கலைத்துறையில் நல்ல வாய்ப்பும் வளர்ச்சியை பெறுவீர்கள். தெளிவான மன நிலையும், நிதானத்துடனும் செயல்படுவீர்கள். எதிலும் வளர்ச்சியை பெறுவீர்கள். பணவரவு நன்றாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும் கனவுகளை நனவாக்க எடுக்கும் முயற்சிகள் சிறப்பாக அமையும். சுயதொழில் மேன்மையை தரும். பொருளாதாரம் சிறக்கும்.

**மாணவர்களுக்கு**

சரித்திரம், தொழில் நுட்பம், கடல் ஆராய்ச்சி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் உதவியும் ஆதரவும் ஆறுதலை தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

19.07.2016 செவ்வாய் இரவு 11.20 முதல் 22.07.2016 வெள்ளி அதிகாலை 05.29 மணி வரையும்

16.08.2016 செவ்வாய் காலை 07.01 முதல் 18.08.2016 வியாழன் பகல் 01.21 மணி வரையும்

**நட்சத்திர பலன்கள்**

**மிருகசீரிடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

உழைப்பால் உயர்வை பெறுவீர்கள். தன்னிறைவு பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சியையும், வருவாயும் அமையும்.

**திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த தேக்க நிலை மறையும். சுபகாரிய நிகழ்ச்சியும், மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். உறவினர்கள் ஆதரவு கிட்டும்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மக்களின் ஆதரவு கிடைக்கும். வேலை வாய்ப்புகள் சிலருக்கு அமையும். நீண்ட நாட்கள் பிரச்சினைகளில் நல்ல முடிவு கிட்டும். உதவிகள் பல வழியில் கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பச்சை, சிவப்பு, வெண்மை

## இறைவனின் சித்தம்

இறைவன் (காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில்), மக்கள் உள்ளத்தில் ஆன்மிக எண்ணங்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு உலகில் பல சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் தோற்றுவித்திருக்கிறான்.

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடமேற்கு, தெற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** புதன், வெள்ளி, ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளிக்கிழமை மாரியம்மன், துர்க்கை காளியை வணங்கி நெய் தீபமிட்டு வெள்ளை நிற பூவால் அலங்கரித்து வேண்டி வர சகல காரிய அனுகூலம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி
## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

புதனின் ஆதிக்கம் பெற்று திகழும் மிதுனராசி வாசகர்களே! உங்களின் ராசிக்கு இதுவரை லாபஸ்தானத்தையும் ஏழாமிடத்தையும் ஒன்பதாமிடத்தையும் பார்வை செய்து வந்த குருபகவான் இனி உங்களின் அட்டம ஸ்தானத்தையும் தொழில் ஸ்தானத்தையும் விரைய ஸ்தானத்தையும் பார்வை இடுகிறார். இதுவரை பல்வேறு நன்மைகளையும் சில சிரமங்களை அடைந்து வந்த நீங்கள் இனி சுபிட்சம் பெறுவதும் உண்மையான நிலைப்பாடுகளுக்கு ஆளாகும் நிலை உண்டாகும். உங்களின் ராசிக்கு நான்காமிடமான கன்னியில் குரு அமருவது, தாயார் உடல்நிலை, வாகனம் வீடு, சுகம் போன்றவற்றில் சில சோதனைகளையும் உதவிகளையும் பெற்று தருவார். குறுகிய காலத்தில் பல வளர்ச்சியை அடைவீர்கள். உங்களை பார்க்க கூட அஞ்சியவர்கள் இனி சரளமாக வந்து உங்களை பார்ப்பது உங்களுக்கு மன வருத்தத்தை தந்தாலும் தவிர்க்க முடியாது.

உங்களின் ராசிக்கு அட்டம ஸ்தானத்தை பார்ப்பது தொழிலிலும் உறவுகளிலும் இருந்து பகைமை மாறி நட்புகள் அதிகரிக்கும். வங்கி கடன் பெறுவதும், அதன் மூலம் தொழிலை விருத்தி செய்து கொள்ளும் வாய்ப்பும் அமையும். பல காலம் கடன் பட்டு அடைக்க முடியாமல் இருந்து வந்தவர்களுக்கு இனி படிபடியாக கடன் அடையும். ஒதுக்கி வைத்த சொந்த உறவுகள் இனி மனவேற்றுமை மறந்து உங்களுடன் இணைவார்கள். நண்பருடன் இணைந்து தொழில் செய்யும் போது முன்பு போல இன்றி தெளிவாக முடிவுகளை எடுத்து பிரச்சினைகளுக்கு முடிவெடுப்பீர்கள். உங்களின் தொழில் ஸ்தானாதிபதியே தொழில் ஸ்தானத்தை பார்ப்பது உகங்களுக்கு இதுவரை தொழில் எதுவும் இல்லாமல் இருந்தால் உடனே தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பார். தொழில் செய்ய வேண்டிய பண உதவிகளையும் பெற்று தருவார். சிலருக்கு வங்கி கடன் பெறும் வாய்ப்பும் அமையும்.

உங்களின் விரைய ஸ்தானத்தை குரு பார்வை இடுவது செலவுகளை குறைத்து கொள்வீர்கள். புதிய சேமிப்புகளை உருவாக்கி கொள்வீர்கள். தங்க நகை ஆடம்பர பொருட்கள் சலுகை விலைகளில் உங்களுக்கு கிடைக்கும். வெளிநாட்டு நண்பர்கள் மூலம் பொருட்களை பெறுவீர்கள். முதலீடுகள் இல்லாத தொழிலில் கூடுதல் லாபம் பெறுவீர்கள். பிறரின் உதவியுடன் சிலர் வெளிநாட்டு செல்ல வாய்ப்புகள் அமையும். உயர்கல்வி வாய்ப்புகளும், கலைஞர்களுக்கு புதிய தொழில்நுட்ப பயிற்சிகளை பெறும் வாய்ப்புகளும் அமையும்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரமாக துலாத்திற்கு சென்று வரும் காலம் உங்களுக்கு நல்ல பலன்களை தருவதுடன் புண்ணிய தீர்த்தங்களின் நீராடும் வாய்ப்பும் தெய்வ வழிபாடுகளால் நல்ல பலன் பெறும் வாய்ப்பும் அமையும். உங்களின் கருத்துகளுக்கு பிறரின் ஆதரவு கிடைக்கும். இந்த காலங்களின் புதிய முயற்சிகளை தவிர்த்து இருக்கும் நிலையைச் சரி செய்து கொள்வது நல்ல பலனை தரும். எதையும் முன்யோசனையுடன் செயல்படுவதுடன் மூலம் என்றும் வெற்றியை தக்க வைத்து கொள்வீர்கள்.

உங்களின் ராசி பரிகாரம் செய்ய வேண்டியது என்பதால் அடிக்கடி நவக்கிரக குருவை தரிசனம் செய்வதுடன் பௌர்ணமி அன்று சிவன் கோவில் சென்று மூன்று முறை வலம் வந்து சிவனை தரிசனம் செய்ய நன்மைகள் பல தேடி வரும்.



### தெய்வ பக்தி

தெய்வ பக்தி உயர்ந்த எண்ணங்களையும், தூய எண்ணங்களையும் நம் உள்ளத்தில் தோற்றுவிக்கிறது. பள்ளத்தில் தண்ணீர் தங்குவது போல், நல்லொழுக்கங்கள் இருப்பவர்களிடம் தான் இறைவனின் அருள் சென்று தங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லையற்றது மன உணர்வுகளின் சக்தி

**திருமதி நிலியா மிகைலோவா என்ற சோவியத் நாட்டுப் பெண் தொலைவில் உள்ள பொருள்களையும், தன்னுடைய ஈ.எஸ்.பி.சக்தியால் மனோசக்தியால் அசைக்கவும், நகர்த்தவும் செய்து காட்டியிருக்கிறார்.**

ரஷ்ய நாட்டு விஞ்ஞானிகள் முன்னிலையில் அவர் மேசை மேல் வைக்கப்பட்ட சிகரெட்டை தனது மனதின் உணர்வுகளால் நகர்த்தியிருக்கிறார்.

ஒரு ரொட்டித் துண்டை மேசையில் இருந்து நகர்த்தி வந்து அது குதித்து எகிறி தனது வாய்க்குக் கொண்டு வந்து காட்டியிருக்கிறார். மேலும் அவர் முட்டையில் இருந்து கைபடாமல் மனவலிமையைக் கொண்டே வெள்ளைக் கருவை வெளியேற்றிக் காண்பித்திருக்கிறார்.

இவ்வளவையும் தனது மனதின் ஆற்றல்களால் செய்து காட்டியிருக்கிறார்.

ரஷ்ய விஞ்ஞானிகள் நிலியாவைச் சுற்றிலும் உள்ள காந்த சக்திகளை பல கருவிகளைக் கொண்டு சோதனை செய்து பார்த்தபோது அது சாதாரணமாக பூமியில் இருக்கும் காந்த சக்தியைவிடப் பத்து



மடங்கு அதிகமான காந்த சக்திகளை பல கருவிகளைக் கொண்ட சோதனை செய்து பார்த்த போது அது சாதாரணமாக பூமியில் இருக்கும் காந்தசக்தியைவிடப் பத்து மடங்கு அதிகமான காந்த சக்தி நிலியாவைச் சுற்றி இருந்ததைக் கருவிகளால் கண்டு பிடித்துள்ளார்கள். அது மட்டுமல்லாமல் நிலியாவைச் சுற்றிலும் (Electrostatic field) மின் ஆற்றல்கள் இருப்பதும் தெரியவந்தது.

இவற்றுடன் அந்தப் பெண்ணின் அபாரமான மனோசக்தியும் (Mind Power) சேர்ந்து அவரது கண்கள் வழியாகப் பாய்ந்து மேக்னெட் மற்றும் மின் சக்திகளுடன் இணைந்து செயல்படுகிறது. அவள் ஒரு வஸ்துவை ஓர் இலக்கை உற்று நோக்கினால் காந்த சக்தி இல்லாத பொருள்களும் அவளது பார்வைக்கு காந்த சக்தி உள்ளதுபோல நகர்ந்து செயல்படுகின்றன.

நிலியாவின் (Will Power) மனதின் சக்தியானது உள்மனதின் உணர்வு சக்திகளுடன் சேர்ந்து (Psychic Energy) அசாதாரண ஆற்றல் மிகு சக்தியாக மாறிச் செயல்படுகிறது.

உங்கள் உணர்வுக்குக்கூட இப்போதும் அத்தகைய சக்தி ஆற்றல்கள் இருக்கின்றன. ஆனால் உங்களால் பெரிய பொருள்களை நகரச் செய்ய முடியாது. ஆனால் அதனால் பரமாணுக்கள் பாதிக்கப்படத்தான் செய்கின்றன. (Molecules).


உங்களது உடம்பில் உள்ள செல் (Cell) கள் என்னும் ஜீவ அணுக்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவை உங்களுக்கு ஏற்படும் தலைவலியாலும் டென்ஷன், (Tension)> கவலைகளாலும் மற்றும் வேறு (Psycho Somatic Ulcer), அறிகுறிகளாலும் இந்த ஜீவ அணுக்கள் பாதிக்கப்பட்டு விடுகின்றன.

இந்த எண்ணத்தில் ஆற்றல்கள் மேசை மேல் உள்ள பொருள்களையும் கடந்து அது உடலில் உள்ள அணுக்களிலும் சேர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படுகின்றன.

மனதின் எண்ண அளவுகளுக்கு அல்லது எண்ணத்தின் ஆற்றல்களுக்கு தூரம் (space) ஒரு பொருட்டல்ல.



மனதின் சக்தியால் நீங்கள் அடுத்த அறையில் உள்ள குழந்தைகளை வசமாக்கி இயக்கலாம்.

மனதின் சக்தியால் நீங்கள் அடுத்த வீட்டில் உள்ள ஒருவரை இயக்கலாம்.

மனதின் ஆற்றல்களால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள ஒருவருக்குக் கூட உங்களது வசப் படுத்தும் சக்தியால் கட்டளை இடலாம். மனதின் ஆற்றலால் நீங்கள் அன்புடன் நேசிக்கும் ஒருவரை இந்தப் புவியில் எங்கிருந்தாலும் வசமாக்கலாம். நண்பர்கள், அன்புக்குக் கட்டுப் பட்டவர்கள். நீங்கள் நேசிப் பவர்களை அவர்கள் எவ்வ ளவு தூரத்தில் இருந்தாலும் சுலபமாக நீங்கள் உங்கள் சக்தியைப் பரவ விட்டுச் செயல் படலாம். அது நல்லவிதமாக வேலை செய்யும்.

உங்களுடைய நெருங்கிய நண்பர்களை, உங்களை விரும்புபவர்களை உங்களது மனதின் ஆற்றல் சுலபமாகச் சென்று செயல்படும். ஏனெனில், அவர்கள்உங்களுக்கு ஏற்கெனவே பரிச்சயமான வர்கள். ஹாலிவுட்டின் பிரபல கனவுக் கன்னி சினிமா நட்சத்திரம் சிசலி டைசன் தன்னுடைய (Boy Friend) காதலன் வேறு ஒரு பெண்ணுடன் (Dating) வைத்திருந்ததைப் பற்றிக் காதலனிடம் விவரமாக எல்லா வற்றையும் கூறிவிட்டாள்.

இதனால் அதிர்ச்சியடைந்த அவளது காதலன் "என்னை ஆள் வைத்து வேவு பார்க்கி றாயா" என்றும் சிசிலியா டைசனைக் கேட்டு விட்டான்.

அதன்பின் அவனை சிசிலியா டைசன் கைவிட்டு விட்டாள். சிசிலியா டைசன் தனது காதலனை வேறு பெண்ணின் பிடியில் இருந்து விடுபட்டு வரும்படி தனது மனதின் ஆற்றலைப் பிரயோகிக்க வில்லையா?

வேறொரு பெண்ணிடம் தொடர்பை வெட்டிக் கொண்டு வரச் செய்ய முடியவில்லையா? என்ற கேள்விக்கு "ஆம்" என்றும் "இல்லை" என்றும் பதில் சொல்லலாம்.

இங்கே யோசிக்க வேண்டியது சிசிலியா டைசன் தனது சுயநலத் துக்காக அவனை அந்தப் பெண் ணின் பிடியில் இருந்து விடு விப்பது என்பது தாந்திரீக மூளைச் சலவை போன்றதே ஆகும்.

அது இயற்கைக்கு எதிரான வேலையும் ஆகும். அது செயல் பட நீண்ட காலமும் ஆகலாம் என்று அமெரிக்க தாந்திரீகர்கள் அபிப்பிராயம்.

ஆகவே இங்கே இரண்டு விஷயங்கள் தெளிவாகத் தெரி கின்றன.

1. நமக்கு மிக நெருக்கத்தில் உள்ளவர் உணர்ச்சிவசப்பட்டு விடுவதால் தாந்திரீக சக்திகளில் இருந்து வெகுதூரத்துக்குப் போய் விடுகிறார்கள். ஏனெனில் இருவருமே உணர்ச்சிவசப்பட்டு விட்டார்கள்.

2. மிகவும் நியாயமான அணுகுமுறையில் தாந்திரீக சக்திகளை அணுகினால் அந்த சக்தியால் மற்றவரை எளிதில் வசமாக்க முடியும்.

என்.தம்மண்ணன்



## தீய மனம் கூடாது!

வாழ்க்கை என்பது ஓர் இனிய இசை, சங்கீதம் போன்றது. அது சில விதிமுறைகளுக்கு உட்படும் போது இனிமையாக இருக்கும். சிலர் அல்லது பலர் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு உட்படாமல், தங்கள் மனம் போனபடி அந்த இசையை வாசிக்க அல்லது பாட விரும்புகிறார்கள். அதனால் அது இனிமை தருவதற்குப் பதிலாகத் துன்பம் தருவதாக ஆகிவிடுகிறது. தேவையான அன்பும் அரவணைப்பும் வழி காட்டுதலும் இல்லாமல் வளரும் குழந்தைகள் மன வளம் குன்றி, எதிர்காலத்தில் தீயவர்களாகவும் கொடியவர்களாகவும் வன்முறையாளர்களாகவும் மாறி விடுகிறார்கள். தீமைகள் தோன்றுவதற்கு அடிப்படையாக இருப்பது தீய மனமே!.



ஜூலை சோதிடகேசரி 2016

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆன்மா ஈடேறும் வழி

# அன்னதானமே!



உலகத்திலுள்ள மக்கள் வீடுபேறடைவதற்குச் சாதனமாக இருந்து உப கரிப்பது அறம் ஒன்றேயாம். நாம் சம்பாதித்த பொருள் இந்த சென்மத்தில் மட்டும் உதவி செய் யும். நாம் செய்யும் அறமோ மறுமைக்கும் வந்து உதவி செய்யும்.

"ஓங்கார வேலையில் வேலைவிட் டோனருள்போலுதவ
எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது; இடாமல் வைத்த
வங்கார மும் உங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு விருயிர் போமத் தனி வழிக்கே"

என்று நம் பரமாசாரிய மூர்த்திகளாகிய அருணகிரிநாத சுவாமிகள் உபதேசித்துள்ளார். எத்தேசத்தில், எக்குலத்தில், எந்தப் பிறப்பில் பிறந்தாலும் நாம் இப்பொழுது இங்கு செய்யும் அறம் பின் தொடர்ந்து வரும். அதனாலன்றோ ஔவைப் பிராட்டியார் நமக்கு உபதேசிக்க வந்த போது முதலில் "அறஞ்செய விரும்பு" என்று வற்புறுத்தியுள்ளார். அந்த அறமாவது பலதிறப்பட்டுள்ளது.அவற்றில் தானம், தருமம் என்ற இருவகை சிறந்து விளங்குகின்றன. இந்த இரு வகையில் முதலாவதாக நின்ற தானத்தில் பூதானம், கோதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், சுவர்ணதானம் எனப் பலப்பல கிளைகளுண்டு. இவற்றுள் தலைசிறந்து விளங்குவது அன்னதானம் ஒன்றேயாகும். இதனை எல்லாச் சமயத்தவரும். எத்திறப்பட்டோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இதற்குச் சமமானது முன்னு மில்லை, பின்னுமில்லை. எதனால் அன்னதானம் உயர்ந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

உயிர்கள் அன்னத்தைத் தான் முக்கிய ஆதாரமாகக் கொண்டு வாழ்கின்றன. பசித்தோருக்கு அன்னத்தைக் கொடுத்தால் உயிரைக் கொடுத்தது போலாகும். குஷ்டம், சூலை முதலியவைகளில் எத்துணைக் கொடிய நோய் ஒருவனுக்கு வந்து வருத்தினாலும், சில காலமாவது உயிர் வாழலாம். பசி என்னும் கொடிய நோய் ஒரு வனுக்கு வந்து சேர்ந்தால் சிறிது நேரமாவது உயிர் வாழ முடியுமா? பசி நோய் வந்த காலத்து எவ்வளவு சிரமம் உண்டாகிறது? கண் மங்களடைகிறது. காதடைக்கிறது. தலை சுற்றுகிறது. வயிறு ஒட்டிப்போகிறது. கால்கள் தடுமாறுகின்றன. அகக்கருவிகளாகிய மனஞ் சோர்வையடைகின்றன. புத்தி தடுமாறுகிறது. உயிர் துடிக்கிறது. கருவி கரணங்களெல்லாம் தத்தஞ் செயல்களினின்றுந் தவிக்கின்றனவல்லவா? அத்தகைய கொடிய பசியை ஆற்றுவதைக் காட்டிலும் சிறந்த தருமம் மூன்று உலகத்திலும் கிடையாதென்பது உறுதி. பசியென்றும் நோயை அன்னம் என்கிற மருந்தைக் கொடுத்து நீக்க வேண்டும். பசியால் களைத்து வந்தவனுக்குச் சிறிது அன்னங்கொடுக்க அதை அருந்தியவுடனே அவன் முகம் எவ்வளவு பொலிவடைகிறது. மனம் எவ்வளவு ஆனந்தத்தையடைகிறது? ஆன்மா எவ் வளவு சாந்தியடைகிறது. சிந்தியுங்கள். அப்போது அன்னம் கொடுத்தவனுக்கு எவ்வளவு புண்ணியம் உண்டாகிறது? பசியாற்றுவதைக் காட்டிலும் சிறந்த தவம் வேறு இல்லை.ஒருவனுக்குப் பசிப்பிணி நான் போய் ஒருவரை ஒன்றுங் கேட்கமாட்டேன். "ஏற்பதிகழ்ச்சி" என்று சொல்லிக் கொண்டிருந்த மானமும் நீங்குகிறது. நான் உயர்ந்த குலம், ஆசாரத்திற் சிறந்தவன், அவன் தாழ்ந்தவன் என்று பாராட்டுகிற குலமும் நீங்குகிறது. கல்வி கேள்வி களிற் சிறந்து நுண்ணிய மதியுடன் திகழ்கின்றோரது கல்வி அறிவும் மங்குகிறது.

காண்பார்களது கண்களைக் கவரும் கட்டழகும் குன்றுகிறது. பொருளுடையோன் என்கிற பெருமிதமும் பெயர்கிறது. தானம் புரிகின்ற தன்மையும் தவிர்கிறது. உணர்ச்சியும் ஒழிகிறது. தேன் போன்ற இனிய சொற்களையுடைய மாதர் மேல் மனத்தை வைத்து கங்குல் பகலாய்க் கண் துஞ்சாது கவங்குகின்ற காம வேட்கையும் கடிதில் விலகுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானங்குலங் கல்விவண்மை அறிவுடைமை
தானந்தவ முயர்ச்சி தாளாண்மை தோனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்

ஔவைப் பிராட்டியார்

பசி இன்னும் என்னென்ன விபரீதங்களை யுண்டு பண்ணுகிறது. அரிதிற் பெற்ற பிள்ளையை விற்கச் செய்கிறது. தவமிருந்து பெற்ற பிள்ளையைத் தூக்கிக் கல்லின் மேலறையச் செய்கிறது. எல்லாம் கடந்த ஞானிகளாக காட்டிலிருந்து கருத்தை யொடுக்கிக் கனலிடை நின்று கடுந்தவ மியற்றும் முனிவர்களையும் கூட காயோ கனியோ கந்த மூலங்களோ இலையோ சருகோ கிடைக்குமா என்று தேடி உண்ணச் செய்கிறது. முற்றும் துறந்த வரையும் வீடுதேடி பிச்சை வாங்கச் செய்கிறது. வீரமுங் கிடையாது. பலமுங் கிடையாது என்று விரத நாளினுங்கூட மூன்று வேளை தலை யணைக்குப் பஞ்சடைக்கிற மாதிரி வயிற்றில் சோற்றைத் திணிக்கச் செய்கிறது. விரத மிருக்கிறவர்களை பல ஆகாரங்களாகப் பழமாக பாலாக வயிறு புடைக்க உண்ணச் செய்கிறது. சிவ பெருமானால் உபதேசிக்கப் பெற்ற பட்டினத் தடிகளும் பசியால் வாடி ஒருவன் வீட்டிற்கு உணவை நாடிச் செல்ல நேர்ந்தது. அவன் சுவாமி களைத் துன்புறுத்த அக்கால் சுவாமிகள் மனம் வருந்தி,

பூணும் படிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்நற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தை கெட்டு
சாணும் வளர்க்கஅடியேன்படுந்துயர் சற்றல்லவே"


என்று கூறியுள்ளார். அருணகிரி சுவாமி களும் "நீள்பசியவிக்கக் கன பானம் வேணும்". என்றனர். வேறொரு வழியின்றி பசி தாகத்தால் மெலிந்தவர்களை அன்போடும் அருளோடும் அன்னமீந்து ஆதரிக்க வேண்டும். நிலத்தில் ஒரு விதை விதைத்தால் அது ஒன்றுக்கு ஆயிரமாக விளைகிறதல்லவா? அது போல் ஏழைகள் வயிற்றில் கொடுத்த அன்னம், மறுமைக்கு ஆயிர மடங்காகப் பெருகி நமக்கு நன்மையை நல்குகிறது. சென்ற வருடத்தில் விளைவித்த தானியத்தையல்லவா இப்போது உண்ணு கிறோம். அதுபோல முன் ஜென்மத்தில் செய்த நன்மையினால் நாம் இப்போது சுகத்தை அனு பவிக்கிறோம். இப்போதும் நன்றாகப் பயி ரிட்டு விளைவித்தால் அல்லவா அடுத்த வரு டத்தில் கவலையற்றிருக்கலாம். இப்போதும் நாம் நன்மையைச் செய்தாலல்லவா மறு பிற வியில் சுகம் பெறலாம். நாம் எவ்வளவோ பாடுபட்டு செல்வத்தைத் தேடுகிறோம். அங் ஙனம் உடல் வருந்தி சேகரித்த பொருளை இவ்விடத்திலேயே வைத்து விட்டுப் போக லாமா? அந்தச் செல்வத்தை நல்ல சேமநிதி நிலையத்தில் போட்டு வைத்தால் நாம் போகும் இடத்திற்கு அது உதவுமல்லவா? இப்போது நாம் தேடிய பொருளை சேமித்து வைக்க வேண்டிய இடம் யாது? எங்கு வைத்தால் ஒன்றுக்கு ஆயிரமாக வரும்? என்று ஆராய்ந்து பார்த்தால் அடியார்கள், ஏழைகள் வயிறுதான் நல்ல சேமநிதி நிலையம் (பண்டாபீஸ்). அதற்கு தலைவர் தரும தேவதை. அது எப்பொ ழுதும்கெடாது. ஆனால் ஏழைகள் வயிற்றில் பணமாகப் போட முடியுமா? முடியாது.

பின்னர் என்ன செய்ய வேண்டும்? அன்னமாக மாற்றிப் போடவேண்டும். அப்படிப் போட்டு வைத்தால் அது பிறவிகள் தோறும் தொடர்ந்து கொண்டே வரும். ஆன்ம திருப்தியையுண்டுபண்ணுவது அன்னதானம் ஒன்றேயாம்.

✦திருமுருக கிருபானந்தவாரியார்

## அகிம்சை எனும் அறம்!

எல்லா அறங்களிலும் தலையாய அறம் அகிம்சையே ஆகும். மற்ற அனைத்து அறங்களும் அகிம்சையில் அடங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவில் "ராதாமாதவ் தாம்" ஆலயம்!

**இந்து மதம் தழுவியுள்ள வெளிநாடு வாழ் மக்கள் உலகமெங்கிலும் பரந்த அளவில் வசித்து வருகின்றார்கள். இவர்களின் ஆன்மீக தேடலுக்கும் பாரம்பரிய குடும்ப சடங்குகளுக்கும், பண்டிகைக்கால கொண்டாட்டங்களுக்கும் ஒரு ஆலயம் என்பது மிகுந்த அத்தியாவசிய தேவையாகின்றது. இந்த அடிப்படை தேவையை உணர்ந்து கொண்ட வெளிநாடு வாழ் இந்து சமயிகள், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற தத்துவ கருத்தை மனதிலே இருத்தி அவர்கள் வாழுகின்ற இடத்திலே அழகான அற்புதமான ஆலயத்தை எழுப்பி விடுகின்றார்கள்.**

இவ்வாறு செய்வதன் மூலமாக தம்முடைய "அன்னை தேசத்தை" தாம் வாழுகின்ற அன்னிய பூமிக்கு கொண்டு வந்து விடுகின்றார்கள். இப்படியாக பிற தேசங்களில் எழுப்பப்பட இந்து ஆலயங்கள் அவர்களின் எல்லாவிதமான ஆன்மீக தேடல்களுக்கும் விடையாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது. இதைத் தவிர ஜாதி, இனம், மொழி என்ற வேற்றுமைகளும் நீங்கப் பெற்று இந்து மகாஜனங்கள் என்ற சங்கமத்திலே அவர்கள் ஆழ்ந்து விடுகின்றார்கள், அதனால் வரும் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் ஒருசேர அனுபவிக்கின்றார்கள்.

அமெரிக்காவில் ஒஸ்டின் நகரத்தின் தென்மேற்கில் மலைப்பாங்கான இடத்தில் ராதாமாதவ் தாம் எனப்படுகின்ற ராதாகிருஷ்ணர் ஆலயம் அமைந்துள்ளது. அமெரிக்காவில் இருக்கின்ற இந்து ஆலயங்களிலும் ஆசிரமத்திலும் இதுவே மிகப் பெரியது என சொல்லப்படுகின்றது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பக்தர்களையும் வருகையாளர்களையும் இந்த ஆலயம் வரவேற்றுக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறு செய்யும் போது அவர்களின் பின்புலம் ஏதும் கருதாது அவர்களை ஆலயத்தின் மதச் சேவைகள், குடும்ப விழாக்கள் மற்றும் ஆன்மீக பண்டிகைகளுக்கு மனமுவந்து வரவேற்கின்றது. அதே சமயம் இதர ஒத்த மத அமைப்புகளுக்கு தகுந்த ஆதரவு அளித்து தர்ம கைங்கரியங்களுக்கு உதவி செய்து இதர மதங்களுக்கிடையேயான உறவை வலுப்படுத்துகின்றது. ராதாகிருஷ்ணருக்கான பக்தியை அர்ப்பணித்து பக்தர்களின் உத்வேகத்தை அதிகப்படுத்துவதே இந்த ஆலயத்தின் பிரதான நோக்கமாக விளங்குகின்றது.

ராதாமாதவ் தாம் எனப்படுகின்ற இந்த அழகான இந்து ஆலயம் கிருஷ்ண பகவானுக்காக உருவாக்கப்பட்டதாகும். இது அமெரிக்காவின் டெக்சாஸ் என்ற நகரில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை "பார்சன தாம்" என்றும் அழைக்கின்றார்கள். இந்த ஆலயத்தில் ஒவ்வொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டும் கிருஷ்ண பகவானின் பிறந்த நாளான "ஜன்மாஸ்தமி" திருவிழா மிகக் கோலாகலமாக் கொண்டாடப்படுகின்றது.பக்தியின் பாதையானது ஆன்மாவின் பயணத்தில் ராதாகிருஷ்ணரை நோக்கியதாக இருக்கின்றது என ஆலய நிர்வாகத்தால் இங்கு வருகை தரும் பக்தர்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றது.

இந்த ஆலயம் 1990ஆம் ஆண்டு பிரகாஷானந்த் சரஸ்வதி என்பவரால் பார்ஷனா தாம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய ஆலயங்களைப் போலவே இந்த ஆலய கட்டுமானத்துடன் இந்து சமய ஆகம விதிகள் முழுவதுமாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. பிரம் மாண்டமாய் எழுப்பப்பட்ட டெக்சாஸின் இந்த ஆலயம் இந்தியாவில் தமிழ்நாட்டில் இருக்கின்ற மற்ற ஆலயங்கள் போலவே எல்லாவிதமான வசதிகளையும் கொண்டிருக்கின்றது.

ராதாமாதவ் தாம் ஆலயத்தின் மூலமாக பல இலவச கல்வி திட்டங்களை இந்த ஆலயத்தின் நிர்வாகம் செயல்படுத்தி வருகின்றது. மேலும் இந்த ஆலய நிர்வாகம் 2014 ஏப்ரலில் சிறந்த பொதுச் சேவைக்காக நெல்சன் மண்டேலா அமைதி விருதினை பெற்றுள்ளது என்பது பெருமைக் குரியதாகும். கிருஷ்ணரின் பிருந்தாவனத்தில் உள்ளது போலவே இங்கும் தெய்வ சிற்பங்கள் மிக அற்புதமாகவும் தத்துரூபமாகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆலயக் கட்டுமான பணிகள் வடஇந்திய, தென்னிந்திய நவீன கட்டிட கலை அம்சங்களை கொண்டிருக்கின்றது. தொண்ணூறு அடி உயரமுள்ள இந்த ஆலயத்தின் குவிமாடம் வெள்ளை மற்றும் நீல சலவை கற்களாலும் தங்கத்தாலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் ராஜகோபுரம் பாரம்பரிய முறைப்படி எழுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் இதுவும் கூட சலவைக்கல்லால் செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தின் உட்புறத்தில் சிற்ப வேலைகள் அனைத்தும் 15 கைத்தேர்ந்த தென்னிந்திய கலைஞர்களால் செய்யப்பட்டதாகும்.


தூண்களிலும் மேற்கூரைகளிலும் அழகான உருவங்களை மயில்கள் மற்றும் மலர்களின் அடிப்படையிலும் செய்துள்ளார்கள். இந்த ஆலயத்தின் மொத்த பரப்பளவாக 35,000 சதுர அடி இருக்கின்றது. ஆலயத்தின் கட்டுமானத்தில் 84 தூண்கள் நிறுத்தப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு சேதம் ஏதுமின்றி நிலைத்து நிற்கும் அளவிற்கு ஆலயக் கட்டுமான பணிகள் விசேட வழிமுறைகளில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மல்லிகை, ரோஜாக்கள் மத்தியில் மயில்கள் உலாவும் நந்தவனமும் இந்த ஆலயத்தில் இடம் பெற்றுள்ளது.

ராதாமாதவ் தாம் ஆலயம் டெக்சாஸ் நகரத்தில் வசிக்கின்ற இந்து சமய மக்களுக்கு ஆன்மீக தேவைகளை பூர்த்தி செய்கின்ற விதத்தில் ஒரு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

✦ அபிதாமணாளன்


## உயர்ந்த சிந்தனை


நீங்கள் உயர்ந்தவராக விரும்பினால் உயர்ந்தவற்றையே சிந்தியுங்கள், உயர்ந்தவற்றையே பேசுங்கள், உயர்ந்தவற்றையே செயல்படுத்துங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிற்பச்செழுமைமிகு வீழிநாதேஸ்வரர் ஆலயம்!

தமிழ்நாட்டின் திருவாரூர் மாவட்டத்தில் திருவீழிமிழலை என்னும் அழகிய சிற்றூரில் அமையப் பெற்றுள்ளது புராண பெருமைகள் நிறைந்துள்ள அருள்மிகு வீழிநாதேஸ்வரர் ஆலயம். இங்கு மூலவராக வீழிநாதேஸ்வரரும் தாயாராக சுந்தரகுஜாம்பிகையும் அருள் பாலிக்கின்றார்கள். தேவாரப் பாடல் பெற்ற சிவத்திருத்தலங்களில் அதிலும் காவிரி தென்கரை தலங்களில் இத்தலம் 61ஆவதாக விளங்குகின்றது. சைவக்குரவர்களாகிய திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரராகிய மூவ ராலும் பாடல் பெற்றது இந்த திவ்ய சிவத்தலம். அத்துடன் சிவனடியாராகிய சேந்தனார் மற்றும் அருணகிரிநாதர் ஆகியோரும் தம்முடைய பாடல்களில் இச்சைவ திருத்தலத்தினை போற்றி உள்ளார்கள். இந்த தலத்தின் சிறப்பினைப் பற்றி திருஞானசம்பந்தர் கூறுமிடத்து "மறைவேள்வி பயின்றாரின் பாவத்தையும் விடுத்தார் மிகவாலும் வீழிமிழலையே" எனச் சிறப்பித்துச் சொல்லியுள்ளார்.


வீழிநாதேஸ்வரர் ஆலயம் அமையப் பெற்றுள்ள இடம் முழுவதும் ஒரு காலத்தில் வீழி எனப்படும் சந்தன மரம், செண்பக மரம், பலா மற்றும் விளா மரங்கள் அடங்கிய அடர்ந்த காடாக விளங்கிற்று. இப்பகுதியில் வாழ்ந்து வந்த மிழலைக் குறும்பர் என்ற வேடுவர் இத்தல இறைவன் மேல் கொண்ட மாறாத பக்தியினால் தினமும் விளாங்கனியை நைவேத்தியம் செய்து வழிபாடு செய்து வந்தார். இறைவன் சிவன் அவருடைய பக்தியை மெச்சி வேடுவருக்கு அஷ்டமா சித்திகளை வழங்கினார். இந்த ஆலயத்தில் மிழலைக்குறும்பரான வேடுவர் பக்தியுடன் நிவேதனம் செய்த விளாங்கனி வீழிநாதரின் பாதத்தில் அவரின் பக்தியின் அடையாளமாய் இன்றும் விளங்குகின்றது.

இதனால் இத்தலம் திருவீழிமிழலை என அழைக்கப்படலாயிற்று. சிற்பக்கலைக்கு கழ் பெற்று விளங்கும் இந்த சிவால பத்தில் சிவனார் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார். இங்கு பாதாள நந்தி ஒன்றும் அமையப் பெற் றுள்ளது. இந்த நந்தியின் அமைப்பானது, முழு கோயிலும் நந்திக்கு மேல் அமைந்திருப்பது போல்






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





உருவாக்கப்பட்டுள்ளது. இங்குள்ளஇறைவன் காசி யாத்திரைக்கு கிளம்புகின்ற மாப்பிள்ளை கோலத்தில் அருள்பாலிப்பதால் இவரை மாப்பிள்ளை சுவாமி என்றே அழைக்கின்றார்கள். இந்த ஆலயத்தில் மகாமண்டபமானது திருமண மண்டபத்தைப் போல் பந்தல் காலுடன் மங்களகரமாக காட்சியளிப்பது இந்தியாவின் வேறு எந்த சிவாலயத்திலும் கண்டிராத ஒரு சிறப்பாகும். இந்த ஆலயத்தில் கொடிமரத்தின் அருகே சிவலிங்கம் அமையப் பெற்றிருப்பது மற்றுமொரு சிறப்பு அம்சமாக கருதப்படுகின்றது. இங்கு வருகின்ற பக்தர்களும் சுற்றுலா வருகின்ற வெளிநாட்டு பயணிகளும் இங்குள்ள வவ்வால் நந்தி மண்டபத்தில் அமைந்துள்ள மிகச் சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளை கண்டு வியப்படைகின்றார்கள்.



கிழக்கு நோக்கி அமையப் பெற்றுள்ள இந்த ஆலயத்தின் எதிர்ப்புறத்தில் மிகப் பெரிய குளம் ஒன்று உள்ளது. இச்சிவாலயம் மாடக்கோயில் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதாகும். ஆலயப் பிரகாரத்தின் தெற்கு பகுதியில் தல விநாயகர் சன்னதியும், மேற்கில் சோமஸ்கந்தர் முருகன், மகாலட்சுமி சன்னதிகளும் உள்ளன. இங்குள்ள நடராஜர் சன்னதி மிக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் தலத்தீர்த்தமாக விஷ்ணு தீர்த்தமும் தலவிருட்சமாக வீழிச்செடியும் விளங்குகின்றன. மகாசிவராத்திரி, மார்கழி திருவாதிரை ஆகிய விழாக்கள் இங்கு வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. இந்த ஆலயத்தில் எங்கு நோக்கினும் சிற்பக்கலையின் சிறப்பு விக்கிரகங்களின் மூலமாகவும் தூண்களின் செதுக்கப்பட்ட மிக நுண்மையான உருவங்களின் மூலமாகவும் எடுத்து இயம்பப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் இருக்கின்ற "வவ்வால் நந்தி மண்டபம்" சிற்பக்கலைச் செழுமையின் உச்சத்தை தொடுகின்ற அளவில் மிக உன்னதமான முறையில் காணப்படுகின்றது. இந்த மண்டபத்தில் தான் சஷ்டியபூர்த்தி திருமணங்கள் பக்தர்களால் நடத்தப்படுகின்றது. பல சிவத்தலங்களையும் தரிசித்து விட்டு திருவீழிமிழலைக்கு வருகை தந்த திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இங்கு சில காலம் தங்கினார்கள். இதுவும் சிவ பெருமானின் திருவுளப்படியே நடந்தது எனவும் ஆன்மீகச் சான்றோர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். அதாவது இவர்கள் வந்த நேரத்தில் இந்த பகுதியில் பஞ்சம் தலைவிரித்து ஆடியது. மழை வெகு காலம் பொய்த்து விட்ட காரணத்தினால் பயிர்பச்சைகளின்றி கால் நடைகளும், மனிதர்களும் மிகவும் பரிதாபமான நிலையில் வாழ்ந்து வந்தார்கள். இந்த நிலையை சிவன் அருளால் மாற்றவே சம்பந்தரும் நாவுக்கரசரும் இத்தலம் எழுந்தருளியதாக நம்பப் படுகின்றது.

கடுமையான பஞ்சத்தின் காரணமாக இங்கு வாழ்ந்த மக்களின் நிலை மிகவும் மோசமாக இருப்பதை அறிந்த சம்பந்தரும் நாவுக்கரசரும் திருவீழி நாதரை நினைந்து பணிந்து பஞ்சம் போக்கிட வேண்டினார்கள். இருவரது கனவிலும் தோன்றிய ஈசன் தினமும் ஒரு பொற்காசு தருவதாகவும் அதனை வைத்து அடியார்களின் பசிப்பிணியை போக்கி கொள்ளுங்கள் எனவும் அறிவுறுத்தினார். அதன்படியே ஒவ்வொரு நாளும் கிழக்கு பீடத்தில் தோன்றிய பொற்காசை சம்பந்தரும் மேற்கு பீடத்தில் தோன்றிய பொற்காசை திருநாவுக்கரசரும் எடுத்து அடியார்களின் பசிப் பிணியை போக்கினார்கள் என வரலாறுகள் தெரிவிக்கின்றன. இந்த ஆலயத்தின் சுற்றுச்சுவர்களிலும் மற்றும் பல இடங்களிலும் காணப்படுகின்ற சிற்பங்கள் அந்த காலக் கட்டத்தின் சிற்பக்கலை நுணுக்கத்தை இன்றளவும் உலகுக்கு பறைச்சாற்றி நிற்கின்றன என்பது தான் உண்மை.

✦ ஒத்தக்கடை ராமன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடகம்

# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்


சந்திரனின் ஆதிக்கம் பெற்று விளங்கும் கடகராசி வாசகர்களே! உங்களின் ராசியில் உச்சம் பெறும் குருபகவான் இதுவரை இரண்டாமிடமான தனஸ்தானத்தில் அமர்ந்து மறைவு ஸ்தானத்தை பார்வை இட்டு வந்ததால் வாழ்க்கையில் எதையும் நினைத்தபடி அமைய முடியாமல் போனது இனி வெற்றியை இலக்காக கொண்டு தொடர்ந்து செயல்படுவீர்கள். எனினும் உங்களின் ராசிக்கு மூன்றாமிடமான முயற்சி ஸ்தானத்தில் குரு அமருவது நல்லதல்ல என்றாலும் உங்களின் ராசிக்கு பெரிய பாதிப்பை தராது. மூன்றாமிடமான முயற்சியை ஸ்தானத்தில் குரு அமர்வது உங்களின் முயற்சிக்கு பல இடையூறுகள் வந்து சேரும். தொடர் முயற்சிக்கு நல்ல பலனை தரும் வசதிகளையும், வாய்ப்புகளை தேடி திரியும் சிலருக்கு அதற்கான வாய்ப்புகள் அமையும் உங்களின் ராசிக்கு ஏழாமிடத்து குருபார்வை இடுவது திருமண தடை நீங்கி விரைவில் வரன் அமையும். பிரிந்த தம்பதிகள் பேச்சுவார்த்தை மூலம் விரைவில் இணைவார்கள். வெளிநாடு சென்றுவர நினைப்பவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் தேடி வரும். வெளிநாட்டு நண்பரின் ஆதரவு கிடைக்கும். கூட்டு தொழில் செய்து வருபவர்களுக்கு வருமானம் பெருகும். மனவேற்றுமையுடன் தொழில் செய்து வந்த உங்களின் நண்பர் உங்களை புரிந்து கொண்டு எல்லாவற்றையும் ஏற்பார். கருத்து வேறுபாடுகள் மறையும். உங்களின் பாக்கியஸ்தானத்தை குரு பார்வை இடுவது புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், ஆன்மீக குரு தரிசனம், மகான்களின் வழிபாடுகளால் பெரும் நன்மை உண்டாகும். தடைகளை உடைத்து எளிய நற்பண்புகளை பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். உங்களிடம் தோற்று போனவர்கள் உங்களிடம் வந்து ஆலோசனைகளை பெறுவார்கள். ஏற்றம் இறக்கமான வாழ்க்கை தொடர்ந்து பார்த்து வரும் உங்களுக்கு எல்லா நிலையும் சமமாக தெரியும்.

உங்களின் லாபஸ்தானமான இடத்தை குரு பார்வை இடுவதும் விடுபட்ட பல பிரச்சினைகளை மீண்டும் துவங்குவீர்கள். எதிலும் உங்களை தயார் செய்து கொள்வீர்கள். நீண்ட நாள் வராமல் இருந்த பணம் வசூலாகும். என்ன தொழில் செய்தாலும் அதில் லாபம் நிச்சயம் கிடைக்கும். தொழிலாளர்களின் வாழ்க்கை தரம் உயரும். சம்பள உயர்வு பதவி உயர்வு சேமிப்புகள் அதிகரிக்கும். பல காலத்திற்கு முன்பு சேமித்து வைத்த பணம் இன்று பயன் பெறும். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் அமையும். மனதில் சுமையாக இருந்து வந்த பிரச்சினை குறையும். தனி மனித வருமானம் அதிகரிக்கும். பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். புதிய காணி வாங்கும் வாய்ப்பு சிலருக்கு அமையும். மருத்துவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரம் பெற்று துலாத்திற்கு செல்லும் காலம் உங்களின் வாழ்க்கையை மாற்றி கொள்வீர்கள். புதிய முயற்சிகளை கைவிடுவது நல்லது. நண்பர்களிடம் பழகும் போது வரை முறையுடன் இருந்து கொள்வது நல்லது.

**பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசி என்பதால் நீங்கள் வியாழக்கிழமை தோறும் நவக்கிரக குருவையும் சுப்பிரமணியரையும் தொடர்ந்து வணங்கி வருவது நல்லது. வளர்பிறை வியாழக்கிழமைகளில் நெய்விளக்கு குருவுக்கு போட்டு வருவது மிகவும் நல்ல பலனை தரும்.**


### துன்பங்கள் தூய்மைப் படுத்துகின்றன!



துன்பங்கள் படிப்பினை தரும் பள்ளிக் கூடங்கள். இன்பம் இல்லாத ஒரு நிலையைத் துன்பம் என்று சொல்கிறோம். துன்பங்கள் தான் மனிதனின் மன நிலையில் மகத்தான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தித் தூய்மைப் படுத்துகின்றன. துன்பங்களை அதிகப் படுத்துவது அது சம்பந்தமான கவலைகள் தான். மனத்தில் தெளிவு இருந்தால் அங்கு துன்பம் இருக்காது. உலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் துயரத்தைக் கொஞ்சமாவது குறைப்பது என்று வைத்துக் கொண்டால், துயரம் இல்லாமலே போய் விடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**



# கடகம்

அனைவரிடத்திலும் பாசமும், பரிவும் கொண்டு விளங்கும் கடக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு எடுத்த காரியம் வெற்றியும், நினைத்த காரியமும் கைகூடும். திறம்பட செயல்படுவதன் மீதும் எதையும் சாதித்து காட்டும் வலிமை உண்டாகும். சீரான செயல்பாடுகளால் எல்லாம் சிறப்பாக அமையும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் தன்மையை அறிந்து அதற்கு தகுந்த வகையில் சில மாற்றங்களை செய்து அனைவருடனும் அனுசரித்து நடந்து கொள் வீர்கள். தொழிற்சங்க பொறுப்புகளில் சிறந்து விளங்குவீர்கள். வர வேண்டிய தொகை வசூலா கும். குணம் அறிந்து செயல்படுவீர்கள். பொருளா தாரம் நன்மை தரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

திறமையாக செயல்பட்டு விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்வீர்கள். பொது காரியங்களில் ஈடு பாடு கொள்வீர்கள். யாரையும் புண்படுத்தும் படி நடந்து கொள்ளமாட்டீர்கள். தகுதிக்கு மேல் ஆசை கொள்ள மாட்டீர்கள். பொருளாதார வளர்ச்சி கிட் டும்.

**வியாபாரிகளுக்கு**

எந்த தொழில் செய்தாலும் தகுதியை அறிந்து திறம்பட செயல்படுவீர்கள். சந்திரன் ஆதிக்கம் பெற்ற நீங்கள் அனைவருடனும் இனிமையாக பேசி வியாபார வளர்ச்சியை பெறுவீர்கள். குடும்ப நலனில் கவனம் செலுத்தி ஏற்றம் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையில் முன்னைவிட வளர்ச்சியை பெறுவீர்கள். எதிலும் தன்மையை வெளிப்படுத்தி திறம்பட செயல்படுவீர்கள். நிர்வாகம், தொழில் நுட்ப கலைஞர்கள் குறைவின்றி திறம்பட வளர்ச் சியை பெறுவீர்கள். கருத்து வேறுபாடுகளை மறந்து நண்பர்களுடன் இணைந்து செயல்படுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்கள் வாழ்க்கை தரம் உயரும். வங்கி கடன் வசதியும் தொழில் பயிற்சியும் வளமான எதிர்காலத்தை பெற்று தரும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு உங்களுக்கு உதவியாக அமையும். பொரு ளாதார நன்மைகளை பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். கப்பல், நீர்வளம், நிர்வாக மேலாண்மை கல்வி நன்றாக இருக்கும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

22.07.2016 வெள்ளி அதிகாலை 05.30 முதல் 24.07.2016 ஞாயிறு காலை 09.33 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**புனர்பூசம் 4ஆம் பாதம்**

புதிய தொழில் வாய்ப்புகள் அமை யும். அமைதியாக இருந்து வந்த நீங்கள் எழுச்சியுடன் செயல்படுவீர்கள். வாடிய பயிர்கள் தளைப்பது போல உங்கள் வாழ்க்கை செழிக்கும்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதம்**

தொழில் சார்ந்த வெளியூர் பயணம் சிறக்கும். உங்களின் மனதில் பட்டதை செயல்படுத்துவீர்கள். சிறந்த செயல்களை செய்து பாராட்டு பெறுவீர்கள்.

**ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கவனமுடன் செயல்படுவீர்கள். உங்களின் ஆலோசனை நல்ல முடிவை தரும். பிரிந்த தம்பதி கள் இணைவார்கள். முதலீடு இல்லாத கமிஷன் தொழில் வளர்ச்சியை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** வெண்மை, மஞ்சள், ஒரஞ்சு

**அதிர்ஷ்ட திசைகள் :** வடக்கு, வடமேற்கு, மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வெள்ளி, திங்கள், செவ்வாய்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமை காலை ஆஞ்சநேயரையும் வெள்ளிக்கிழமை சுப்ரமணியரையும் வணங்கி இனிப்பு தானம் செய்ய சகல காரியமும் வெற்றியை தரும்.

## சர்வ சமய அடிப்படை!

இறைவன் மீது நம்பிக்கை, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற மனித நேயம் ஆகியவை அனைத்து சமயங்களுக்கும் அடிப் படையாக விளங்குகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அற்புதங்கள்!



## வேண்டுதல் நிறைவேறியது

நான் கடந்த 15 வருடங்களாக அம்மாவை வழிபட்டு வருகிறேன். என் வாழ்வில் இதுவரை வந்த இன்னல்களை எதிர்கொள்ள மன உறுதி கொடுத்து அவை அனைத்தையும் இன்பமாக மாற்றியவள் மருவூர் அன்னை! கடந்த நான்கு மாதத்திற்கு (2015) முன்பு, என் அண்ணனுக்கு இறுதி ஆண்டு கல்லூரிக் கட்டணம் கட்டமுடியாத சூழ்நிலையில் குடும்பம் இருந்தது.

அதே நேரத்தில் ஒரு சிறுவிபத்தும் ஏற்பட்டுவிட்டது. நிகழ்ந்த அனைத்தையும் நினைத்து என் அண்ணன் படிப்பை நிறுத்தி விடலாம் என்று முடிவெடுத்தார். என் அண்ணனை அந் நிலையில் என்னால் பார்க்க முடியவில்லை.

அம்மாவை மட்டுமே முழுவதும் நம்பி, அண்ணனுக்கு எப்படியாவது கட்டணம் கட்டி இறுதியாண்டு படிப்பை முடித்துவிட வேண்டும். அதே நேரத்தில் அவனுக்கு உடலும் மனமும் நலம் பெறுமாறு வேண்டி சக்தி ஒளிக்கும் எழுது வதாக வேண்டிக் கொண்டேன். அதேபோல் அம்மாவும் மனமிரங்கி என் வேண்டுதலுக்கு இணங்க அனைத்தையும் நிறைவேற்றினாள். அம்மாவிற்கு என் மனமார்ந்த நன்றிகள்!

சக்தி.அபிநயா

## எனது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்திய அம்மா

எனது மகன் பி.டெக். படித்து மிகக்குறைந்த சம்பளத்தில் பல ஊர்களில் கடந்த 3 வருடமாக வேலை பார்த்து வந்தான். அந்த வருமானம் அவனுடைய சாப்பாட்டிற்கே போதவில்லை. இந்த நிலையில் புதிதாக ஒரு கம்பெனியில் அதிக சம்பளத்தில் வேலை கிடைத்தது. ஆனால் வேலை பார்க்கிற கம்பெனியில் விடுவிப்பு கடிதம் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

நான் அருள்திரு அம்மா அவர்களை மனமுருக வேண்டிக் கொண்டேன். உடனே விடுவிப்பு கடிதம் கிடைத்து புதிய கம்பெனியில் அதிக சம்பளத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 14 ந்தேதி சேர்ந்து விட்டான்.

சக்தி ஒளிக்கு எழுதுவதாக வேண்டிக் கொண்டேன். எழுதி விட்டேன். காணிக்கை 1000 ரூபாய் செலுத்தி விடுகிறேன். அம்மாவிற்கு கோடானு கோடி நன்றியினை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

சக்தி.வீராச்சாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மாற்றுப்பெயரே மனிதநேயம்!



பிற உயிர்களின் மீது காட்டப்படுகின்ற அப்ப முக்கின்ற அன்பிற்கு மற்றொரு பெயர்தான் மனித நேயம் என்றாகின்றது. நேயம் என்ற சொல்லுக்கு அன்பு என்றே நேரடியாக பொருள் கொள்தல் வேண்டும். உலகில் உள்ள மக்கள் மீதும், உலகில் வாழுகின்ற அனைத்து உயிர்கள் மீதும் ஒருவன் காட்டுகின்ற அன்பே அவனை மிகச்சிறந்த பண்பாளனாகவும் சுயநலமற்ற மனித ராக ஆக்குகின்றது. சாதாரணமாக மனிதர்கள் சக மனிதர்கள் மீது வைக்கின்ற அன்பை மனித நேயம் என்று அழைக்கப்படுகின்றது.

வாழ்க்கையின் தத்துவத்தை உள்ளபடி உணர்ந்து கொண்ட அருளாளர்கள் மனித நேயத்தை மிகுதியாக பெற்றிருப்பார்கள். தெய்வத்திடம் தூய அன்பு கொண்டிருக்கும் ஒருவர், உலகத்தின் மீதும் தூய அன்பு செலுத்துபவராக இருப்பார். அவ்வாறு உலகத்தை நேசிக்க தெரியாத ஒரு மனிதர், மனித நேயத்தில் இன்னும் பக்குவப்படவில்லை என்பதையே காட்டுகின்றது. சக மனிதர்களை எந்த விதத்திலும் உதாசீனப்படுத்துகின்றவர் உள்ளத்தில் உயர்ந்த சிந்தனைகள் தோன்ற வழியில்லை. மேலும் அவ்விதமானோர் இறைவனின் அருட் கொடைகளை பெறுவதற்கான தகுதியை இழந்த வராகிறார்.

ஜாதி, மதம், மொழி, வட்டாரம் முதலியவை சுட்டிக்காட்டும் எல்லைகளை கடந்த நிலையில் மனித நேயத்தை வளர்த்துக் கொள்ள ஒவ் வொருவரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் மனிதனின் எல்லையற்ற அன்பே மனிதநேயமாய் உலகில் விளங்குகின்றது. இன்னும் சொல்லப் போனால் மக்களை இணைக்கும் ஒரு மகாசக்தியாகவும் மனித நேயம் அமையப் பெறுகின்றது. மனித நேயம் இல்லாதவர்கள் சுயநலம் மிக்கவர்களாகவும் சமுதாயத்தை சுரண்டி வாழ்பவராக இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. மனித நேயம் நன்கு வளர்ந்து நிறைந்து காணப்படுகின்ற ஒரு மனித உள்ளத்தில் பண்பு, அடக்கம், பணிவு, கருணை போன்றவை இயற்கையாகவே குடி கொண்டிருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிட்டத்தட்ட 40 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர், சுநீரா என்றொரு யோகி இருந்தார். சிவனிடம் நேரடி தீட்சை பெற்ற சப்தரிஷிகளுக்கு அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர் இவர் என நம்பப்படுகிறது. தற்சமயம் நேபாள தேசத்தில் உள்ள ஒரு மலைத்தொடரில் மனிதர்களால் கற்பனையிலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒரு பிரம்மாண்ட திட்டத்தினை தீட்டிக் கொண்டிருந்தார். அவர் ஈடு இணையில்லா ஒரு குரு, ஆனால் தன் மீதே திருப்தி இல்லாமல் இருந்தார். பிழையில்லாத "உன்னத உயிர்" அதை உருவாக்குவதுதான் சுநீராவின் அசாத்தியத் திட்டம்.**


மனிதகுலத்தைக் காக்க வருபவராய், இந்த உன்னத உயிர் இருக்க வேண்டுமென நினைத்தார். நாம் என்னென்ன குணங்களை எல்லாம் கற்பனை செய்ய முடியுமோ, அத்தனை குணங்களையும் ஒரே உயிருக்குள் ஒருங்கிணைக்கும் தன் திட்டத்திற்கு மெல்ல செயல் வடிவம் கொடுக்கத் துவங்கினார் சுநீரா. ஏனெனில், ஆதியோகியை இரத்தமும் சதையுமாய்ப் பார்த்த தலைமுறையைச் சேர்ந்த வரல்லவா! ஆதியோகியைக் கண்டவருக்கு அவரைப் போலவே ஓர் உயிர் நம்முடன் உலவ வேண்டும் என்ற ஆசை.

தன் வாழ்நாளினை இந்தத் திட்டத்திற்காகவே செலவு செய்தார் சுநீரா. ஆனால் தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தன் கனவு நிறைவேறப் போவதில்லை என்பதை உணர்ந்தார். தன் கனவு பலிப்பதற்கான சாத்தியங்களை ஆரூடம் சொல்லிவிட்டுச் சென்றார். "நான் தொடங்கி இருக்கும் இந்தப் பணி நிச்சயம் நடந்தேறும். ஆனால் இப்போதல்ல, பல ஆயிரம் வருடங்களுக்குப் பின், பசுமை போர்த்திய தென்னக மலைகளில் இது நடக்கும்!" என தன் தீர்க்கதரிசனத்தை அறிவித்தார்.

இதனால், தலைமுறை தலைமுறையாய் பல யோகிகள் இந்தத் திட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துச் செயல்படுத்தத் துடித்தனர். சுநீராவின் இந்தத் திட்டம் குறித்த விழிப்புணர்வு யோகிகளிடம் எப்போதுமே இருந்து வருகிறது. கடந்த நூற்றாண்டில், இத்திட்டம் மறுமுறை உச்சத்தை எட்டியது.

அன்னி பெசன்ட், வீட்பீற்றர், மேடம் ப்ளாவட்ஸ்கி போன்றோர் இத்திட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்தனர். இதை நிகழ்த்தியே தீருவோம் என்று உறுதி கொண்டனர். மந்திர தந்திர வித்தைகளைப் பற்றிய தகவல்களை பிரம்மாண்ட அளவில் சேகரித்தனர். கடந்த சில நூறு ஆண்டுகளைக் கணக்கில் கொள்ளும் போது பாரம்பரிய வழியில் அல்லாது, இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பெருமுயற்சியில் இறங்கி

# யோகி சுநீராவின் கனவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவர்கள் இவர்கள் உன்னதமான அந்த உயிரைக் கண்டறிவதே அவர்களது நோக்கம். ஏதோ கொஞ்சம் வேலை நடந்தது. ஆனால் பணி முற்றுப் பெறவில்லை.



அவர்களிடம்அறிவு இருந்தது, தகவல்கள் இருந்தது, ஆனால் திட்டத்தை நிறைவேற்ற தேவையான திறன் இல்லை. அதனால், அந்த உன்னதமான உயிரைக் கண்டு பிடித்துவிட்டோம் என்று பிரகடனப்படுத்த சில செயல்களையும் செய்தனர். இருமுறை முயற்சித்தும் அது தோல்வியில் முடிந்தது.

அதே சமயத்தில், குறிப்பிட்ட சில யோகிகளும் இத்திட்டத்திற்கு உயிரூட்டும் முயற்சியில் இறங்கியிருந்தனர். அவர்களுக்கு சுநீராவின் நிறைவேறாத அந்தத் திட்டம் பற்றித் தெரியும். முற்றிலும் வித்தியாசமான ஒரு புரிதலுடன் அவர்களும் இத்திட்டத்தை அணுகத் துவங்கினர். அதற்குப் பலன் கிடைத்தது. உடலுடன் உலவும் "உன்னத உயிராய்" அல்லாமல் தியானலிங்க வடிவில் அத்திட்டம் தன் நிறைவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது.

மனித உடலுக்குள் அத்தனை பிரம்மாண்டமான சாத்தியத்தைக் கொண்டு வருவது சுலபமல்ல. அந்த மனிதன், அதனை தனக்குள் தக்க வைத்துக் கொள்ள அவனுக்குள் தேவையான வாய்மை குணம் மிக மிக அவசியம். நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். அப்படியொரு "உன்னதமான உயிர்" உருவாக்கத் தேவையான அத்துனை உட்பொருட்களும் தியானலிங்கத்தில் இருக்கின்றன. அந்த உயிருக்குத் தேவையான மிகக் கச்சிதமான சக்தி உடல் தியானலிங்கத்திற்கு இருக்கிறது.

கோட்பாடு அளவில் நாம் தியானலிங்கத்திற்கு உடல் கொடுக்கலாம். ரத்தமும் சதையும் சேர்த்து அவரை நடக்கச் செய்யலாம். அவர் நடக்கத் துவங்கும் போது அவருக்கு உணவு, உடை, உறக்கம் தேவைப்படும். உண்டதை வெளியேற்றும் தேவையும் உண்டாகும். நம்மைப் போலவே உறங்கி காலையில் எழுந்து கண்களைக் கசக்கி... மக்கள் அவர் மீது குறை கண்டுபிடித்து...!

இதோ... சுநீராவின் ஆரூடம் பலித்து விட்டது. ஆனால், அவர் நினைத்தது போல் இல்லை. தியானலிங்கம் உருவாகி 15 ஆண்டுகளுக்குப் பின், அவர் முன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். இதுவொரு பாக்கியம். பல நிலைகளில் பார்த்தால் தியானலிங்கம், மிகச் சிறந்த குருவாய் இருக்கிறார்.

நீங்கள் அவருடன் இருந்தால், தன்னை முழுதாய் வழங்குவார். நீங்கள் விருப்பத்துடன் இல்லாவிட்டால் அவரும் அங்கு இருப்பதில்லை. தியானலிங்கம் ஓர் உயிருள்ள குருவாக பெரும் சக்தி மையமாக ஞானத்திற்கும் விடுதலைக்கும் வழியாக விளங்குகிறார்.

"தியானலிங்கத்தின் சக்தி வளையத்திற்குள் வரும் அனைவருக்குமே விடுதலைக்கான ஆன்மீக விதை விதைக்கப்படுகிறது!"

✦ஜகத்குரு ஜக்கி வாசுதேவ்.



## தீமை செய்தவர்களுக்காகப் பிரார்த்தித்தல்!

தங்களுக்குத் துன்பம் விளைவித்தவர்களின் நலனுக்காகவும் பெரியோர்கள் பிரார்த்தனை செய்வது வழக்கம். இவ்விதம் தீமை செய்தவர்களையும் பொறுத்துக் கொள்வது பெரியவர்களின் இயல்பு. தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்பவர்கள் செயற்கரிய செயலைச் செய்தவர்கள் ஆகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**



# சிம்மம்

கம்பீரமான பேச்சும், செயலும் கொண்டு விளங்கும் சிம்ம ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஏழாமிடத்தில் கேது அமருவது சில சிரமங்களை தருவதுடன், கணவன் மனைவி உறவுகளில் சில சிரமங்களை தரும் இருந்தாலும் சுறுசுறுப்புடன் செயல்பட்டு நற்பலன்களை அடைவீர்கள்.

### பணியாளர்களுக்கு

தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவீர்கள். உங்களின் செல்வாக்கு பெருகும். நினைத்ததை விரைவில் நடத்தி முடிப்பீர்கள். செய்யும் தொழிலை தெய்வமாக கொண்டு சிறந்த முறையில் செயல்படுவீர்கள். கருத்து வேறுபாடுகளை களைந்து வெற்றி பெறுவீர்கள். பொருளாதாரம் உயர்வடையும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

திறமையாக செயல்படும் நீங்கள் தலைமையில் அமர்ந்து பலருக்கு உதவிகளை செய்வீர்கள். அரசாங்க அதிகாரிகளில் ஒத்துழைப்பும், உதவியும் கிடைக்கும். பொது மக்களின் பிரச்சினைகளில் முக்கியம் காரியத்தை நிறைவேற்றி தருவீர்கள். பொருளாதாரத்தில் மேன்மையை அடைவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் முன்பைவிட சிறப்பாக செயல்படுவீர்கள். வீட்டு உபயோக பொருட்கள், வெளிநாட்டு பொருட்கள் விற்பனையின் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். திருமண வாய்ப்புகள் ஒரு சிலருக்கு அமையும். நகை அடகு கடைகள் சிறப்பாக அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெறும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் கலைநிகழ்ச்சிகளில் ரசிகர்களின் ஆதரவை பெறுவீர்கள். எதிலும் உங்களின் நிலை உயரும் புதிய செலவுகள் வந்து பொருளாதாரத்தில் சரிவு ஏற்படும். நினைத்ததை அடைய சில முயற்சிகளை தொடர்ந்து எடுக்க வேண்டி வரும்.

### பெண்களுக்கு

பெண்களின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டி வரும். திருமண வாய்ப்பு சிலருக்கு அமையும். சுயதொழிலில் வளர்ச்சியை காண்பீர்கள். பொருளாதாரம் வளம் பெறும்.

### மாணவர்களுக்கு

ஆசிரியர் பயிற்சி, பொருளாதாரம் வாணிபம் போன்ற கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். கணக்குகளில் கவனம் செலுத்த வேண்டி வரும்.

### இம்மாதம் உங்களின் சந்திரா ஷ்டம நாட்கள்

24.07.2016 ஞாயிறு காலை 09.34 முதல் 26.07.2016 செவ்வாய் பகல் 12.19 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சோதனைகளை சாதனைகளாக ஆக்கி காட்டும் திறமை உருவாகும். கருத்து வேறுபாடுகளுடன் பிரிந்தவர்களை இணைத்து செயல்படுவீர்கள்.

#### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் பல சோதனைகளை சந்தித்து வந்த உங்கள் எதிர்காலம் சிறப்பாக அமையும். கருத்துகளில் ஒற்றுமையை ஏற்படுத்தி கொள்வீர்கள்.

#### உத்திரம் 1ஆம் பாதங்கள்

கடன் தொல்லைகளிலிருந்து மீண்டு வருவீர்கள். குடும்ப ஒற்றுமை மகிழ்ச்சியை தரும். சகோதரர்கள் இணக்கமாக இருப்பார்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள் : **சிவப்பு, வெண்மை, பச்சை**

அதிர்ஷ்ட திசைகள் : **கிழக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு**

அதிர்ஷ்ட கிழமைகள் : **ஞாயிறு, திங்கள், புதன்**

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமை ராகுகாலத்தில் பைரவரையும், வெள்ளிக்கிழமை ராகுகாலத்தில் அம்மன் வழிபாடு தொடர்ந்து செய்து வர நினைத்ததை அடைவீர்கள்.



## மத நல்லிணக்கம்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" இது மத நல்லிணக்கத்திற்கு அடிப்படை. போரும் பூசலும் எப்போது வெறுக்கத்தக்கது. உண்மையான மதம் எப்போதும் மக்களை ஒன்றுபடுத்துவதாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

சூரியனின் ஆதிக்கம் பெற்று கம்பீரமாக செயல்படும் சிம்ம ராசி வாசகர்களே! உங்களின் ராசியில் இதுவரை ஜென்ம குருவாக இருந்து பல்வேறு சோதனைகளையும் மன அழுத்தத்தையும் தந்து வந்த குருபகவான் இனி இரண்டாமிடத்தில் அமர்ந்து மறைவு ஸ்தானத்தையும், தொழில் ஸ்தானத்தையும் பார்வை இடுவது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொடர்ந்து பல வழிகளில் தடைகளை பெற்றும் ஏணி மீது ஏறும் போது பல சரிவுகளையும் சந்தித்து வந்தீர்கள். இனி அதிலிருந்து விடுதலை பெறுவதுடன் தெளிவான மனநிலை பெறுவீர்கள். பெண்களுக்கு முன்னேற்றமும் தாலி பாக்கியமும் பெறுவீர்கள். கணவனை இழந்தவருக்கு வேறு வரன் கிடைக்கும். உடல் நலமில்லாத கணவன் உடல் நலன் தேறி ஆரோக்கியமாக இருப்பார். உங்களின் ராசிக்கு இரண்டாமிடமான தனஸ்தானத்தில் குரு அமர்ந்து பொருளாதாரத்தில் வளர்ச்சியையும் மேலும் முன்னேற்ற பாதையையும் பெற்று தருவார். வளமான வாழ்க்கை சூழ்நிலை உருவாகும் கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை உண்டாகும். புதிய கடன் வாங்கி பழைய கடன்களை அடைப்பீர்கள். நீண்ட நாள் வராமல் இருந்த கடன் தொகை வசூலாகும். பொருள் ஈட்டுவதில் இருந்த தேக்கநிலை மாறி சுபிட்சம் பெறுவீர்கள். வரவுக்கு தகுந்த செலவு வந்து சமநிலையாக இருக்கும் வழக்குகளும், தண்டனையும் இனி தள்ளி போகும். அதிலிருந்து ஒரு சிலர் விடுதலை பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். அட்டம ஸ்தானத்தை குரு பார்வை பெறுவது உங்களின் வாழ்க்கையில் பல அவமானங்களிலிருந்து விடுதலை பெறும் வாய்ப்பை பெற்று தரும். நினைத்த காரியத்தை முடிக்கும். வலிமையை பெறுவீர்கள். சொன்ன நேரத்தில் அதை முடித்து கொடுப்பீர்கள். பல வழிகளில் வருமானம் வந்து சேரும். புதிய நண்பர்கள் சேர்க்கை உங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் சொந்த காலில் நிற்கும் வாய்ப்புகள் அமையும்.

உங்களின் தொழில் ஸ்தானத்தை குரு பார்வை இடுவது தொழிலில் இதுவரை இருந்து வந்த நெருக்கடி குறையும். உங்களின் தொழில் அதிபதி சுக்கிரன் குரு பார்வையை பெறும் போது குருவுடன் இணையும் போது வளர்ச்சியை பெறுவதுடன் பொருளாதார மேன்மையும் அடைவீர்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வும், பதவி உயர்வும் இட மாற்றமும் உண்டாகும். இதுவரை தொழிலில் இல்லாமல் இருப்பவர்களுக்கு இனி தொழில் வாய்ப்பு அமையும். வேலை வாய்ப்புக்கு காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். குறைவான சம்பளத்தில் இருந்து வந்தவர்களுக்கு கூடுதல் சம்பளத்துடன் வேறு இடம் மாறி பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும்.

வரும் 17.1.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரம் பெற்று கன்னியிலிருந்து துலாத்திற்கு சென்று வருவது சிம்ம ராசிக்கு நல்ல பலனை தருவதுடன் கடந்த கால பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகளை எடுப்பீர்கள். பிரிந்த சொந்தங்கள் மீண்டும் இணைவார்கள். சகோதரர் மூலம் நன்மை அடைவீர்கள். குல தெய்வ வழிபாடுகள் செய்வீர்கள்.

**பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்பதால் பித்ருகளுக்கு பூஜை செய்வதன் மூலமும் சூரிய நமஸ்காரம் செய்வதும் அமாவாசைக்கு பசுக்களுக்கு பழம் உணவு வழங்குவதன் மூலம் தீமை களை களைந்து நன்மை பெறுவீர்கள்.**



### "அறவாழி அந்தணன்"

இல்லற ஒழுக்கங்கள் முறையாகக் கடைப்பிடிக்கும் போதுதான் இல்லறம் நல்லறமாகப் பொலிவுறும். இறைவனை "அறவாழி அந்தணன்" என்று கூறியதன் மூலம், "இறைவன் அறக்கடலாக விளங்குகிறான் என்று வள்ளுவர் சுட்டிக் காட்டினார். "அறத்தின் நாயகன்" என்று ஸ்ரீராமனும், "அறம் வளர்த்த நாயகி" என்று அம்பிகையும் போற்றப்படுகிறார்கள். அறவாழ்க்கை வாழ்பவனைத் தேடி இறைவனே செல்கிறான். இதை கர்ணனின் இறுதிக்காலத்தில், அவனைத் தேடி கண்ணனே சென்றதன் மூலம் நாம் நன்கு உணரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருமாளின் திருவருள் பெற்ற முதலாழ்வார்கள்!

**வைணவ பக்தி இயக்கம் ஆழ்வார்கள் எனப்பட்ட அடியாளர்களால் துவங்கப்பட்டது. முதல் மூன்று ஆழ்வார்கள் எனப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் மூவரும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். இவர்கள் பாடிய திருவந்தாதியின் விளைவால் நாராயணன் காட்சிகொடுத்த திறன் கூறுவதாக இப்பகுதி அமைகிறது.**

## பொய்கையாழ்வார்

முதல் ஆழ்வார் எனப்படும் பொய்கையாழ்வார் காஞ்சியில் உள்ள திருவெஃகா என்னும் திருப்பதியில் உள்ள பொய்கையில் தாமரை மலரின் திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான பாஞ்சஜன்யம் என்னும் சங்கின் அம்சமாகத் தோன்றினார். பொய்கையில் உதித்ததால் பொய்கையாழ்வார் எனப்பட்டார். பொய்கையாழ்வார் பாடிய நூறு பாசுரங்கள் முதல் திருவந்தாதி எனப்பட்டது.

## பூதத்தாழ்வார்

முதன் மூன்று ஆழ்வார்களில் இரண்டாவதாக திகழ்பவர் பூதத்தாழ்வார். இவர் மாமல்லபுரத்தில் ஒரு குருக்கத்தி மலரில் திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான கௌமோதகியின் அம்சமாக பொய்கையாழ்வார் தோன்றிய மறுநாளே அவதரித்தார். இவர் திருமாலைப் போற்றிப் பாடிய நூறு வெண்பாக்கள் இரண்டாம் திருவந்தாதி எனப்படுகிறது.

## பேயாழ்வார்

முதல் மூன்று ஆழ்வார்களில் மூன்றாவதாக திகழ்பவர் பேயாழ்வார். மயிலாப்பூர் கேசவப் பெருமாள் கோயிலில் உள்ள கிணற்றில் மலர்ந்திருந்த செவ்வல்லிப்பூவில் திருமாலின் பஞ்சாயுதங்களில் ஒன்றான நந்தகம் என்ற வாளின் அம்சமாக, பூதத்தாழ்வார் தோன்றிய மறுநாள் அவதரித்தார். பேயாழ்வார் திருமாலைப் போற்றிப் பாடிய நூறு பாசுரங்களும் மூன்றாம் திருவந்தாதி எனப்படும்.


## முதலாழ்வார்கள் கண்ட காட்சி

முதல் மூன்று ஆழ்வார்களும் உணவு, உடை உறைவிடம் பற்றிச் சிந்தனையில்லாமல் ஊர் ஊராகச் சென்று இறைவனைத் தரிசித்தனர். ஒரு நாள் தங்கிய ஊரில் மறுநாள் தங்கியதில்லை. இப்படி இம்மூவரும் தனித்தனியே நாடோடிகள் போல் வாழ்ந்து வந்ததால் இம்மூவரும் ஒருவரையொருவர் அறியவும், மூவரையும் பற்றி உலகோர் அறியவும், இவர்கள் மூலம் திவ்யப்பிரபந்தங்களின் தொடக்கம் ஏற்படவும் வேண்டும் என்பது பெருமாளின் எண்ணமாக இருந்தது. அதன் விளைவு மூவரும் திருக்கோவிலூருக்கு வரும் சூழ்நிலை ஏற்பட்டது.

ஒரு நாள் மாலை நேரம், முதலில் வந்த பொய்கையாழ்வார் கோவிலில் உலகளந்த பெருமாளைத் தரிசித்துவிட்டு வெளியே வந்ததும் இருட்டின் காரணமாக அருகில் இருந்த மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தில் ஒண்டுவதற்காக கிடைத்த இடத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

சிறிது நேரம் கழித்து பூதத்தாழ்வார் அதே ஆசிரமத்துக்கு வந்து வெளியில் நின்றுகொண்டு இரவுப்பொழுதை கழிக்க இடம் கிடைக்குமா என்று கேட்டார். உள்ளிருந்த பொய்கையாழ்வார் "இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்" என்று கூறினார். பேயாழ்வாரும் வர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவரையும் அழைத்து மூவரும் நின்று கொண்டிருந்தனர். அப்பொழுது மழைத் தூறலும் இருந்தது.

இருட்டில் மூன்று ஆழ்வார்களும் ஒருவரை மற்றொருவர் காணமுடியால் நின்று கொண்டிருந்த பொழுது பெருமாள் அங்கு தோன்றி, அம்மூவரும் அறியாமல் அவர்களருகில் நான்காவது ஆளாக நின்று நெருக்கத் தொடங்கினார்.

இறைவனின் லீலைகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்திருக்கையில் இப்படி நெருக்கும் நான்காவது நபர் யார் என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டனர். நெருக் கல் தாங்க முடியாமல் பொய்கையாழ்வார்


“வையம் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காக” என்று தொடங்கும் நூறு பாக்களைக் கொண்ட முதல் திருவந்தாதியைப் பாடினார். பின்பு பூதத்தாழ்வார்” அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடு திரியா” எனத் தொடங்கும் நூறு பாசுரங்களைக் கொண்ட இரண்டாம் திருவந்தாதியைப் பாடினார்.

இந்த இரண்டு அந்தாதிகளும் பாடப்பட்டபின் ஏற்பட்ட பிரகாசமான ஒளியில் மூவரும் எம்பெருமானையும் தேவியையும் ஒருங்கே காட்சி கண்டனர். பிறகு பேயாழ்வார் “திருகண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கண் அணி நிறமும் கண்டேன்” எனத் தொடங்கும் நூறு பாசுரங்களைக் கொண்ட மூன்றாம் திருவந்தாதியைப் பாடினார்.

திருக்கோவிலூரில் நாராயணனின் காட்சி கிடைத்த பிறகு முதல் மூன்று ஆழ்வார்கள் சேர்ந்து பல வைணவத் திருப்பதிகள் சென்று இறைவனை தரிசித்துக் கொண்டு திருமழிசை அமைவதற்கு பின்புலமாக பெருமானின் லீலைகள் அமைந்திருந்தன.

அந்தாதிகளின் தொடக்கமாக முதலாழ்வார்கள் இருப்பதின் விளைவே. அவர்கள் மூத்த ஆழ்வார்களாகவும் கருதப்படுகின்றனர்.



## வாழ்க்கையை உயர்த்தும் ஒழுக்கம்!

ஒழுக்கம் என்பது நமக்கு நாமே வகுத்துக் கொள்ளும் கட்டுப்பாடு அது வேலியாக இருந்து நம்மைப் பாதுகாக்கும். வாழ்க்கையில் ஒழுங்கு முறை இருக்க வேண்டும் என்பதை, “ஒழுக்கம்” என்று நமது பெரியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அமைந்த சத்தியம், தர்மம், அகிம்சை, தியாகம், தொண்டு போன்ற நிலையான ஒழுக்கங்களை “சன் மார்க்கம்” என்கிறோம். ஒழுங்கும் கட்டுப்பாடுமே ஒருவரது வாழ்க்கையை உயர்ந்த வாழ்க்கையாக ஆக்குகிறது. ஒழுங்கற்ற வாழ்க்கை வாழ்வது முடிவில் துன்பத்தையே தரும். ஒழுக்கமற்ற சூழ்நிலையில் வாழ்வது பாம்புடன் ஒரே வீட்டில் வாழ்வது போன்று பயத்திற்குரியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீராத வினைகளையும் நீக்கிடும்

# தீர்த்தகிரீஸ்வரர்!

உலகில் சிவாலயங்கள் பலவும் உள அவற்றுள் மிக்க சிறப்புடையவை வெகு சில மட்டுமே. அவற்றுள் ஒன்று தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் தீர்த்தமலை என்னும் சிற்றூரில் உள்ள ஸ்ரீ தீர்த்தகிரி ஈஸ்வரர் திருக்கோயில்.

இத்தீர்த்தமலை அரூரில் இருந்த 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மூலவர் பெயர் ஸ்ரீ தீர்த்தகிரி ஈஸ்வரர், அம்பாள் பெயர் ஸ்ரீ வடிவாம்பிகை அம்மன். இக்கோயில் பழம்பெருமையும், சொல்லற்கரிய பெருஞ்சிறப்பும் கொண்டது.

சுயம்பு லிங்கமாக மலை மீது இத்திருக்கோயில் அமைந்துள்ளது. 1000 ஆண்டுகளுக்கும் முந்தியது இக்கோயில்.

இராஜ இராஜ சோழன் இச்சிவாலயத்தில் சிறப்பு கருதி இங்கு தங்கி இறைவனை வழிபட்டார் எனவும், இங்குள்ள தீர்த்தங்களில் நீராடி மகிழ்ந்தார் எனவும் வரலாறு தெரிவிக்கிறது. அவருக்குப் பின் அவரது மகன் இராஜேந்திர சோழனும் இக்கோயிலின் இறைவனை வழிபட்டு உள்ளார். பின்னர் கங்கர்கள், நாயக்கர்கள் இனத்தைச் சேர்ந்த மன்னர்கள் இக்கோயிலுக்குத் திருப்பணி ஆற்றியுள்ளனர். இராஜபுத்திர மன்னர் ஒருவரால் மூலவர் கோயில் கட்டுப்பட்டுள்ளது. இது 1000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இங்கு இராமர் தீர்த்தம், அகத்தியர் தீர்த்தம், அக்னி தீர்த்தம் குமார தீர்த்தம், கௌரி தீர்த்தம் எனப் பல்வேறு பெயர்களில் தீர்த்தங்கள் உண்டு.

இக்கோயிலின் புராதனச் சிறப்புகள் குறித்து 16 கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன. இக்கோயிலில் உள்ள தீர்த்தங்கள் மருத்துவத் தன்மை வாய்ந்தவை. பல பிணிகளை நீக்கும் சக்தி கொண்டவை. அறிவியல் ரீதியாகப் பார்க்கும் போது உயர்தரமான சத்துப் பொருட்கள் கொண்டவையாக இத்தீர்த்தங்கள் விளங்குகின்றன. இராமாயண காலத்து கதைப்படி, அவதார புருஷர் ஸ்ரீ இராமபிரான், இராவணனை யுத்தத்தில் கொன்றதால் உண்டான பிரம்மஹத்தி தோஷம் போக்க முயற்சிகள் மேற்கொண்டார். ஹரிமலை, தவக்கோலமலை எனவும் சிறப்பித்துக் கூறப்படும் தீர்த்தமலையில் உள்ள தீர்த்தத்தில் நீராடி ஈஸ்வரனை வழிபட்டு சாப விமோசனம் பெறுவாயாக! என்று அவருக்கு அசரீரி கேட்டது.

அவர் அரூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள ஸ்ரீ வர்ணீஸ்வரர் திருக்கோயிலை அடைந்தார். அங்கு முனிவர் ஒருவர் தவத்தில் லயித்திருந்தார். பரம்பொருளான இறைவனே இராமனாக இங்கு வந்துள்ளான் என உணர்ந்த அம்முனிவர்,அங்கேயுள்ள வாயு, வர்ண தீர்த்தங்களைப் பற்றி இராமபிரானுக்கு கூறிவிட்டு தீர்த்தமலைக்கு அழைத்துச் சென்றார்.


மதிய வேளை, 12 மணிக்குள் சிவனுக்கு அபிஷேகம், பூஜை செய்ய வேண்டியிருந்தது. இராமர், வாயு மைந்தன் அனுமனை காசி சென்று கங்காஜலம் கொண்டுவரப் பணித்தார். அவர் வரு வதற்குள் பூஜை வேளை நெருங்கிவிட்டதால், ஜலம் வேண்டும் பொருட்டு அருகிலிருந்த கற்பாறை மீது ஸ்ரீ இராமர் அம்பு தொடுத்தார். அதிலிருந்து தீர்த்தம் வழிந்தது. இன்னபிற தீர்த்தங்களும் அப்போது உரு வானவையே. சிவபூஜை நல்லபடியாக முடிந்தது. சிவன் அனைவருக்கும் தரிசனம் அளித்தார். அப்போது அனுமன் கங்கா ஜலத்தை செம்பில் கொண்டு வந்தார். சிவபூஜை நிறைவு பெற்றதை எண்ணி கூஜாவைத் தூக்கிப் போட்டார் அனுமன். அந்த கங்காஜலமும், செம்பும் விழுந்த இடம் "அனுமன் தீர்த்தம்" என்றானது. அனுமன் சிவதரிசனம் காணாமல் மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வர்ணீஸ்வரர் கோயில் அருகே அப்போது இராமர், சீதை, இராமர், சீதை, இலட்சுமணன், அனுமன் படைகளோடு உடன் வந்த முனிவர் அனுமனை சமாதானப்படுத்தினார். பிரதோஷ நேரம் முடியும் தருணமாதலால் சிவனை வழிபடச் சொன்னார் முனிவர். அனுமனும் அங்ஙனமே செய்து முடித்தார். இறுதியாக சிவன், பார்வதி, முனிவர்கள், சித்தர்கள், சிவகணங்கள், கன்னிமார்களோடு இறைவன் அனுமனுக்குத் தரிசனம் தந்தார். தான் நடத்திய திருவிளையாடல் இது எனப் பகன்றார் இறைவன் சிவனார்.

தற்பொழுதும் இங்கு வரும் பக்தர்கள் அனுமன் தீர்த்தம் சென்று நீராடி, தீர்த்தமலை வந்து தீர்த்தங்களில் நீராடி ஈஸ்வரன், ஈசுவரி இதர தெய்வங்களை தரிசித்தால் தீராத வினைகள் தீரும். அனைத்துப் பேறுகளும் கிடைக்கும் என பக்தர்கள் நம்புகின்றனர்.



அருணகிரி நாதர் இக்கோயில் பற்றிப் பாடியுள்ளார். யாழ்ப்பாணம் எல்லப்ப நாவலர் என்பவர் இக்கோயில் குறித்து "தீர்த்தகிரி புராணம்" பாடியுள்ளார். மாசி மகம், பௌர்ணமி தினத்தன்று கொடியேற்றி 10 நாட்கள் உற்சவம் நடக்கும். திருக்கல்யாணம், தேரோட்டம் நடைபெறும். பக்தர்கள் வந்து இறைவனை வழிபட்டு பலன் பெறுவர்.

காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை கோயில் நடை திறந்திருக்கும். சென்னையில் இருந்து திருப்பத்தூர் வந்து அரூரிலிருந்து தீர்த்தமலை வரலாம். திருவண்ணாமலையில் இருந்து தானிப்பாடி நதிப்பள்ளி வழியாக தீர்த்தமலை வரலாம். அரூரிலிருந்து தொடர்ந்து பேருந்து வசதி உள்ளது.

வீ. இராமச்சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருணனும் வாசுதேவனும்!



**ஒவ்வொரு ஏகாதசி அன்றும் ஆயர்பாடி மக்கள் உபவாசம் இருந்து மறுநாள் பஜனை செய்வது வழக்கம். இரவு முழுவதும் கண் விழிப்பர். பஜனைப் பாடல்களைப் பாடிப் பகவானைத் தொழுவார்கள். மறுநாள் துவாதசியில் அதிகாலை நீராடி அவர்கள் கோகுலம் திரும்புவார்கள்.**

அப்படிப்பட்ட ஏகாதசிகளில் ஒரு ஏகாதசி இரவில் அவர்கள் உற்சாகம் மேலிட்டு மகிழ்ந்தனர். அந்த உற்சாகத்தில் விடிவதற்கு வெகு நேரம் இருக்கும் போதே. காலைப் பொழுது நெருங்கி விட்டது என நினைத்தார்கள். நீராடப் புறப்பட்டு மடுவுக்குள் இறங்கினார்கள். அந்த சமயம் யமுனையில் வருணனுடைய தூதர்கள் நீராடிக் கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு நந்த கோபரை யார் என்று தெரியாது. ஆக அச்சமயம் கோபாலர்களுடன் மடுவில் இறங்கி நீராடிக் கொண்டிருந்த நந்தகோபரைப் பிடித்து இழுத்துக் கொண்டு தங்கள் லோகத்திற்குச் சென்றார்கள். அச்சமயம் அவருடன் நீராடி வெளியேறிய கோபாலர்கள் நந்த கோபரைக் காணாமல் திடுக்கிட்டார்கள். ஒரு சிலர் மடுவிலே இறங்கி மூழ்கித் தேடிப் பார்த்தார்கள். அவரைக் காணாமல் பயந்து கிருஷ்ணனிடம் வந்து முறையிட்டனர்.

கிருஷ்ணன் நடந்ததை உணர்ந்தான். அவர்களைத் தேற்றிவிட்டு சீக்கிரமே நந்தகோபரை அழைத்துவருவதாகச் சொன்னான். கண்ணனாகிய வாசுதேவன் வருணனுடைய உல்கத்திற்குப் போனான். அவன் வருகையைக் கண்ட வருணன் அவன் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து வணங்கித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகு சொன்னான் "பிரபோ உங்கள் வருகையால் என் உலகமே புனிதமுற்றது. அது மட்டும் அல்ல. தங்கள் திருவடிகளைத் தொழுதெற்றும் பாக்கியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடியேனுக்கு கிடைத்தது!" என்று மகிழ்ந்தான்.

மேலும் அவன் சொன்னான் "பிரபோ! தாங்கள் தங்கள் தந்தையைத் தேடி வந்திருப்பதை அறிவேன். அகாலத்தில் அவர் நீராடியபோது தெரியாத்தனமாக என் ஆள்கள் அவரைப் பிடித்து வந்து விட்டார்கள். நான் அவரை மிகவும் கௌரவமாக இங்கு நடத்தினேன். தாங்கள் அவரை அழைத்துச் செல்லுமாறு பிரார்த்திக்கிறேன். என் ஆள்கள் தெரியாத்தனமாக நடந்து கொண்டதற்காகப் பொறுத்தருள வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான்.

ஸ்ரீ கிருஷ்ண நந்தகோபரை மீட்டதும் கோபாலர்களுக்கு வைகுண்ட தரிசனம் அளித்தார். அதைக் கண்டுகளித்த கோகுல வாசிகள் வைகுண்டத்தைவிட கண்ணன் வசிக்கும் கோகுலமே சிறந்தது என்று எண்ணினார்கள்.

## கோபியர் பெற்ற கிருஷ்ண தரிசனம்

கோபியர்கள் கொண்ட சௌபாக்கிய மதத்தையும் கர்வத்தையும் அடக்கக் கிருஷ்ணன் மறைந்ததும், அவனைக் காணாமல் கூட்டத்தின் தலைவனை இழந்த பெண் யானைகளைப் போல அவர்கள் வருந்தினார்கள்.

அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பகவானுடைய லீலைகளைப் பாடினார்கள்.

எங்கும் ஆகாயம் போல் வியாபித்து விளங்கும் எங்கள் பிரபு கிரிதர கோபாலனைக் கண்டீர்களா? என்ற வன விருட்சங்களைக் கேட்டுக் கொண்டே பித்தர்கள் போலத் திரிந்தார்கள்.

"துளசியே! நீ அவருக்குப் பிரியமானவள் ஆயிற்றே! கண்ணனை நீ கண்டாயா? ஹே மல்லிகை மாலதிப் பூக்களே! பிச்சிப் பூங்கொடியே! பிரியமான எங்கள் பிரபு கண்ணன் உங்களைத் தொட்டுத் தன் பிரியத்தை வளர்த்துக் கொண்டாரா? அதை நீங்கள் அறிவீர்களா?" என்று புலம்பினார்கள்.

அங்கே பிருந்தாவனத்தில் இப்படிப் பித்தேறித் திரியும் அவர்கள் கண்களால் பகவானுடைய காலடிகளைக் கண்டார்கள். அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றால் அங்கே ஒரு பெண்ணின் காலடிச்சுவடுகள் பதிந்திருப்பதைக் கண்டு மனம் வருந்தினார்கள்.

அப்போது அவர்கள் இப்படி பேசிக் கொண்டார்கள். எந்தப் பெண்ணை கண்ணன் அழைத்துச் சென்றானோ அவள், கண்ணன் தன்னிடம் மற்றக் கோபியரைக் காட்டிலும் அதிகம் பிரியம் காட்டுவதால் தன்னை மேலானவள் என்று நினைத்தாள். அப்படிக் கர்வம் கொண்ட அவள் கண்ணனிடம், "கண்ணா! என்னால் இனி ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. களைப்பாக இருக்கிறேன். உனக்கு என்னை எங்கே கொண்டு செல்ல விருப்பமோ அங்கே நீயே கொண்டு செல்வாயாக!" என்றாள்.

இவ்வாறு கேட்டுக்கொண்ட கோபிகையின் வார்த்தைக்குச் செவிசாய்த்து "என் தோள் மீது ஏறிக்கொள்!" என்று கண்ணன் சொன்னான். அவள் ஏறப் போகும் சமயம் சடக்கென்று கண்ணன்மாயமாய் மறைந்தான். அவள் தவித்தாள். தரையில் புரண்டு புரண்டு "நாதா! பிரபோ! ரமணா! புஜபலம் பொருந்தியவனே! நீ இப்போது எங்கு இருக்கிறாய்? தவிக்கும் என்னைத் தடுத்து ஆட்கொள்ள வாரும்!" என்று புலம்பினாள்.

இப்படிப் பிரிவாற்றமையால் வருந்தும் தோழியை அவள் அடிச்சுவடு பின்பற்றி வரும் கோபியர் சற்று தூரத்தில் கண்டார்கள். அவள் கோவிந்தனிடம் பெற்ற நன்மதிப்பில் கர்வம் அடைந்து விட்டதால் வந்த அவமானத்தை அவள் சொல்லக் கேட்டு ஆச்சரியப்பட்டனர். நிலா வெளிச்சம் இருக்கும் வரை வானத்தில் கிருஷ்ணனைத் தேடிய பெண்கள் அங்கே இருள் சூழ்வதைக் கண்டு திரும்பினார்கள்.

எனினும் வீடுகளை மறந்து அவனுடைய லீலா வினோதங்களைப் பாடிய படியே யமுனைக் கரையில் அவனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

(தொடரும்)

ஏ.எஸ்.வழித்துணை ராமன்



### அஞ்ஞானமே துன்பத்திற்குக் காரணம்!

ஆசைகள் தான் மனிதனின் அழிவிற்குக்காரணம். ஆசைகளை வரையறை இல்லாமல் வளர்த்துக்கொள்பவர்கள். துன்பத்தையும் வளர்த்துக்கொள்கிறார்கள். முன் செய்த பாவங்கள் துன்பத்தை அனுபவிப்பதன் மூலம் நீங்குகின்றன. நமக்கு ஏற்படும் துன்பங்களும் சோதனைகளும் தான் வாழ்க்கையை நாம் சரியாகப் புரிந்து கொள்ள உதவுகின்றன. இறைவனின் அடியார்களாக நாம் வாழவேண்டும் என்பது இயற்கை வகுத்த வழி. இந்த விதியை மீறி நாம் உலகிற்கு அடியார்களாக வாழ்வதால்தான் நமக்குத் துன்பம் ஏற்படுகிறது. இந்தக் கசப்பான உண்மையைக் காலம் கடந்தே நாம் உணர்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்ச சந்நியாச யோகம்



அர்ஜுனன்: தீயவற்றை அழிக்க வென்றே தோன்றிய கண்ணனை வணங்கி சந்நியாசம், தியாகம் ஆகியவற்றின் சரியான விளக்கங்களை தனித்தனியே எடுத்துச் சொல்லும்படி கேட்கிறான்.

இம்மனிதப் பிறவி எடுப்பதின் நோக்கம் என்ன? நன்முறையில் வாழ்ந்து நற்பெயர் எடுத்துச் செல்வது நலம் என்று சான்றோர் பலரும் கூறுவர். இந்த வாழ்நாளில் செல்வம், புகழ், பட்டம், குழந்தைச் செல்வம், ஆரோக்கியம், தீர்க்காயுள் போன்றவற்றையும் இறந்த பின் மறுமையில் சொர்க்க பதவியும் பலரும் விரும்பக்கூடிய ஒன்றாகும். இத்தகைய பலன் கருதிச் செய்யும் செயல்களைத் துறப்பது தான் சந்நியாசம். அந்தச் செயல்களையெல்லாம் செய்து விட்டு, அதனால் வரும் பலன்களை எண்ணாமல் இருப்பது, துறந்து விடுவதே தியாகம் ஆகும். ஆசையை விட்டு வாழ்வதைப் போல், எந்தவொரு செயலையும் செய்யாது விடுவது நலம் என்று சிலர் எண்ணுவர். வேள்வி, தானம், தவம் ஆகிய செயல்களை செய்தேயாக வேண்டும். இவற்றைச் செய்யாமல் விடுவது நல்லதன்று என்று சிலர் எண்ணுவர்.

இப்படி பிறரது கருத்துக்களை எடுத்துக் கூறி விட்டு, கண்ணன் தன்னுடைய கருத்தை இங்கே விளக்குகிறார். வேள்வி, தானம், தவம் ஆகிய மூன்று செயல்களையும் விடாமல் செய்தே தீர வேண்டும். உயிர்களுக்கு அவர்கள் வாழ்நாளில் விதிக்கப் பட்ட செயல்களை விட்டு விட்டு எதுவும் செய் யாமல் இருப்பது என்பது முறையற்றது. இந்த செயல்களை செய்யாது எடுத்தால் அறிவினைத் தெளிய வைத்து அறிஞர்கள் ஆவது முடியாது. இந்தச் செயல் களை உறுதியாகச் செய்ய வேண்டும். ஆனால் அதனால் வரும் பலன்களின் மேல் இருக்கும் ஆசையையும் பற்றினையும் துறக்க வேண்டும் இதுவே தியாகம்.

இந்தத் தியாகத்தையும் கண்ணன் மூன்று வகையாக பிரித்து விளக்குகிறார். செய்கின்ற செயல் களையெல்லாம் தன்னுடைய கடமையாக எண்ணி செயல்பட்டு, அதனால் விளையும் பலன்களின் மேல் பற்றில்லாமல் இருப்பது சாதவீக தியாகம். விதிக்கப்பட்ட செயலை, உடல் வருத்தி செய்ய வேண்டும் என்கிற எண்ணத்தாலும், அதனால் துன்பமே வந்து சேரும் என்ற விரக்தி மனப்பான்மை கொண்டு எதுவுமே செய்யாது இருப்பது ராஜச தியாகம், விதிக்கப்பட்ட செயல் என்ன என்பதையே அறியாமல், மதிமயக்கத்தால் அதைச் செய்யாமல் விடுவது தாமசத் தியாகமாகும். பணக்காரனைப் போன்று தானும் சுக ஜீவனம் செய்ய வேண்டும் என்று கூலியாள் தன் வேலையை நிறுத்தினால் அவன் வருந்துவான். தமோ குணத்தினின்று உதித்த நித்திய கர்மத்தியாகம் இது போன்றதே என்று குறிப்பிடுவார் சுவாமி சித்பவானந்தர்.

சத்வ குணம் கொண்டவன் புத்தியில் சிறந்தவன். அவன் ஒரு தொழிலை செய்ய வேண்டும் என்று பேராசையினால் செய்வது கிடையாது. அது நல்லது என்று செய்யத் துணிவது கிடையாது. அது தீயது என்ற செய்யாமல் விட்டு விடுவதும் கிடையாது. தான் செய்ய வேண்டுவனவற்றை, செய்ய வேண்டிய இடத்தில் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும். மனித உடல் எடுத்தவன் செயல்களைச் செய்யாமல் அறவே விட்டு விடுவது முடியாது. ஆனால் அந்தச் செயல்களைச் செய்வதால் வரும் பலன்களைத் துறப்பது என்பது கடினமான விடயமன்று. அத்தகைய தியாகத்தைச் செய்ய முடிபவனையே தியாகி என்று அழைக்கின்றனர்.

➤ சா.மெய்யப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாமும் ஆகின்ற பக்தி!

பக்தியோகம் என்பது கடவுளை தூய வழியில் எய்துவதாகும். இது ஆதியிலிருந்து அந்தம் வரை அன்பையே மூலாதாரமாகக் கொண்டிருக்கும். கடவுள் மீது உண்டான அன்பின் முதிர்ச்சி ஒரு வினாடியளவே தோன்றினாலும், அதுவே எல்லையற்ற சுயேச்சை நிலையாகும். "பக்தி என்பது ஆண்டவனிடத்தில் ஒருவன் கொண்டுள்ள நெருக்கமான அன்புறவாகும். ஒருவனுக்கு அத்தகைய பக்தி உண்டாகுமானால், அவன் அனைவரையுமே நேசிக்கிறவனாகிறான். அவன் யாரையும் வெறுப்பதில்லை. எப்போதும் அவன் மனநிறைவுள்ளவனாயிருக்கிறான்" என்று தமது பக்தி சூத்திரத்தில் குறிப்பிடுகிறார் நாரத முனிவர். இத்தகைய அன்பை எந்தவிதமான உலகாயத நன்மைக்கும் அவன் பயன்படுத்திக் கொள்வதில்லை. ஏனெனில், உலக ஆசைகள் உள்ள ஒருவனுக்கு அத்தகைய அன்பு தோன்றுவதில்லை. "பக்தி" என்கிற இந்த அன்பு கருமத்தையும் யோகத்தையும் விடப் பெரியதாகும். கருமமும் யோகமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் பக்திக்கோ பயனும் சாதனமுங்கூட பக்தியாகவே உள்ளது. அதன் முடிவும் பக்தியாகவே இருக்கிறது.

ஞானத்துக்கும் பக்திக்கும் அதிக வேற்றுமை இல்லை. இரண்டும் வளைந்து சென்று முடிவில் ஓரிடத்திலேயே சந்தித்துக் கொள்கின்றன. பக்தி யோகத்தின் பெரிய நன்மை என்னவென்றால், நம் நோக்கமான தெய்வ நிலையை எய்த அதுவே இயற்கையானதாகவும், வெகு எளிதாகவும் இருக்கிறது என்பதுதான். அதிலுள்ள குறையாதெனில், அதன் தாழ்வான கட்டங்களில் அது வெறுக்கத்தக்க மதியீனமாக மாறிவிடுவதுதான். பக்தியின் இந்தத் தாழ்ந்த கட்டங்களில் உள்ளவர்கள்தான் பல்வேறு மதங்களிலுமுள்ள மதவெறியர்களாவார்கள். தமக்கு விருப்பமான ஒன்றிடம் அவர்களால் ஒருமுகமாகச் செலுத்தப்படும் பற்றானது அவர்களைப் பிறவற்றை நிந்திக்கத் தூண்டுகிறது. இத்தகைய ஒருமுகமான பற்றுதல் தேவையானதுதான். அது இல்லையேல் பக்தி உண்டாவதில்லைதான். ஆனால் உலகில் எல்லா நாடுகளிலும் சமயங்களிலும் உள்ள பக்குவமடையாத உள்ளங்கள், பிறவற்றை வெறுத்தொதுக்குவதே தம் கொள்கையில் தமக்குள்ள பிடிப்புக்கு அத்தாட்சியென்று கருதிக் கொள்கின்றன. தனது மதத்திலும் அதுகூறும் கடவுள் கொள்கையிலும் தீவிரமான பற்றுள்ளவன் வேறு எந்தக் கோட்பாடுகளையாவது மதத்தையாவது கேள்வியுறுகையில், வெறிபிடித்து ஓலமிடுவதற்கு இதுவே காரணமாயிருக்கிறது.

இந்த ஆபத்து பக்தியின் ஆரம்ப நிலையிலேதான் தென்படுகின்றது. பக்தி முதிர்ந்து உயர்ந்த கட்டத்தை எய்தும்போதுஅதுமறைந்து விடுகின்றது. பக்தியின் உயர் நிலைகளாகும் ஆன்மா, வெறுப்பை வெளியிடுகின்ற கருவியாக ஆகிவிடாத அளவுக்கு அன்புருவான கடவுளுடன் ஐக்கியமாகி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

புதனின் ஆதிக்கம் பெற்ற கன்னி ராசி வாசகர்களே உங்களின் ராசிக்கு இதுவரை விரைய ஸ்தானத்தில் இருந்து நான்கு, ஆறாம், எட்டாமிடத்தை பார்வை இட்டு வந்தார் குரு பகவான். இனி ராசியில் ஜென்ம குருவாகவும் ஐந்து, ஏழாம், ஒன்பதாமிடத்தை பார்வை இடுவது ஜென்ம குரு மன ரீதியான பாதிப்பை தந்தாலும் குரு பார்க்குமிடங்கள் மிக நல்ல பயன்களையும் அதிர்ஷ்ட வாய்ப்புகளை தரும். உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டி வரும். நரம்பு சம்பந்தமான பிரச்சினைகளையும் தோல் சார்ந்த உபாதைகளையும் அடைவீர்கள். இதனால் வைத்திய செலவு செய்ய வேண்டி வரும்.


இதுவரை பல கடன்களையும் தொல்லைகளை யும் அலைச்சலும் அடைந்து வந்த நீங்கள் குரு பெயர்ச்சிக்கு பின் இதிலிருந்து உங்களை தற்காத்து கொள்வீர்கள். மேன்மேலும் உங்களின் அன்பிற்கு பாத்திரமானவர்களால் உங்களுக்கு ஆதாயம் கிட்டும். சகோதரர்களாலும் புத்திரர்களாலும் சிலருக்கு முன்னேற்றம் உண்டாகும். உங்களின் ராசிக்கு சனி பகவான் சாதகமான சூழ்நிலையில் இருந்து வருவதால் இனி நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை பெறலாம். உங்களின் ஐந்தாம் இடமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு பார்வை பெறுவது நன்மையையும் குல தெய்வ வழிபாடுகள் ஆன்மீக சிந்தனைகள், வளர்ச்சி பாதைக்கு எடுத்துச் செல்லும். நல்லவர்களின் சேர்க் கையும் எதிர்கால வளமான நன்மைகளையும் பெறுவீர்கள். உங்களின் களத்திர ஸ்தானத்தை குரு பார்வை இடுவது திருமண தடைகள் நீங்கி திருமண வாய்ப்புகள் அமையும். வீட்டில் சுபகாரியம் நடக்கும். கடல் கடந்து வெளிநாடு செல்ல தாமதம் நீங்கி விரைவில் வெளிநாடுகள் சென்று வருவீர்கள். நீண்ட நாள் சந்திக்காமல் இருந்து வந்த வெளிநாட்டு நண்பரை சந்தித்து மன மகிழ்ச்சியை அடைவீர்கள்.

வெளிநாட்டு வர்த்தக கூட்டு வியாபாரம் சில ருக்கு அமையும். மீனவர்கள் பிரச்சினைகள் நல்ல தீர்வு கிடைக்கும். கடல் சார்ந்த தொழில்கள் செய்து வருபவர்களுக்கு நற்பலன்களும், முன்னேற்றமும் உண்டாகும். தந்தை வழி சொத்துகள் வந்து சேரும். தந்தையின் உடல் நிலை தேறும். கொடுத்து வைத்த இடத்தில் உங்களுக்கு தடையின்றி பணம் வந்து சேரும். எதிலும் உங்களுக்கு எண்ணிய எண்ணம் போல வாழ்வுகள் அமையும். உங்களின் பாக்கிய ஸ்தானத்தை குரு பார்ப்பது தீர்த்த யாத்திரை சென்று வருதல், ஆன்மீக சுற்றுலா சென்று வருதல், நகைகள் வாங்கி மகிழ்தல் போன்ற நன்மைகள் கிட்டும்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரம் பெற்று துலாத்திற்கு சென்று வருவது உங்களின் பல்வேறு வாய்ப்புகளுக்கு வழி வகுக்கும். பெண்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றம் உண்டாகும். திருமண வாய்ப்புகள் கைகூடும். நீண்ட நாள் கடன் முடிவுக்கு வரும். வழக்குகள் விரைவில் தீர்வாகும். மாணவர்களின் தடைப்பட்ட கல்வி முன்னேற்றம் உண்டாகும்.

உங்களின் ராசி பரிகாரம் செய்ய வேண்டியது என்பதால் வியாழக்கிழமைகளில் விநாயகரையும், நவக்கிரக குருவையும் தவறாமல் வணங்கி வருவதுடன் அவருக்கு பிடித்த கடலை மாவு உணவு படைத்து வழி பட்டு வர எல்லாம் சிறப்பாக அமையும்.

### இரும்பு விலங்கும் பொன் விலங்கும்!



பலனை எதிர் பார்த்துச் செய் யும் செயல் அது நல்லதாக இருந்தா லும், கெட்டதாக இருந்தாலும் உரிய காலத்தில் நிச்சயம் பலன் தந்தே தீரும். இந்த வினைகளை அனுபவிப்பதற் காக ஜீவாத்மா மீண்டும் மீண்டும் பிறவிகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும். தீவினை இரும்பு விலங்கு போன்றும், நல்வினை பொன் விலங்கு போன்றும் இருந்து, ஜீவாத்மாவைப் பிறப்பு இறப்புச் சுழ லில் ஆழ்த்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**




கனவில் கண்டதை நனவாகக் எடுத்து செயல்படும் கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராசிநாதனுடன் சுக்கிரனும் சூரியனும் இணைந்து லாப ஸ்தானத்தில் அமர்ந்திருப்பது சிறப்பாகவும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். பொருளாதார தடை நீங்கி வருமானம் அதிகரிக்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் சில சிரமங்கள் இருந்து வந்தாலும் விரைவில் விடுதலை பெறுவீர்கள். தூக்கமின்மையும் உடல் சோர்வும் உங்களை வாட்டிய நிலை மாறி உடல் நலம் தேறும். தொழிலில் பெறும் பங்கு உங்களால் வளர்ச்சியை தந்து உதவியாக இருக்கும். பொருளாதாரம் சிறக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

அரசியல்வாதிகளும், பொது நல விரும்பிகளும் விரைவில் நல்ல வளர்ச்சியையும், நன்மைகளையும் பெற்று விளங்குவீர்கள். பொது கருத்துகளில் உங்களின் பேச்சு அனைவரின் வரவேற்பை பெறும். நினைத்ததை செயல்படுத்த நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றியை பெறுவீர்கள்.



**வியாபாரிகளுக்கு**

வியாபாரிகளுக்கு தனித்திறமை உண்டாகும். வரும் வாடிக்கையாளர்களை கவரும் விதமாக இனிமையாக பேசுவீர்கள். நீண்ட நாள் வராத கடன் வசூல் ஆகும். கல்வி கலைகளும், கல்விக்கு தேவையான உபகரணம் வியாபாரம் நன்றாக இருக்கும். பொருளாதாரம் வளர்ச்சி தரும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையின் பொறுப்பு சிறந்து விளங்கும். இனி வளர்ச்சியை தேடி முன்னேற்றம் காண்பீர்கள். வசனம், பாடல், எடிட்டிங் துறையில் சிறந்து விளங்குவீர்கள். கலைஞர்களின் எதிர்காலம் விரைவில் வளம் பெறும்.

**பெண்களுக்கு**

பெண்களின் திருமண காரியம் விரைவில் பேசுவார்கள். கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிக்கல் மறையும். சுயதொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். உடன்பிறந்தவர் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். பொருளாதாரம் மேன்மை தரும்.

**மாணவர்களுக்கு**

எலக்டிரிக்கல், இலத்திரனியல் கணிணி, கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். தடவியல் ஆராய்ச்சி கல்வி சிறப்பாகவும் பாராட்டும் படியும் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

26.07.2016 செவ்வாய் பகல் 12.20 முதல் 28.07.2016 வியாழன் பகல் 02.40 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

சிறிய தடைகளை தாண்டி விரைவில் நன்மையை அடையும் காலம் மலரும். திருமண காரியம் கைகூடும். தொழிலில் நன்மையும், லாபமும் உண்டாகும்.

**ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

லட்சியத்தை அடைய உங்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் அமையும். குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். அமைதியான செயல்பாடுகள் நிறைவை தரும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

சிற்ப கலைஞர்களுக்கு பொருளாதாரம் பெறுவீர்கள். சித்தமருத்துவர்கள் சிறந்து விளங்குவீர்கள். சகோதரர்களின் ஆதரவு கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** பச்சை, நீலம், பலவண்ணம்

**அதிர்ஷ்ட திசைகள் :** தென் மேற்கு, தெற்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** புதன், சனி, வெள்ளி

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை வணங்கி மஞ்சள் பொடி வைத்து வேண்டுதல் செய்து வர வீண் விரையம் நீங்கும். சனிக்கிழமை விநாயகரை வழிபட்டு வர தடைகள் நீங்கி சுபிட்சம் பெறுவீர்கள்.

## மதம் எழுச்சி பெறும்

**“மிருகபலத்தால் அல்லாமல், ஆன்மீக பலத்தால் மட்டுமே உலகம் எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக, அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத் தான் இந்தப் பணி நடைபெறும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வஜ ஸ்தம்பம் எனப்படும் கொடி மரத்தின் முன் வீழ்ந்து ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

கோபுரம் ஸ்தூல லிங்கம் என்றால் கொடிமரம் சூக்ஷ்ம லிங்கமாகும்.

கொடி மரத்தின் அடிப்பாகம் சதுரமாக இருக்கும். இது இறைவனின் படைப்பை உணர்த்துகிறது. இது ப்ரம்ம பாகமாகும்.

அதன் மேலுள்ள பாகம் எண்கோணமாயிருக்கும். இது காத்தலைக் குறிக்கும். இது விஷ்ணு பாகமாகும். மேலே உள்ள உருண்டு நீண்ட பாகம் ருத்ரனைக் குறிக்கும். அது ஸம்ஹாரத் தொழிலைக் குறிக்கும். ஆகவே கொடிமரம் மும்மூர்த்திகளையும் அவர்கள் புரியும் முத்தொழில்களையும் உணர்த்துகிறது. த்வஜ ஸ்தம்பத்தின் அடியில் வீழ்ந்து வணங்குவது என்பது ஜீவத் தன்மையாகிய அஹங்காரத்தை அடியோடு விட்டுவிட்டு இறைவனிடம் சரணாகதி அடைவது என்பதையே உணர்த்துவதாகும்.

### பலிபீடம்

பலிபீடத்திற்கு பத்ரலிங்கம் என்று பெயர். அதனை அடுத்து நந்தியின் திருஉரு. நந்தி என்பது ஜீவாத்மா ஆன்மாவிலுள்ள ஆணவமலம் பத்ர லிங்கத்தின் பின்னே ஒதுங்கியிருக்கிறது.

ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களையும் பலியிடும் ஸ்தானமே பலிபீடம். இங்கு அஹங்காரம் பலியாகிறது என்பதே உண்மை.

பலிபீடத்துக்கு இடப்பக்கம் வந்து மேற்கு நோக்கிய ஸந்நிதியாயின் இடப்பக்கத்திலும் கிழக்கு அல்லது தெற்கு நோக்கிய ஸந்நிதியாயின் வலப்பக்கத்திலும் நின்று அபிஷேகமோ, நிவேதனமோ நடைபெறாத சமயத்தில் குறைந்தது மூன்று முறை விழுந்து வணங்க வேண்டும்.

சைவ சித்தாந்தம் கூறும் பசு, பதி, பாசம் என்னும் மூன்றனுள் பாசத்தை உணர்த்தும் பலிபீடத்தின் முன் வீழ்ந்து வணங்கி அஹங் காரத்தையும் மமகாரத்தையும் பலியிட்ட பின்னரே தெய்வ சாக்ஷாத்காரம் கிட்டும்.


கோவிலின் எட்டு மூலைகளிலும் எட்டு பலிபீடங்கள் உண்டு. அவை எட்டு திக்கு பாலகர் களுக்கானது. இவைகளுக்கு எல்லாம் தலைமை பலிபீடமே நந்தி தேவருக்கு பின்னால் உள்ள பலிபீடமாகும்.

### கணபதி ஸந்நிதியில்

ப்ரணவாகாரமான பிள்ளையாரை முதலில் வணங்கி விட்டுத்தான் ப்ரதான ஸந்நிதிக்குச் செல்ல வேண்டும். பெரும்பாலும் ஆலயத்தின் கன்னி மூலையில் விநாயகர் ஸந்நிதி இருக்கும்.


விநாயகர் ஸந்நிதியில் முட்டியாக பீடித்த

# கொடிமர





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இரண்டு கைகளினாலும் முன் மண்டையில் ஐந்துமுறை குட்டிக்கொள்ளவேண்டும். வலக் கையை இடக்கையின் முன் வைத்து வலக் கையால் இடதுபுறத்திலும் இடக்கையால் வலது புறத்திலும் முன் மண்டையில் குட்டிக் கொள்வது மரபு.

பின்பு வலக்கையால் இடக்காதையும், இடக் கையால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து வணங்க வேண்டும். இதனை தோப்புக் கரணம் என்பர். தலையில் ஐந்து முறை குட்டிக் கொள்ளும் போது கீழ்க்கண்ட சுலோகத்தைக் கூறவும்.

**சுக்லாம் பரதரம் விஷ்ணும்**
**சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரஸன்ன வதனம் த்யாயேத்**
**ஸர்வ விக்னோப சாந்தயே**

தலையின் இரு பக்கங்களிலும் குட்டிக் கொள்ளும் பொழுது ஞாபக சக்தியைத் தூண்டும் நாடிகள் செயலாக்கம் பெறுகின்றன என்பர்.

உடல் மடிந்து தோப்புக் கரணம் போட்டுத் தலையில் குட்டிக் கொள்வதன் மூலம் நமக்குள் பணிவு ஏற்படுகிறது.

விநாயகர் முன் சிதறுகாய் உடைக்கும் பழக் கமும் உண்டு. இந்தத் தேங்காய் சிதறுவது போல நமக்கு வரும் இடையூறுகள் தூள்தூளாகும் என் பது விடலையிடுவோர் உள்ளக் கருத்தாகும்.

விநாயகர் சந்நிதியில் விநாயகர் பாடல் களில் ஏதேனும் ஒன்றிரண்டைக் கூறலாம். விநாயகர் அகவல் பாராயணம் செய்வது சாலச் சிறந்தது.

விநாயகரை வணங்கிய பிறகு துவாரபாலக விக்ரஹங்களின் முன் சென்று "அடியேன் இறை வனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று துவார பாலகர்களை வணங்கி விட்டுத் தான் உள்ளே செல்ல வேண்டும்.

✦ **ஆர்.பி.வி.எஸ்.மணியன்**

# வழிபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமங்கலக்குடி
பிராண நாதேஸ்வரர்

# சூர்யதோசம் போக்கும் திருத்தலம்!

ஜாதகத்தில் சூரியன் நீசம், பகை, மறைவு, சூரிய திசை, புத்தி பாதிப்புக்கு சூரியனார் கோவில் தஞ்சை திருவையாறு சாலையிலுள்ள திருக்கண்டியூர் வீரட்டம், விழுப்புரம் அருகிலுள்ள திருப்புறவார் பனங்காட்டூர், குன்றக்குடி அருகிலுள்ள சூரக்குடி.,சூரியனார் கோவில் மற்றும் கோனார்க்கில் உள்ளது.

தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்து தர்ப்பைப்புல் விரல்களில் வைத்து செம்பு நீரில் ஒரு முனையை வைத்து மறுமுனையை கைவிரல்களில் பிடித்துக் கொண்டு, ஆதித்ய ஹிருதயம் பாராயணம்



திருக்கண்டியூர் வீரட்டம்



செய்து தீபம் காட்டியபின், நீரை அருந்துவதால் சூரியனாரை பிரார்த்தனை செய்த பலன் கிடைக்கும்.

ஆதித்யஹிருதயம் மிக எளிமையான சிறந்த பரிகாரம் ஆகும். பக்தி சிரத்தையுடன் செய்தால் வாழ்வில் வளம் பெறலாம்.


காலமா முனிவர் கிரக மாற்றத்தால் தனக்கு தொழு நோய் ஏற்படப் போவதை அறிந்து, நவக்கிரகங்களை வேண்ட, கிரகங்கள் அவருக்கு அருள் புரிந்தன. இதையறிந்த பிரம்மன் கோபம் கொண்டு முனிவருக்கு வரவிருந்த நோயை கிரகங்களுக்கு உண்டாகும்படி சபித்து விட்டார். பூலோகம் வந்த நவக்கிரகங்கள் சிவனை நோக்கித் தவமிருந்து சாப விமோசனம் பெற்றன. நவக்கிரகங்கள் தங்களுக்குத் தொழுநோய் ஏற்படாமலிருக்க ஸ்தாபித்த லிங்கத்தைக் கொண்டு எழுந்த ஆலயம் திருமங்கலக்குடி பிராணநாதேஸ்வரர் ஆலயம். ஜாதகத்தில் சூரியன் நீசம், பகை, மறைவு பெற்றவர்கள், ஞாயிற்றுக்கிழமை முதலில் திருமங்கலக்குடி வழிபாட்டை, முடித்துக் கொண்டு எதிர்ப்புறமுள்ள சூரியனார் கோயில் வந்து கோள் வினை தீர்த்த விநாயகரை தீபம் ஏற்றி வழிபட்டு, பின் மூல ஸ்தானம் சென்று உஷா, பிரத்யஷாவுடன் இருக்கும் சூரிய பகவானையும் அவருக்கு எதிரில் உள்ள குரு பகவானையும் தீபம் ஏற்றி வழிபட்டு, பின்பு சந்திரன், கேது, சுக்கிரன், ராகு ஆகியோரையும் தீபம் ஏற்றி வழிபட்டு, பின்பு, ராகு சன்னதி அருகிலுள்ள சண்டிகேசுவரரை வழிபட்டு பின்பு, மீண்டும் வந்த வழியிலேயே திரும்பி வந்து அனைத்து கிரகங்களையும் மறுமுறையும் வழிபட வேண்டும். கடைசியாக மீண்டும் கோள் வினை தீர்த்த விநாயகரை வழிபட்டு, கொடி மரத்தினருகே விழுந்து கும்பிட்டு வழிபட வேண்டும்.

9 கிரகங்களும் ஆயுதம் வாகனமின்றி நின்ற கோலத்தில் காட்சி தருவதால், நவக்கிரக ஸ்தலங்களுக்குத் தனித்தனியே சென்று அடையும் கிரக தோச நிவர்த்தியை இங்கு ஒரே இடத்தில் நவக்கிரகங்களை வழிபட்டு கிரக தோசங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.


சூரியனார்

வழித்தடம்: கும்பகோணத்திலிருந்து ஆடுதுறை சென்று, அங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் ஆலயம் அடையலாம் கும்பகோணத்திலிருந்து பஸ் வசதி உண்டு.

-K. துரைராஜ்


சூரக்குடி


சூரியனார் கோவில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# துலாம்

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**

காலம் அறிந்து கடமை உணர்ந்து செயல்பட்டு வரும் துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு வக்கிர சனி ராசியில் உச்சம் பெறுவதுடன் தொழில் ஸ்தானத்தில் லாபாதிபதி சூரியன் அமருவது. தொழிலில் கூடுதல் வருவாய் பெறுவதுடன் புதிய யுக்திகளில் ஈடுபடுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் தேவைகள் நிறைவேறும். எளிமையான உங்களின் வாழ்க்கை எழுச்சியைப் பெறும். குறுகிய காலத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள். குடும்பத்தில் சிறு சல சலப்பு உண்டாகும். தோட்ட தொழிலாளர்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

அரசாங்கத்தின் உதவிகளை மக்களுக்கு எடுத்து செல்லும் பாலமாக இருப்பீர்கள். குடும்பத்தின் நிலை அறிந்து செயல்படுவீர்கள். அதிகாரிகளின் நட்பு உங்களுக்கு பெறும் உதவியாக அமையும். மருத்துவ செலவு உண்டாகும். புதிய கடன் வாங்கி பழைய கடனை தீர்ப்பீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் லாபாதிபதி அமர்ந்து வளர்ச்சியையும் லாபத்தையும் பெற்று தருவார். கடல் சார்ந்த பொருட்களும், ஏற்றுமதி மூலம் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். வர்த்தக சங்கத்தில் அங்கம் வகித்து மதிப்பை பெறுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் நடிகர், நடிகைகளின் வாழ்க்கை யில் ஏற்றம் பெறுவீர்கள். கலை நிகழ்ச்சிகளிலும், தொலைகாட்சி தொடரில் புதிய வாய்ப்புகளும் வந்து சேரும். வரவேற்பு நிகழ்ச்சிகளில் உங்களின் பங்கு சிறப்பாக அமையும்.

### பெண்களுக்கு

பெண்களின் சுயநலம் அதிகரித்தாலும் அனை வரும் லாபமடையும் விதத்தில் அமையும். தொழிலில் முன்பை விட சிறந்து விளங்குவீர்கள். எதிலும் பல முறை முயற்சி செய்து வெற்றி பெறுவீர்கள். பொருளாதாரம் வளம் பெறும்.

### மாணவர்களுக்கு

உயர்கல்வி வாய்ப்பு அமையும். கல்விக்கு தேவையான பண உதவி கிடைக்கும். எதிர் கால நலன் கருதி படிப்பில் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

28.07.2016 வியாழன் பகல் 02.41 முதல் 30.07.2016 சனி மாலை 05.30 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலில் இருந்து வந்தி போட்டிகள் மறையும். கனவில் கண்ட காட்சிகளை நினைவில் காண்பீர்கள். உங்களின் முயற்சிக்கு நல்ல பலன் கிட்டும்.

#### சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். அவசரத்தில் செய்த செயல்கூட சிறப்பாக அமையும். உங்களின் சுய கௌரவம் உயரும். தனித்திறமை வெளிப்படும்.

#### விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

தீயவர்களின் தொடர்புகளை விட்டு ஒதுங்கி கொள்வீர்கள். குடும்பத்தில் உடன் இருந்து செயல் படும் நிலை உருவாகும். உறவுகளை பலப்படுத்தி கொள்வீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** வெண்மை, நீலம், ஒரஞ்சு

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடக்கு, வடமேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வெள்ளி, சனி, புதன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியையும், வெள்ளி, செவ்வாய்க்கிழமை ராகு காலத்தில் அம்ம னையும் தரிசனம் செய்து வேண்டுதலை சொல்லி வர நீங்கள் நினைத்த காரியம் கைகூடும்.

### புத்துணர்ச்சிபெற..

நாம் புத்துணர்ச்சியுடன் வாழ்வதற்கு உரிய வழி, புத்துணர்ச்சி தரத்தக்க கருத்துகளை நாம் நமது உள்ளத்தில் நிரப்புவதாகும். உயர்ந்த பணிகளை மேற்கொண்டு செய்து வருபவர்களிடம் புத்துணர்ச்சி எப்போதும் இருக்கும். உயர்ந்த நோக்கம் இல்லாமல் ஊக்கம் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

சுக்கிரனின் ஆதிக்கம் பெற்று திறமையுடன் செயல்படும் துலாம் ராசி வாசகர்களே! இதுவரை உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தில் அமர்ந்து மூன்று, ஐந்து, ஏழாமிடத்தை பார்வை செய்து வந்த குருபகவான் இனி நான்காம், ஆறாம் எட்டாமிடத்தை பார்வை இடுவதுடன் உங்களின் செயல்பாடுகளை முழுவதையும் கண்காணித்து வருவார். துலாம் ராசியை பொறுத்தவரை குரு நட்பு வீடாக இருந்தாலும் மறைவு ஸ்தானத்தை குரு பார்வை இடுவது உங்களின் வாழ்க்கைக்கு கஷ்டப்பட்டாலும் முன்னேற்றம் தரும் வகையில் அமைவது நல்ல செயல்பாடுகளையும் எதிர்கால வாழ்வுக்கு தேவையான பொருளாதார நிலையை உயர்த்தி கொள்ள பாடுபடுவீர்கள். உங்களின் ராசிக்கு விரைய ஸ்தானத்தில் குரு அமர்வது நல்லதல்ல என்றாலும் அவரின் பார்வை படும் இடங்கள் சிறப்பாக அமையும். எந்த தொழில் செய்து வந்தாலும் அதில் அதிக லாபம் எதிர்பார்க்க முடியாது. சமயத்தில் உதவி செய்பவர்கள் ஏதாவது கார ணத்தால் உதவி செய்ய முடியாமல் போகும். பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்பதால் அடிக்கடி குருவை வணங்கி வருவது நன்மையை தரும்.

உங்களின் ராசிக்கு மூன்றாம் இடத்திற்கு அதிபதியான குரு நான் காமிடத்தை பார்வை இடுவது வாகனம் வீட்டு பராமரிப்பு போன்றவற்றில் பணத்தை விரையம் செய்வது நன்மையை தரும். பதிய வீடு கட்டுதலும் பெண்ணுக்கு திருமணம் செய்து வைப்பது உங்களின் புதிய கடன் பட்டாலும் அவரின் பார்வையில் பட்ட கடனும் எளிதில் அடையும். தங்க நகைகள் அடவு இருந்தாலும் விரைவில் உங்களின் கைக்கு வந்து சேரும். உங்களின் ஆறாமிடத்து அதிபதியான குரு அந்த ஸ்தானத்தை பார்வை இடுவது பிறருக்கு பிணையம் இடுவதால் பிரச்சினை வராமல் தவிர்ப்பது நல்லது. வங்கி மூலம் கடன் பெறும் வாய்ப்புகள் அமையும். உங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அது உதவியாக அமையும். சென்ற இடத்தில் உங்களின் செல்வாக்குகளை பெருக்கி கொள்வீர்கள். தெரிந்தவர்களிடம் கூட நீங்கள் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது உங்களுக்கு நல்லது.

உங்களை நேருக்கு நேர் பார்க்க அச்சம் அனுமதிக்க கூடாது. உங்களின் எட்டாமிடமான ஸ்தானத்தை குரு பார்வையால் பல வழக்குகளில் சிரமப்படுபவர்களுக்கு அதிலிருந்து படிப்படியாக விடுதலை பெறுவீர்கள். கணவன் மனைவி உறவுகள் நன்மை தரும். திருமண வாய்ப்புகள் பெண்களுக்கு அமையும். செய்யும் தொழிலில் சுய கௌரவம் பார்க்காமல் பாடுபடுவீர்கள். அமைதியான உங்களின் பேச்சு நல்ல பலனை தரும். எல்லோருக்கு நல்லபடி அமைய வேண்டு மென்று எண்ணுபவர்களுக்கு திறமைகள் வெளிப்படும். அடிமையான வாழ்க்கை சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு அதிலிருந்து விடுதலை கிடைக்கும். கருத்துள்ள சொற்களை சொல்லி அனைவரின் அன்பை பெறுவீர்கள்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு உங்களின் ராசிக்கு அதிகாரமாக வந்து மீண்டும் கன்னிக்கு செல்லும் இந்த காலம் உங்களின் எண்ண அலைகளை விரைவில் முடித்து கொள்வீர்கள். சகோரர், சொந்த உறவுகள், நெருங்கிய நண்பர் உங்களுக்கு உதவிகளை செய்வார்கள். வெளிநாட்டு செய்தி உங்களுக்கு சாதகமாக அமையும்.

நீங்கள் வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி, நவக்கிரக குருவுக்கு நெய்விளக்கு ஏற்றி மஞ்சள் நிறப்பூவைத்து தொடர்ந்து வணங்கிவர எல்லாம் நினைத்தபடி நடக்கும்.



### உயர்ந்தவர் தாழ்ந்தவர்!

நாம் தனித்திருக்கும்போதும், ஓய்வாக இருக்கும்போதும் நம் உள்ளத்தில் தோன்றும் சிந்தனைகள் உயர்ந்தவைகளாக இருந்தால் நாம் உயர்ந்தவர்கள் என்று பொருள். இதற்கு மாறாக இருந்தால் நாம் தாழ்ந்தவர்கள் என்று பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனோ சக்தியை அடைய நீங்கள் செய்ய வேண்டியது!

உங்களிடத்தில் உள்ள மதவெறி மதப் பற்றுகளையும் மத வைராக்கியங்களையும் பரம்பரையாக வரும் பழக்க வழக்கங்களையும் விட்டுவிட வேண்டும். மதம் என்பதன் உண்மையான பொருள் உடலையும் உள்ளத்தையும் அறியும் ஆத்மவித்தை ஆகும். மதச் சின்னங்கள் என்று அவைகளை அணிவதோ மத சம்பிரதாயங்களை . கடைப்பிடிப்பதோ மதம் அல்லது சமயம் அல்ல.

மூடப் பழக்க வழக்கங்களை விட்டுவிட வேண்டும். அவநம்பிக்கை மற்றும் கோபம் உணர்ச்சி வசப்படுதல் கெட்ட பழக்க வழக்கங்களை விட்டொழிக்க சுத்த இருதயத்தைத் திறந்து வைத்துக் கொண்டு நவீன ஆராய்ச்சியினால் உங்களுக்கு அனுகூலமாகத் தோன்றும் எண்ணங்கள் மட்டும் வளரவிடவும், உங்களுக்கு ஒரு சித்த சக்தி இருக்கிறது Will Power. இத்தகைய மகாசக்தி உங்களிடம் இருப்பதை நீங்கள் எப்பொழுதும் உபயோகித்து உங்களது தேவைகளை அடையலாம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய உள் மனதின் (Subconscious Mind) தன்மை என்ன என்பதையும் நீங்கள் எந்த விடயத்தைப் பற்றி தியானிக்க, சிந்திக்க, எண்ணப் பழகுகிறீர்களோ அவ்விதமாகவே உங்களது காரியங்களும் உங்களைச் சுற்றிலும் உள்ளவர்களின் நடவடிக்கைகளும் இருக்கும் என்பதையும் தெரிந்து கொள்ளவும். உங்களுக்கு மனதில் ஏதாவது ஒரு விருப்பம் அல்லது எண்ணம் தோன்றினால் அதை மறந்து விடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். ஏனென்றால் அது உங்களது வருங்கால நிலையைக் குறிக்கும் எண்ணமாகவும் இருக்கலாம்.

இப்படி உங்களுக்குள் தோன்றும் எண்ணங்களை ஒரு நோட்டில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் விருப்பங்கள் விரும்பியபடி நடந்தேறும் என்ற உறுதியான எண்ணத்தை மனதில் எப்போதும் வைத்துக் கொள்ளவும்.

மனதில் ஒரு எண்ணம் அல்லது விருப்பத்தை நினைப்பதே உங்களது கிரியைகளுக்கெல்லாம் மூலமாகவும் ஏவும் சக்தி Motive Power யாகவும் இருக்கிறது. ஆகவே எந்தவிதமான காரியங்கள் உங்களுக்கு எல்லா சௌகரியங்களையும் கொடுக்கக் கூடியது என்று உங்கள் மனதுக்குத் தோன்றுகிறதோ அந்த எண்ணத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது மனதை செலுத்தவும். எந்த விடயத்தை வேண்டி மனம் ஒருமித்து அதாவது உணர்வுடன் உங்கள் கவனத்தை செலுத்துகிறீர்களோ அந்த விடயத்தை நீங்கள் நிச்சயமாக உடனேயோ அல்லது சிறிது காலத்துக்குப் பின்போ செய்து முடிப்பீர்கள்.

ஆதலால் எதிலும் ஆத்திரமும் அவசரமும் படாமல் நிதானமாகவும் பொறுமையாகவும் இருக்கவும்.

நீங்கள் விரும்பியவைகள் கைகூடும் பொருட்டு செயல்படும் போது வேறு எந்த எண்ணமும் வந்து குறுக்கிடாமல் மனதில் உறுதியாக இருந்து எண்ணிய விடயங்களில் காரியங்கள் முடியும் வரை அதிலேயே சிந்தனையைச் செலுத்தி கவனமாக இருக்கவும்.

தினசரி காலை மாலை இரவு நேரங்களில் குறைந்தது அரைமணி நேரமாவது மனதைச் சிதறவிடாமல் அமைதியான தியானத்தில் இருக்கவும். இதனால் உங்களுக்கு வைராக்கியம் மன உறுதி கிடைக்கும். எந்த வேலையைச் செய்யும் போதும் முழுக்கவனத்தையும் அதிலேயே செலுத்தி ஈடுபாட்டுடன் செய்தால் நிச்சயமாக அது வெற்றியடையும்.

செய்யும் தொழிலே தான் கடவுள் ஆகும். கடவுள் உங்களிடத்திலேயே இருக்கிறார். ஆகவே ஒரு பணியை உணர்வுடன் செய்யும் போது அந்தப் பணியையே தெய்வமாக எண்ணிச் செயல்பட வேண்டும்.

நீங்கள் ஒரு தொழிலாளியாக இருக்கலாம். ஒரு கணக்காளராக இருக்கலாம், ஒரு உயர் அதிகாரியாக இருக்கலாம், ஒரு தொழிலதிபராக இருக்கலாம், வாகன ஓட்டுனராக இருக்கலாம் ஆனால் அந்தந்த வேலைகளில் ஈடுபடும் போதும் அதில் தெய்வத் தன்மையை உணர்ந்து செய்யும்




தொழிலே இறைவன் என்ற உணர்வுடன் செய்து வந்தீர்களானால் நிச்சயமாக அதில் வெற்றியும் மன நிறைவும் மகிழ்ச்சியும் அமைதியும் கிடைக்கும். இப்படி ஈடுபாட்டுடன் செய்யும் போது உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது. உங்கள் உணர்வு மனம் உங்களுக்கு உறு துணையாக இருக்கும்.

நீங்கள் செய்யும் பணியோ தொழிலோ வேலையோ எது ஆனாலும் அதுவே தெய்வம் ஆகும். தெய்வம் கோவிலில் இல்லை. சர்வ வியாபியாக நீங்கள் செய்யும் பணியாகவும் இருக்கிறார். ஆகவே இவைகளை உணர்ந்து மனதில் வைத்துக் கொண்டு எந்தப் பணியையும் உணர்வுடன் செய்தால் வெற்றி உங்களுடையதே.

மாணவர்கள் படிக்கும் போது அதையே தெய்வீகமாக எண்ணி மன அமைதியுடனும் கருத்துடனும் படித்தால் தேர்வுகளில் முதல் ஸ்தானத்தில் வரலாம். ஆகவே நமது செயல்கள் ஒவ்வொன்றிலும் இறைத்தன்மை இருக்கிறது. நம்மை ஆட்டுவிப்பவன் அவன் தானே?

✦ராஜயோகி



## சிரார்த்தம்!

இறந்த முன்னோர்களை உரிய நாளில் பக்தியுடனும் சிரத்தையுடனும் வழிபட வேண்டும். இந்தக் காரியங்களைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும் என்ற பொருளில் தான், "சிரார்த்தம்" என்ற சொல்லும் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை மிக்க
# காயத்ரீ!



சிறப்புகள் அனைத்தையும் பெற்ற காயத்ரீ மந்திரத்தைப் பார்ப்போம்.

**"ஓம்பூர் புவஸ் ஸுவ**
**தத் ஸவிதுர்வ வரேண்யம்**
**பர்க்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோந ப்ரசோதயாத்"**

இதற்குத்தானா இத்தனை சிறப்புகள் என்று எண்ணி விடக் கூடாது. இன்னும் சொல்லப் போனால்

**"தத் ஸவிதுர்வ வரேண்யம்**
**பர்க்கோ தேவஸ்ய தீமஹி**
**தியோ யோத ப்ரசோதயாத்"**

என்பதே சிறப்பு வாய்ந்த காயத்ரீயாகும்.

இந்த மந்திரத்திற்கு முன்னாலுள்ள "ஓம்" என்பது பிரணவ மந்திரம் என்பதை நாம் அறிவோம்.

இதைப்போல, "பூர்", "புவ", ஸுவ" என்பவைகளும் "ஓம்" போன்று மந்திரத்தின் முன்வரும் வியாஹ்ருதிகளாகும்.

பூர், புவ ஸுவ என்பவை இந்த உலகத்தையும், மறு உலகத்தையும், சொர்க்க உலகத்தையும் குறிக்கும். இந்த மூவுலகங்கள் அனைத்துமே இறைவனையே குறிப்பதாகும்.

"நம்முடைய அறிவைத் தூண்டி விடுகின்ற பேரொளி படைத்த சூரிய பகவானுடைய சிறப்பான ஒளியை நாம் தியானம் செய்கிறோம்" என்பதே இந்த மந்திரத்தின் பொருளாகும்.

சூரியனின் உள்ளே இருந்து கொண்டு இந்த உலகத்திற்கே ஒளி தந்த வண்ணமிருக்கும் பரமாத்மாவான ஸ்ரீமத் நாராயணனை நாம் தியானிப்போம் என்பது மந்திரத்தின் விளக்கமாகும்.

இந்த உலகத்து மக்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவது மட்டுமன்றி அறிவையே நல்குவதும் சூரிய பகவான்தான். இந்தச் சூரிய பகவானையும் இயக்குபவர் ஒருவர் உண்டென்றால் அவர்தான் ஸ்ரீமந்நாராயணன் என்று நமது வேதசாஸ்திரங்கள் தெளிவுபடக் கூறுகின்றன.


இந்த மந்திரத்தில் வருகின்ற "தத்", தேவஸ்ய" என்ற சொற்கள் பரமாத்மாவைக் குறிப்பனவாகும்.

அறிவைத் தூண்டி நம்மை ஆக்கப் பணிகளில் ஈடுபட வைக்கும் ஒளிக்கடவுளை வணங்குகிறோம். இந்தக் கடவுள் அதாவது சூரிய பகவான் நமக்குக் கூரிய அறிவுத் திறனை அறிவாற்றலைத் தருவதன் மூலம் நமது முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் என்பது உறுதியாகும் சூரியனை வழிபட்டவர்கள் உயர்வது உறுதி!

✍ ஆபஸ்தம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தியானத்திலும் புன்னகை மலரட்டும்!

தியானம் என்பது சீரியஸான ஒரு பிசினஸ். பல பேர் அதை சீரியசாகக் கையாள்கின்றனர். நான் ஈஷா தியான அன்பர்களைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால், உலகம் முழுக்க உள்ள தியானியர்கள் தியானத்தை மிக சீரியசாகப் பார்க்கின்றனர் என்கிறேன். விழிப்புணர்வாய் இருக்க வேண்டும் என்னும் தங்களுடைய முயற்சியால் சிரிப்பதைக்கூட மறந்துவிட்டனர். அனைத்தையும் மறந்துவிட்டனர்.

தியானம் என்றால், வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் பல்லிளிக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் எலும்பிலிருந்து சிரித்திடுங்கள். உங்களது ஒவ்வொரு அம்சத்திலிருந்தும் சிரிக்கப் பழகுங்கள். உங்கள் பற்களைக் காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் உதட்டைப் பயன்படுத்தாமல், புன்னனைக்கப் பழகுங்களேன். உண்மையாகவே சொல்கிறேன்.

பல்லைக் காட்டாமல் சிரியுங்கள். உங்களால் சிரிக்க முடியுமா எனப் பாருங்கள். சிரியுங்கள். உங்கள் கைகளால் சிரிக்க இயலுமா எனப் பாருங்கள். உடலிலுள்ள எலும்பும் கூட சிரிக்கத் துவங்கினால், அது தியானம். உங்களுக்குள் விறைப்பாகாமல், உறைந்து போகாமல் இருப்பதே தியானம். இறுதியில் நீங்கள் நித்தியமாய் இளைப்பாற இது சிறந்த பயிற்சி தியானத்திற்கு நல்ல ஆயத்தப் பயிற்சி இது.

அதனால், வெறும் பல்லை மட்டும் காட்டி, உதடுகளிலிருந்து சிரிக்காதீர்கள். எலும்புகளிலிருந்து சிரித்திடுங்கள். தியானம் என்பது ஒரு மலர்மலர்வதைப் போல! மலர், பகுதி பகுதியாக மலராது. அது மலரும்போது, முழுவதுமாக மலரும். நீங்களும் அதுபோல் இருக்க, அது கண்கள் மூடிய நிலையோ திறந்த நிலையோ, உங்கள் முகத்தில் ஒரு புன்னகை இருக்கட்டும். புன்னகை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. அனைத்துமே அதன் முழுச் சிறப்புடன் இருக்கட்டும். இது மலர்தல். இது தியானம்.



உங்கள் கண்முழி மேல்நோக்கிச் சுழன்றபடி அமர்வது, உதட்டில் இருக்கும் சிரிப்பை உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஏற்று வதற்காகத்தான். புன்னகையினை உட்கொள்ள பிரயத் தனப்படுகிறீர்கள். புன்னகை என்பது ஒரு வெளிப்பாடு அல்ல. மற்றவர்கள் அதனை வெளிப்பாடாய் பார்ப்பார்கள். ஆனால், உங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட தளர்வு நிலையில் இருந்தால், சுகானுபவத்தில் இருந்தால், உங்களைச் சுற்றி யார் இல்லாமல் இருந்தாலும், உங்கள் முகத்தில் புன்னகை குடி கொண்டிருக்கும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வம்... கிடைக்க... செய்யவேண்டியவை

**செல்வம் கிடைக்கவும், அந்தச் செல்வம் நம்மிடம் நிலைக்கவும், நாம் செய்ய வேண்டியவைகள் என்னென்ன என்பதைப் பார்ப்போம். இவைகள் நம் முன்னோர்களால் கூறப்பட்டது. கடைப் பிடிக்கப்பட்டது.**

**செல்வத்தை வரவேற்போம். வந்த செல்வத்தை நம் வீட்டில் நிறுத்திக் கொள்வோம். நம்பிக்கையுடன் செயல் படுவோம்.**

1. தினமும் காலையில் வெங்கடேச சுப்ரபாதம், விஷ்ணு சஹஸ்ரநாமம் ஆகியவற்றை ஒலிக்கச் செய்யவும். இதனால் வீட்டில் உள்ள எதிர்மறை அலைகள் விலகும். மகாலட்சுமி நிரந்தர வாசம் செய்வாள்.

2. ஆந்தை படத்தை இரவு படுக்கப் போகும் முன்பாக ஐந்து நிமிடங்கள் பார்த்து விட்டுப் படுக்கவும். எனக்குப் பணம் கிடைக்க வேண்டும் என்று மனதில் கூறிக்கொண்டே தூங்க ஆரம்பிக்கவும்.

3. வியாழக்கிழமை மாலையில் குபேரனை வழிபடுவதால் செல்வம் கிடைக்கும்.

4. வெள்ளிக்கிழமையில் மகாலட்சுமி மந்திரம் கூறி மகாலட்சுமியை வழிபட வேண்டும்.

5. ஸ்வர்ண ஆகர்ஷண வெங்கடாஜலபதி படத்தை (தங்க நகைகள் அலங்காரத்தில் உள்ளதைத்தான் ஸ்வர்ண ஆகர்ஷண என்கிறோம்) இரவு படுக்கப் போகும் முன்பாகவும், காலையில் எழுந்த உடனும் ஐந்து நிமிடங்கள் பார்க்கவும்.

6. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தண்ணீரில் மஞ்சள் தூளைக் கரைத்து வீட்டின் வாசலிலும், வீட்டிற்குள்ளும் தெளித்தால் எதிர்மறை அலைகள் விலகும். மஞ்சள் ஒரு கிருமிநாசினி என்பதால் வீட்டிற்குள் உள்ள கிருமிகளும் போய்விடும்.

7. பெண்கள் இடது கையில் வெள்ளி மோதிரம் அணிய பணவரவு அதிகரிக்கும்.

8. அவ்வப்போது பசுவின் கோமியத்தைத் தண்ணீரில் கலந்து வீட்டில் தெளிக்கவும்.

9. மல்லிகைப்பூ மகாலட்சுமிக்கு மிக உகந்தது. எனவே மகாலட்சுமி படத்திற்கு மல்லிகைப் பூ சார்த்தவும். அப்போது ஓம் ஐஸ்வரேஸ்வராய நமஹ என்று மனதிற்குள் கூறிக்கொண்டே பூவைச் சார்த்த வேண்டும்.

10. பிறருக்குப் பணம் கொடுக்கும் ரூபாய் நோட்டின் தலைப்பகுதி நம்பக்கம் இருக்குமாறு வைத்துக் கொடுக்க வேண்டும்.

11. பிறரிடம் பணம் கொடுக்கும்போதெல்லாம், இந்தப் பணம் பலமடங்காக என்னிடம் திரும்ப வர வேண்டும் என்று மனதிற்குள் கூறிக் கொண்டே கொடுக்க வேண்டும்.

12. துளசிமாடம் வைத்து அதற்கு விளக்கேற்றி மூன்று முறை வலம் வருவது மிக நல்லது.

13. வெள்ளிக்கிழமையில் வீட்டிற்கு உப்பு வாங்குவது நல்லது.

14. தினமும் வீட்டில் வாசனை உள்ள நல்ல தரமான ஊதுபத்தி ஏற்ற வேண்டும். அந்த நறுமணம் வீடு முழுவதும் பரவவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் நல்ல தரமான சாம்பிராணிப் புகை வீடு முழுவதும் போட வேண்டும்.

16. பணம் பணத்தை ஈர்க்கும். எனவே எப்போது வெளியில் சென்றாலும் கட்டாயம் பையில் பணம் இருக்க வேண்டும். பக்கத்தில் தானே செல்கிறோம் என்று வெறும் பையுடன் போகக் கூடாது. எப்பொழுதும் பையில் பணம் இருக்க வேண்டும்.

17. நம்மால் முடிந்த தான தருமங்கள் செய்ய வேண்டும். இதனால் பிறர் மனம் குளிர்வதால் நமக்கு நன்மை கிடைக்கும்.



### மனக்குரங்கு

மனக்குரங்கு மனிதனைப் பல விதங்களில் ஆட்டிப்படைக்கிறது. அதனால் மனத்தில் மகிழ்ச்சியில்லாத நிலை ஏற்படுகிறது. தெய்வபக்தியோடும், ஒழுக்கங்களோடும் வாழும்போது தான் மனிதன் மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

18. பெண்கள் வளையல் அணியாமல் எதையும் பரிமாறக் கூடாது.

19. இரவில் தயிர் சாப்பிட வேண்டாம். சாப்பிட்டால் லட்சுமி கடாட்சம் கிடைக்காது என்று பெரியவர்கள் கூறுவார்கள்.

20. குளித்தபின் முதலில் முதுகைத்தான் துடைக்க வேண்டும். பிறகுதான் முகத்தைத் துடைக்க வேண்டும்.

21. காலையில் எழுந்தவுடன் அவரவர் உள்ளங் கைகளைப் பார்க்க வேண்டும்.

22. உடுத்திய ஆடையை இரண்டு தினங்கள் மட்டும் உடுத்தவும். இரண்டு தினங்கள் கழிந்தபின் அவற்றைத் துவைக்கப் போட்டுவிட்டு, வேறு துவைத்த ஆடையை உடுத்தவும். தொடர்ந்து பல நாட்கள் உடுத்தக் கூடாது. இவ்வாறு உடுத்திக் கொண்டால் பண வரவு குறையும்.

23. புதினா இலைகளை பணம் வைக்கும் மணிபர்சில் வைத்துக் கொள்ளவும். ஒவ்வொரு தடவையும் பணத்தை பர்சிலிருந்து எடுக்கும் போது அந்தப் புதினா இலைகளைப் பார்க்கவும். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தப் புதினா இலையை எடுத்துவிட்டு. வேறு புதிய புதினா இலையை பர்சில் வைத்துக் கொள்ளவும்.

24. சட்டைப்பையில் பணத்தை வைத்திருந்தாலும் வீட்டிலோ, கடையிலோ பணத்தை ஒழுங்காக, எல்லா ரூபாய் நோட்டுகளும் தலைப் பக்கம் இருக்குமாறு அடுக்கி வைக்க வேண்டும்.

25. பணம் பணத்தை ஈர்க்கும். எனவேதான் எப்போதும் பையிலும், வீட்டில் பணப் பெட்டியிலும் பணம் இருக்க வேண்டும். ஒட்டத் துடைத்து எடுத்துச் செலவு செய்து விடக் கூடாது.

26. வீட்டிற்கும் வரும் சுமங்கலிப் பெண்களுக்கு, அவர்கள் வந்ததும் தண்ணீர் கொடுக்கவும். அவர்கள் கிளம்பும் போது மஞ்சள், குங்குமம் கொடுக்கவும்.

27. வியாழக்கிழமை மாலையில் விளக்கேற்றி வைத்து குபேரனை வழிபட பணம் வரும்.

28. பசுவுக்கு அகத்திக் கீரை, வாழைப்பழம் வாங்கிக் கொடுப்பது நல்லது.


S. சுப்ரமணியன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை தினசரி மனிதன் கர்மவினைப் பயனால் துன்பத்தையே அனுபவிப்பதைக் குறிக்கின்றன. மனிதன் கணநேர இன்பத்திற்காக நீண்ட காலத் துன்பத்தை ஏற்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றான். மனிதனின் இந்த இரங்கத்தக்க அறியாமைக்கு அவன் காடுகளை அழித்து வருவதே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. காடுகள் காய்கறி, பழங்கள், கிழங்குகள் போன்ற வற்றை தருவதுடன், நீரை உறிஞ்சி நீராவிப் போக்கால் வெளிப்பட்டு மேகங்கள் தோன்றி மழை பெய்யவும் உதவுகின்றன. மழை இல்லையெனில் பஞ்சம், பட்டினி, நோய்கள், அழிவு இவைதான் வளரும். காடுகளை அழித்துவிட்டால் உலகில் வாழும் உயிரினங்கள்யாவும் அழிந்துவிடும் என்பது இயற்கை நியதி. காடுகளில் உள்ள மரம், செடி, கொடிகள் அனைத்தும் பிராண வாயுவை வெளியிட்டு, மனிதர்கள் வெளியேற்றும் கரியமில வாயுக்களை உறிஞ்சிக் கொண்டு உலக ஜீவராசிகளை வாழவைக்கின்றன.



# அம்பிகையின் ஆயுதங்கள்


மரம், செடி, கொடிகளின் பசுமையிலிருந்தே ஜீவன்களுக்குத் தேவையான பிராண வாயு கிடைப்பதால்தான் உலக வாழ்க்கை நடைபெறுகிறது. இந்த நிலையில் நாம் உயிர் வாழத் தேவையான பிராண வாயுவை பூமியைச் சுற்றிலும் ஓசோன் மண்டலம் என்னும் பிராண வாயு மண்டலத்திலிருந்தே பெற நேரிடும். இந்த ஓசோன் மண்டலம் சூரியனிடமிருந்து வெளிப்படும் காஸ்மிக் கதிர்கள், புற ஊதாக் கதிர்கள் மூலமாக நச்சுக் காற்றின் தாக்குதலில் இருந்து நம்மைக் காப்பாற்றுவதற்காக இயற்கை அன்னை அமைந்துள்ள பாதுகாப்புக் கவசம். நிலப்பகுதியில் பிராண வாயுவே அற்றுப்போவதால் நாம் உயிர் வாழ ஓசோன் மண்டலத்தில் இருந்துதான் பிராண வாயுவைப் பெற வேண்டியிருக்கும். அதனால் ஓசோன் மண்டலத்தில் சில பகுதிகளில் பிராண வாயு மிகவும் குறைந்து பிளவுகள் அல்லது துளைகள் ஏற்படும். இந்தத் துளைகள் வழியாக சூரியன் வெளியிடும் நச்சுத் தன்மை வாய்ந்த காஸ்மிக் கதிர்கள் முதலான சிற்றலைக் கதிர்கள் அளவுக்கு அதிகமாக பூமியின் மீது படியும். மனிதன் வரையுள்ள உயிரினங்கள் யாவற்றையும் அழித்துவிடும். அறியாமையானது நம்மை எந்த அளவுக்கு பாதிக்கும் என்று தெரியாமலேயே காடுகளை அழிப்பது எவ்வளவு பெரிய கொடுமையான செயல் என்று தெரியாமலே காடுகள் அழிக்கப்படுவதை நாம் அன்றாடம் பார்த்து வருகின்றோம். இந்தச் செயலுக்கு அறிவியலும் பெருந்துணை புரிந்து வருகின்றது. இவ்வாறு அழிவுப் பாதையை நோக்கி நாமே கலியுகத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்து விடுவோம் என்பதைக் காட்டும் முன் எச்சரிக்கையே அன்னையின் வலக்கரங்களில் உள்ள இரத்தம் தேய்ந்த அரிவாளும் வாளும் காட்டுகின்றன.

## தொங்கும் கதாயுதம்

கதாயுதம் எதையும் அடித்துப் பொடியாக்க வல்லது. கிரௌஞ்ச மலையாகவும், மேகக்கூட்டங்களாகவும் வேறு எந்த வகையான பயங்கர உருவத்துடன் வந்து ஆன்மாவைச் சூழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாளாண்மை



தாளாண்மை என்றால் "முயற்சி உடைமை" என்பது பொருள். எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச்செயலில், அர்ப்பணிப்பு, பணியார்வம், சத்தியம், தர்மம், இறைவன் தொண்டு என்ற எண்ணம் ஆகியவை இருக்க வேண்டும்.

துன்புறுத்தும் மாயையாகிய இருள் புகையை இடித்துப் பொடியாக்கி அழித்து ஆன்மாவை ஒளிமிக்க வெளியில் இணைந்து நித்தியானந்தம் பெறச் செய்வது அன்னையின் வலக்கரம் ஒன்றில் உள்ள கதாயுதம். இது அழிவற்ற அறிவான ஆன்மாவைச் சூழ்ந்து அந்த ஆத்மாவைத் தன்னை மறந்து தனக்குப் புறம்பாக இன்ப துன்பங்களாய் உள்ள இருளில் மூழ்கி தடுமாறச் செய்யும் மாயையை அழித்து ஆன்மா தானே அறிவான பிரம்மமாய் இருப்பதை உணரச் செய்பவள் அன்னை பராசக்தியே என்பதை உணர்த்துகின்றது.

### சுழலும் நிலையில் மேல் வலக்கையை அலங்கரிக்கும் சக்கரம்

ஆணவ மலத்தை ஒடுக்கி ஆன்மா தூய்மை அடைந்து பிரம்மத்தில் லயிக்க உதவுவது அன்னையின் மேல் வலக்கையில் சுழலும் சக்கரமாகும். அம்பரீஷ சக்கரவர்த்தியின் பக்தித் திறத்தை உணர முடியாது. துர்வாச மகரிஷியின் மனதை மறைத்திருந்த ஆணவ மலத்தை ஒடுக்கி அவருக்கு தெளிந்த ஞானத்தையும் அளித்தது திருமாலின் சக்ராயுதம் என்பது புராண விளக்கம். திருமாலின் ஆற்றலாக அவரது இதயக்கமலத்திலிருந்து கொண்டு அவரையும், அவரது சக்கரத்தையும் இயக்குபவளும் அந்த புவனேசுவரியேயாதலால் அவனை வைஷ்ணவி என்றும் வழிபட்டு வருகிறார்கள்.


### திரிசூலம்

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்கள் ஆன்மா பிரம்மத்தைக் காண முடியாமல் மறைத்திருக்கும் திரையாகும். இந்த திரைகளை அகற்றி ஆன்மா தன்னுள் மறைந்திருக்கும் பிரம்மத்தை உணரச் செய்வது அன்னையின் கையில் உள்ள திரிசூலம் ஆகும். அதாவது மனித மனதில் மறைந்திருக்கும் பஞ்சபூத விகாரங்களை தன் அருளொளியால் அதில் மறையச் செய்து மனிதன் தன்னுடைய மனதில் பராசக்தியே பிரம்ம சொரூபமாய் இருப்பதை உணரச் செய்பவள் திரிசூலியாய் நிற்கும் பரம்பொருளே என்பதை உணர்த்துவதே அவளது வலக்கரம் தாங்கியுள்ள திரிசூலம்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாதவ யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்

பரதத்தில் மறைந்தது பார்முதல் பூதமே
திருமூலர்

அன்னையின் திரிசூலம் அழித்தல் கடவுளான




சிவனும் தன் அம்சமே என்பதையும் உணர்த்துகின்றது.

### வலம்புரி சங்கு

இடையறாது பிரணவ நாதத்தை ஒலித்துக் கொண்டிருப்பது அன்னையின் இடக்கரத்தில் உள்ள வலம்புரிச் சங்கு. தானே விந்தாகவும், தான் எழுப்பும் ஒலியே ஜீவநாதமாகவும் உள்ளது அந்தச் சங்கு. இதன் நாதவிந்து தத்துவத்திலிருந்தே பிரபஞ்சம் அனைத்தையும் படைப்பவள் ஆதி பராசக்தியே என்பதை உணர்த்துவதே இந்த சங்கு. படைப்புத் தொழில் புரியுங்கால் அன்னை நாதரூபி, பிராமணி என்ற திருப்பெயர்களுடன் திகழ்வாள்.

பிரம்மன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
பூத்தவனே புவனம் பதினான்கையும்
பூத்தவண்ணம் காத்தவளே
அபிராமி அந்தாதி

— என்.தம்மண்ணன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயம்!

உங்கள் உடலில் ஏதாவது ஊமைக் காயம் ஏற்பட்டிருப்பது போல் கனவு கண்டால் உங்களுடைய வாழ்க்கை வெளிப்பார்வைக்கு மிகவும் மகிழ்ச்சிக்கரமாக இருப்பது போல் காணப்படுகிறது. ஆனால், உள்ளூர நீங்கள் அப்படி இல்லை. உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிலர் உங்களுடைய பேச்சைக் கேட்டு நடக்காததால் நீங்கள் வேதனை அடைந்திருக்கிறீர்கள். தங்களுடைய செயல் தவறு என்பதை அவர்கள் விரைவில் உணரப் போகிறார்கள். ஆகையால் நீங்கள் வேதனையை விட்டு விட்டு நிம்மதியாக இருக்கலாம்.

நீங்கள் ஏதாவது ஒரு சிறுகாயம் பட்டிருப்பது போல் கனவு கண்டால் உங்களால் இயலாத ஒரு காரியத்தைச் செய்ய நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். ஆசையில் தவறு இல்லை. ஆனால் அதற்கு வேண்டிய ஆற்றலை முதலில் தேடிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தோல்வியினால் ஏற்படுகிற வெட்கத்துக்கு நீங்கள் ஆளாக வேண்டியிருக்கும்.

பிறருக்கு ஒரு சிறு காயம் பட்டதுபோல் கனவு கண்டால் நீங்கள் சிறு துன்பங்கள் சிலவற்றைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதிருக்கும். அந்தப் பொறுமை வீண் போகாது. அதன் மூலம் உங்களுடைய பெருமையும், உங்கள் எதிரிகளின் சிறுமையும் தெளிவாக வெளியாகிவிடும். உங்களது செல்வாக்கு மேலோங்கும்.

உங்களுடைய நெருப்புச் சுட்ட புண்ணைக் கனவில் கண்டால் உங்களிடமிருந்து அவ்வப் போது உதவி பெற்று வருகிற ஒரு நண்பர், உங்கள் கூடவே இருக்கிறார். அந்த உதவி கெட்டுவிடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக உங்களுடைய தவறான கருத்துக்களுக்கு அவர் ஊக்கம் அளித்து வருகிறார். அவர் பேச்சைக் கேட்காதீர்கள். கேட்டால் நீங்கள் சிரமத்திற்கு ஆளாவீர்கள்.

நீங்கள் ஓர் இரத்தக் காயத்தை கனவில் கண்டால் உங்களுக்குள்ளே உறங்கி கிடக்கும் சில ஆற்றல்கள் விரைவில் வெளிப்படப் போகின்றன. அவற்றை நீங்கள் உயரிய வழியில் பயன்படுத்தினால் அவை மேலும் வளர்ச்சி அடையும். இல்லாவிட்டால் உங்களுக்கு சிறிது பொருளையும் புகழையும் கொடுத்துவிட்டு அவை மறுபடியும் உறங்க சென்று விடும்.

நீங்கள் ஏதோ கட்டுப்போட்டிருப்பது போல் கனவு கண்டால் பண விடயத்தில் நீங்கள் சிறிது மோசம் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் உறுதியாக இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கே ஏற்பட்டாலன்றி முன்பின் பழக்கம் இல்லாத துறைகளில் எவர் பேச்சையும் கேட்டு உங்கள் பணத்தை முதலீடு செய்யாதீர்கள்.

காயம் ஆறிய தழும்பைக் கனவில் கண்டால் பிறர் உள்ளம் புண்படும்படியாக ஒரு வார்த்தையைப் பேசிவிட்டு பிறக நீங்களே அதற்காக வருந்தப் போகிறீர்கள். அதனால் பல நாள்கள் வரையில் உங்கள் உள்ளத்தில் அமைதியில்லாமல் போய் விடக்கூடும். அதற்கெல்லாம் இடம் இல்லாதவாறு எப்போதும் இனிய சொற்களையே பேசிப் பழகுங்கள்.

தமிழ்வாணன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமலர்பாதங்கள்

# 108 போற்றி!



ஓம் குருவாயமர்ந்த கோவே போற்றி!
ஓம் தருவாய் மண்ணில் தண்ணருள் போற்றி!
ஓம் நான்முகன் பிரமன் நற்சேய் போற்றி!
ஓம் வாள்உறை தேவர் குருவே போற்றி!
ஓம் பார்வையில் நலங்கள் படைப்போய் போற்றி!
ஓம் தார்மீக குணத்து தண்இறை போற்றி!
ஓம் விண்மீன் ஆளும் வேந்தே போற்றி!
ஓம் நல்லேலர்கருளும் தாயக போற்றி!
ஓம் வல்வினை போக்கும் வல்லோய் போற்றி!
ஓம் அல்லல் அழிக்கும் அரசே போற்றி!
ஓம் பொன்னிற ஆடை அணிவோய்போற்றி!
ஓம் தன்னடி பணிவார்க் கருள்வாய் போற்றி!
ஓம் சிந்துதேசம் சேர்ந்தோய் போற்றி!
ஓம் வந்தனை செய்வோர்க் கருள்வாய் போற்றி!
ஓம் சுகமாய் அமர்ந்த சுரகுரு போற்றி!
ஓம் மிகுபல பொன்னணி அணிவோய் போற்றி!
ஓம் முல்லையணிந்த நல்இறை போற்றி!
ஓம் தொல்லையகற்றும் தூயவ போற்றி!
ஓம் மஞ்சள் பொன்னிற மன்னவ போற்றி!
ஓம் அஞ்சேல் என அபயம் அளிப்போய் போற்றி!
ஓம் அரும்வடமொழியும் அறிந்தோய் போற்றி!
ஓம் வரும்பல இடர்களை அழிப்போய் போற்றி!
ஓம் கன்னட மொழியும் கற்றவா போற்றி!
ஓம் இன்னலகற்றும் இறைவா போற்றி!
ஓம் ஆங்கிரசர் வழிவந்தோய் போற்றி!
ஓம் தாங்கொணாத் துயர்கள் தகர்ப்போய் போற்றி!
ஓம் தண்டம் தரித்த தயவோய் போற்றி!
ஓம் அண்டமெலாம் நலம் அருள்வாய் போற்றி!
ஓம் கமண்டல மேற்ற கனிந்தோய் போற்றி!
ஓம் இமயவர் ஏற்ற இறைவா போற்றி!
ஓம் உருத்திராக்கம் அணிந்துயர்ந்தோய் போற்றி!
ஓம் வருத்துதரித்திரம் அழிப்போய் போற்றி!
ஓம் சடைமுடியேற்ற சத்குரு போற்றி!
ஓம் மனஉடை நீர்போல் அருள்வோய் போற்றி!
ஓம் ஆலமரத்திறை அறனூறு போற்றி!
ஓம் காலமெல்லாம் ஏழை காப்போய் போற்றி!
ஓம் ஆசான் பணிக்குள் அருள்வோய் போற்றி!
ஓம் மாசிலா மனத்துள் மலர்வோய் போற்றி!
ஓம் தண்ணீருளியும் தலைவா போற்றி!
ஓம் விண்ணவர்க் குயர்ந்த வேந்தே போற்றி!
ஓம் கொஞ்சுமலையாளம் அறிந்தோய் போற்றி!
ஓம் தஞ்சமென்றார்க் கருள்வோய் போற்றி!
ஓம் இன்பத்தெலுங்கும் தெரிந்தோய் போற்றி!
ஓம் துன்பமிலா நலங்கொடுப்பாய் போற்றி!
ஓம் திசைமத்தியிலே தருவோய்போற்றி!
ஓம் அசையும் பானை அமர்ந்தோய் போற்றி!

ஓம் ஆம்பலின்தூபம் ஏற்போய் போற்றி!
ஓம் பூம்புனலாய் அருள் பொழிவோய் போற்றி!
ஓம் அந்தண குலம்சேர் அரசே போற்றி!
ஓம் அந்தண குலம்சேர் அரசே போற்றி!
ஓம் சந்தன மணிந்து சிறந்தோய் போற்றி!
ஓம் சுந்தரமான கரகுரு போற்றி!
ஓம் வந்துணை பணிவோர்க்கருள்வோய் போற்றி!
ஓம் அன்பாய் அருளும் ஆண்டவ போற்றி!
ஓம் என்பால் கலந்த இறைவா போற்றி!
ஓம் இகபரம் அருளும் ஏந்தல் போற்றி!
ஓம் சுகந்தரு கருணை சொரிவோய் போற்றி!
ஓம் ஒருகால் தொழிலும் உபப்போய் போற்றி!
ஓம் இருகால் தோன்றி அளிப்போய் போற்றி!
ஓம் என்னும் நெஞ்சுறும் இறைவா போற்றி!
ஓம் குன்றா மணிபோல் ஒளிர்வோய் போற்றி!
ஓம் வான்காரகையாய் வசிப்போய் போற்றி!
ஓம் தேன்இனி சுவையும் சேர்த்தோய் போற்றி!
ஓம் ஒன்பான் கோளாய் உறைவாய் போற்றி!
ஓம் அன்பாய்ப் பணிவார்க் கருள்வாய் போற்றி!
ஓம் மற்றோர் ஒப்பிலா மணியே போற்றி!
ஓம் கற்போர்க்கு தவும் குருவே போற்றி!
ஓம் வானவர் போற்றும் மேலோய் போற்றி!
ஓம் தானமர்ந்தாள்வாய் தரணியை போற்றி!
ஓம் அலையும் மனத்தை நிலைத்தருள் போற்றி!
ஓம் நம்புவர்க்கரும் பொருளாய் நயந்தோய் போற்றி!
ஓம் உம்பர்கட்கொரு குருவாய் உயர்ந்தோய் போற்றி!
ஓம் உசுப்பார்கள் மனமென்றும் உறைவோய்
போற்றி!
ஓம் தகர்த்தாள் வாய்தீவினையை தயவாய் போற்றி!
ஓம் பூவார்ந்த மேனியுடைய பொன்னா போற்றி!
ஓம் தாவாலே யாம்பாட நயந்தோய் போற்றி!
ஓம் தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
ஓம் முவோரி நான் முகனின் உறைவே போற்றி
ஓம் கரம் நான்கைக் கொண்டுறையும் குருவே
போற்றி!
ஓம் வரம் தந்து எமைக்காப்பாய்வளமாய் போற்றி!

ஓம் வடதிசையில நடுவிலும் குருவே
போற்றி!
ஓம் இடமெதிலும் இருந்தாளும் நல்லோய் போற்றி!
ஓம் திசைவருடம் பதினாறும் பிணைந்தோய் போற்றி!
ஓம் இசைத்தோம் யாம் உம்புகழை அருள்வோய்
போற்றி!
ஓம் வியாழன் எனவும் விளிப்போம் போற்றி!
ஓம் நியாயத்துறையும் நல்லோய் போற்றி!
ஓம் செந்தூர் உறையும் இறைவா போற்றி!
ஓம் வந்தோர்க்கருளும் அரசே போற்றி!
ஓம் சிவகுரு முருகனைச் சேர்ந்தோய் போற்றி!
ஓம் அவனுறும் குருவுரு ஆனோய் போற்றி!
ஓம் பகலில் பலமுறும் குருவே போற்றி!
ஓம் மிகவே அருளும் மேலோய் போற்றி!
ஓம் அரசுச்சமிததால் மகிழ்வோய் போற்றி!
ஓம் அருள் குருவருகில் அமர்ந்தோய் போற்றி!
ஓம் புவியை ஆளும் கோனே போற்றி!
ஓம் தவிக்கும் உயிர்க்கெலாம் தயவே போற்றி!
ஓம் ஏழாமிடத்தைப் பார்ப்போம் போற்றி!
ஓம் வாழும் உயிர்க்கு வளமே போற்றி!
ஓம் ஐந்தாமிடம் நோக்கரசே போற்றி!
ஓம் பைந்தமிழ்ப்பாக்கள் இசைப்போம் போற்றி!
ஓம் இடம் ஒன்பதையும் பார்ப்போய் போற்றி!
ஓம் வடபாலுறையும் இறையே போற்றி!
ஓம் சஷ்டிக்கவசம் இசைந்தோய் போற்றி!
ஓம் இட்டம் நிறைப்பாய் எம்இறை போற்றி!
ஓம் தட்சிணாமூர்த்திக் கவசம் போற்றி!
ஓம் இட்டமாய் இசைத்தோம் அருள்வோய் போற்றி!
ஓம் பிரமனைத் துதிக்க மகிழ்வாய் போற்றி!
ஓம் வரமெலாம் தந்து அருள்வோய் போற்றி!
ஓம் பணிந்தோம் குருவே பாதங்கள் போற்றி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருச்சிகம்

# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

செவ்வாய் ஆதிக்கத்தின் ஊக்கம் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி வாசகர்களே இதுவரை உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து இரண்டாமிடம், நான்காமிடம், ஆறாமிடத்தை குரு பார்வை செய்து வந்தது. உங்கள் வாழ்வில் பலவிதமான நன்மை தீமைகளையும் ஏற்று கொண்டு தொழிலில் எந்த முன்னேற்றமும் இன்றி இருந்து வந்தீர்கள். பத்தாமிடத்தில் குரு அமர்வது நல்லதல்ல. இனி அதிலிருந்து விடுதலை பெற்று இனி உங்களின் ராசிக்கு முயற்சி ஸ்தானம் பூர்வ புண்ணிய ஸ்தானம் ஏழாமிடத்தை குரு பார்வை இடுவதும், லாபஸ்தானத்தில் குரு அமருவதும் நல்ல பலன்களை வாரி வழங்குவது உங்களையும் பிறரையும் மகிழ்விப்பீர்கள். உங்களின் ராசிக்கு மூன்றாமிடம் செவ்வாய் உச்சம் பெறும் வீடு என்ப தால் உங்களின் ராசிநாதன் செவ்வாய் உங்களுக்கு பல உதவிகளையும் யோகங்களை பெற்று தருவார்.


குரு தொழில் ஸ்தானத்தில் அமர்ந்த காலம் உங்களின் தொழிலில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் தடைகளையும் வளர்ச்சியின்மையும் இருந்த நிலை மாறி நன்மைகளை பெறுவீர்கள். உங்களின் சகோதரர்களின் மூலம் கூடுதல் ஆதா யமும், உதவியையும் பெறுவீர்கள். திறமையான தொழிலாளர்களின் மூலம் தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். ஐந்தாமிடமான பூர்வபுண்ணிய ஸ்தானத்தை குரு பார்வை பெறுவது புத்திரர்களால் வருமானம் கிட்டும். தொழில் இன்றி இருந்த புத்திரர்களுக்கு தொழில் வாய்ப்பு அமையும். புத்திரர்களுக்கு வேலை வாய்ப்புகள் அமையும். தீய நண்பர்களின் பழக்கத்திலிருந்து புத்திரர்கள் விடுபடுவார்கள். குலதெய்வ வழிபாடுகள் நன்மை யைச் செய்யும்.

உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு நல்ல ஆசிரியர் வந்து போதனைகளை செய்து தேர் விலும் கல்வியின் வளர்ச்சியிலும் பெரும் பங்கு கொள்வார்கள். கனவில் கண்ட காட்சிகளை நினை வாக காண்பார்கள். குழந்தை பாக்கியமின்றி இருந்த தம்பதிகளுக்கு குழந்தை பாக்கியம் கிட்டும் என்னசெய்ய வேண்டுமோ அதனை காலத்தில் செய்து நல்ல பலனை அடைவீர்கள்.

உங்களின் ராசிக்கு ஏழாமிடமான களத்திர ஸ்தானத்தை பார்வை இடுவது திருமண காரியம் சிறப்பாக அமையும். பொருளாதாரமின்றி இருந்து வந்த உங்கள் நிலை மாறி பண புழக்கம் இருந்து வரும். நல்ல நண்பர்களின் சேர்க்கையில் உறுதுணையுடன் எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்வதுடன் மறுமலர்ச்சியை பெற்று வளமான வாழ்வை பெறுவீர்கள். உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தில் குரு அமருவது தொழிலிலும், பல வழிகளிலும் உங்களின் வாழ்க்கை சூழ்நிலை மாறும். பல துறைகளில் வளர்ச்சியை பெற்று சிறப்பு பெறுவீர்கள். சிக்கல்களிலிருந்து விடுபடுவீர்கள். கணவன், மனைவி உறவு பலப்படும். உண்மையான வழிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரமாக துலாம் ராசிக்கு வந்து மீண்டும் கன்னிக்கு போகும் வரை உங்களின் கவனம் தொழிலில் மிகவும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வும். பிணையம் இடுவதை தவிர்க்கவும். உங்களை ஏமாற்ற நினைப்பவர்கள் உடனே துண்டித்துக் கொள்வது நல்லது. சரியான நேரத்தில் நீங்கள் உங்களின் முடிவை எடுக்க தவறினால் விளைவுகள் மிகவும் சிரமமாக இருக்கும்.

பரிகாரம் செய்ய வேண்டிய ராசி என்பதால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவை வணங்கி நெய் விளக்கு போடவும். ஞாயிறு மாலை 04.30 – 06.00 மணிக்குள் பைரவரை வணங்கி வர இந்த இக்கட்டான சூழ்நிலைகளை மறந்து நல்ல பலன்களை அடைவீர்கள்.



### சீர்மிகு சமுதாயம்

நல்ல காரியங்களை யார் செய்தா லும் அவற்றை ஊக்குவிக்க வேண்டும். உடலில் உயிர் இருந்தால்தான் உட லிலுள்ள உறுப்புகளைக் கொண்டு நாம் செயல்பட முடியும். அதுபோல் சமுதாயத்தில் அறம் இருந்தால்தான் சமுதாயம் சீராக இயங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்முகி ஆண்டு ஆடி மாதம்
16.07.2016 முதல் 16.08.2016 வரை



# விருச்சிகம்

எதை செய்தாலும் சிறப்பாக இருக்க வேண்டுமென்று எண்ணும் விருச்சிக ராசி வாசகர்களே! இம் மாதம் உங்களின் ராசிக்கு முற் பகுதியில் அலைச்சலும், தொலை தூர பயணம் உண்டாகும். பிற்பகுதி முன்னேற்றமும், தொழிலில் வளம் பெறுவதுடன் நண்பர்களின் மூலம் புதிய முயற்சிகள் நல்ல பலனை தரும். பொருளாதார வளர்ச்சி கிடைக்கும்.

### பணியாளர்களுக்கு

சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எடுத்த முடிவுகளை சில காரணங் களால் மாற்றிக் கொள்ள வேண்டி வரும். பொது விடயங்களிலும், தொழிலாளர்கள் சார்ந்த விடயங்களிலும் எல்லோரின் முடிவுகளுக்கு உறு துணையாக இருப்பீர்கள். பொருளாதாரம் மேம் படும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு



அரசியல் தலைமையில் இருப்ப வர்களுக்கு நல்ல எதிர்காலம் அமையும். அரசியல் சார்ந்த திருப் பங்களை உருவாக்குவீர்கள். பொது மக்களின் கோரிக்கை களுக்கு பக்கபலமாக இருந்து உதவுவீர்கள். தொழில் சார்ந்த பயிற்சி அனைவருக்கும் கிடைக் கும் படி செய்து தருவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

உங்களின் தொழில் ஸ்தானாதிபதி பலம் பெற்று இருப்பதுடன் குரு அருள் பெறு வீர்கள். இது வரையிலும் பல சோதனைகளையும் அடைந்த நிலை மாறி விரைவில் வளம் பெறுவீர்கள். மின்சார உபகரணங்கள் விற்பனையில் கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைஞர்களுக்கு தொடர்ந்து வாய்ப்புகள் அமையும். சினிமா, தொலைக்காட்சி தொடர்களில் வாய்ப்புகள் அமையும். வெளிநாட்டு தொடர்புகள் உங்களில் வளர்ச்சியை பெறுவீர்கள். நினைத்ததை சாதித்து காட்டுவீர்கள். பொருளாதாரம் மேன்மை பெறும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கை சூழ்நிலையில் மாற்றம் தரும். உங்களின் ஆதரவில் பலருக்கு நன்மையை செய்வீர்கள். குறுகிய காலத்தில் வளர்ச்சியை அடைவீர்கள். தொழிலில் நினைத்தபடி நல்ல பலன்கள் கிட்டும். பொருளாதாரம் வளமையாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

படித்த கல்வி மூலம் விரைவில் வேலை வாய்ப்பு அமையும். சில ருக்கு படித்து கொண்டே வேலை கிடைக்கும். கணிணி இரும்பு சார்ந்த துறையில் சிறந்த கல்வியை பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

30.07.2016 மணி மாலை 05.31 முதல் 01.08.2016 திங்கள் இரவு 09.38 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### விசாகம் 4ஆம் பாதம்

நிலையான தொழிலை தேடி அலைபவர்கள் விரைவில் அடைவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் விரைவில் நடக்கும். உடல் நலமின்றி இருந்தவர்கள் உடல் தேறும்.

### அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உயர்நிலையை அடைய நீங்கள் கடுமையாக பாடுபட்டு வருவீர்கள். எதிலும் உறுதியுடன் செயல்பட நற்பலன் பெறுவீர்கள்.

### கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

காலம் கடந்த விடயங்களில் கவனம் செலுத்தி விட முயற்சியும், தொடர் செயலிலும் ஈடுபட்டு வெற்றியை காணபீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஒரஞ்சு, வெண்மை, சிவப்பு

**அதிர்ஷ்ட திசைகள் :** வடக்கு, வடமேற்கு, தெற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** திங்கள், ஞாயிறு, புதன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

செவ்வாய்க்கிழமை சுப்ரமணியரையும், சனிக் கிழமை சிவனையும், நந்தியையும் வணங்கிவர நினைத்த காரியம் கைகூடும். பொருளாதார வளர்ச்சி அமையும்.

## விஞ்ஞானமும் ஆன்மீகமும்

நம்முள் உள்ள இறைவனை நாம் உணர்ந்து கொள்வதுதான் ஆன்மீக விஞ் ஞானம் என்று நாம் கருதவேண்டும். இதுவே விஞ்ஞானத்திலும் பெரிய விஞ் ஞானமாகும். நவீன விஞ்ஞானத்திற்கு ஆன்மீகத்தின் துணை அவசியம் தேவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி நகரும் பைரவ வழிபாடும்!

சிவபெருமானின் திரிசூலத்தால் தாங்கப்படுவதும் எக்காலத்தும் அழியாததுமான நகரம் காசியாகும். காசியில் சிவபெருமான் எப்போதும் நீங்காது வாசம் புரிகிறார். அதனால் இது சிவவாசம் என்றும் போற்றப்படுகின்றது.

காசியிலுள்ள அனைத்து சிவாலயங்களிலும் சிவபெருமானின் தலைமைக் காவலரான பைரவ மூர்த்தி அனேக பெயர்களில் எழுந்தருளியுள்ளார். இவற்றின் தலைமையிடம் காலபைரவர் சந்நிதியாகும். இது காசியில் விசுவநாதர் கோயிலுக்கு வடக்கில் பைரவரநாத் என்னுமிடத்தில் அமைந்துள்ளது.

இங்குள்ள மூலவர் திருவுருவம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டதாதலின் மிகவும் தேய்ந்து போயுள்ளது. அதன் மீது செந்தூரம் பூசியுள்ளனர். மேலே சரிகைத்துணி போர்த்தப்பட்டு முககவசம் அணிவிக்கப்பட்டுள்ளது. காசிநகரில் உத்தரவாகினியாக ஓடும் கங்கை யின் கரைகளில் அறுபத்து நான்கு நீராடுதுறைகள் உள்ளன. இவற்றை காட்(கட்டடங்கள்) என்ற அழைக்கின்றனர். இந்த அறுபத்தி நான்கிலும் பஞ்சாயதன வழிபாட்டை உணர்த்தும் வகையில் சூரியன், அம்பிகை. கணபதி, திருமால், சிவ லிங்கம் ஆகிய திருவுருவங்கள் அமைத்து வழி படப்படுகின்றன. இப்படி அமைந்த ஒவ்வொரு கட்டத்திலும் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குச் சிறப்புப் பெயர்கள் அமைந்துள்ளன. இப்படி வீற்றிருக்கும் சிவபெருமானுக்குக் காவலாகவும் இந்தத்துறைகளில் நீராடி மகிழும் அன்பர்களுக்குக் காவலாகவும் பைரவமூர்த்தி அறுபத்து நான்கு திருவுருவம் தாங்கி எழுந்தருளியுள்ளார்.



காசியில் மகாசக்தி பீடமாக விளங் கும் அன்னபூரணி பீடத்தில் பராசக்தி "மகா மங்களகௌரி" என்னும் பெயரில் எழுந்த ருளியுள்ளாள். இவளுக்கு அன்னபூரணி என்ற பெயர் வழங்குகின்றது. இங்கு சக்தி கணமான அறுபத்து நான்கு யோகினிகளும் நீங்காதிருந்து பராசக்திக்கும் சேவைபுரிகின்றனர். இவர்கள் அறுபத்து நான்கு பேர்களும் அறுபத்து நான்கு பைரவர்களுக்குத் தேவியராகத் திகழ்கின்றனர்.

காசிக்குச் செல்பவர்கள் கண்டிப்பாகக் காலபைரவரைத் தரிசனம் செய்வதுடன் அவருடைய பிரசாதமான காப்புக்கயிறையும் அணிந்து கொள்ள வேண்டும். இதனால் வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் நீங்குவதுடன் பயம் விலகும். வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் ஏற்படும் மரண வேதனைகளும் துன்பமும் யமபயமும் உண்டாகாது. இவர் பேரில் கால பைரவ அஷ்டகம் பாடப்பட்டுள்ளது. இதனை தினமும் பாராயணம் செய்து வந்தால் பகைவர்கள் தொல்லையும், இயற்கையில் ஏற்படும் துன்பங்களும் விலகும். மன நிம்மதி உண்டாகும்.

காசி நகரில் இறப்பவரின் கணக்கைச் சித்திரகுப்தர் எழுதுவதில்லை. காலபைரவரே எழுதி பலன்களையும் அளிக்கின்றார். இவருடைய சந்நிதியில் மிருத்யுஞ்சய மந்திரத்தை ஓதுபவரையும், கேட்பவரையும் கண்டு யமன் அஞ்சி நிற்கின்றான். காசியே பைரவரின் பிரதானமான ஷேத்திரமாகும். இங்கு செய்த வேள்வியில் தோன்றியவரே திருப்பத்தூர் யோக பைரவர் ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாரங்களில் வாரணாசி என அழைக்கப்படும் காசி மாநகரினில் காவல் தெய்வமாக வீற்றிருப்பவர் கால பைரவர். இவரது வாகனம் நாய், கபாலத்தை கையில் ஏந்திக் கொண்டு செவிகளில் அழகிய குண்டலங்கள் ஒளிவீச கருமை நிறத்துடன் கரங்களில் சூலம், உடுக்கு பாசம் தாங்கிய வண்ணம் காட்சியளிப்பவர். சர்ப்பத்தைப் பூணூலாகத் தரித்து நிர்வாணக் கோலத்தில் காட்சி அருள்பவர். மூன்று திரு நயனங்களை உடையவர்.

இராமர் இராவணனை வென்ற பிறகு இராமேஸ்வரம் சென்று இராவணனைக் கொன்ற பாவம் தொலைய இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வணங்க விரும்பினார். அதற்காகக் சுயம்புலிங்கம் ஒன்றைக் காசியினின்று கொண்டு வருமாறு அனுமாருக்கு ஆணையிட்டார்.

அனுமாரும் இராமனின் ஆணைக்கிணங்கக் காசிக்கு விரைந்து சிவலிங்கத்தைத் தேடினார். எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்கள் இருந்தும் சுயம்புலிங்கத்தை வாயுபுத்திரனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அஞ்சனையின் மைந்தனுக்கு சொல்லொணா ஏமாற்றம். இப்படிக் கலங்கிக் கொண்டிருந்த பொழுது கருடன் ஒன்று சிவலிங்கம் ஒன்று இருக்கும் இடத்திற்கு மேலே வட்டமிட்டது. "இது தான் சுயம்பு லிங்கமோ" என்று நினைத்த பொழுது பல்லி ஒன்றும் ஒலித்தது. சுயம்புலிங்கம் கிடைத்த மகிழ்ச்சியில் அதனை அப்படியே அகழ்ந்து எடுத்துக்கொண்டு அனுமன் புறப்பட்டார்.

நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த காசியின் காவல் தெய்வம் கால பைரவருக்கு கோபம் கொப்பளித்தது தனது அனுமதியின்றி காசி நகருக்குள் யாரும் பிரவேசிக்கவே கூடாது என்றிருக்கும் பொழுது என்னைக் கேட்காமல் இலிங்கத்தைத் தூக்கிக் கொண்டு போகிறானே என்ற கோபத்துடன் வழிமறித்து அனுமனுடன் போரிட்டார். போர் பல



நாட்கள் தொடர்ந்தது. தேவர்கள் அஞ்சினார்கள். காசிக்கு விரைந்து வந்து காலபைரவரை வணங்கிச் சிவனுடைய அனுமதி பெற்றே ஆஞ்சனேயர் இலிங்கத்தைக் கொண்டு செல்கிறார். இராமேஸ்வரத்தில் இந்த லிங்கம் ஸ்தாபிக்கப் பெறுவதால் பரதகண்டம் முழுவதிற்கும் ஓர் ஆன்மீகப் பிணைப்பு ஏற்படும். ஆதலால் தாங்கள் அனுமதிக்க வேண்டும் என்று வேண்ட, தேவர்களின் வேண்டுக்கிணங்க காலபைரவரும் அனுமதி தந்தார்.

அது மட்டுமல்ல மாருதிக்கு சுயம்புலிங்கத்தை அடையாளம் காட்டிய கருடன் காசிநகருக்குள் பறக்க கூடாதென்றும், சகுனம் காட்டிய பல்லி காசியில் ஒலிக்கக்கூடாது என்றும் சாபம் இட்டார். இன்றும் காசியில் கருடன் பறப்பதில்லை. பல்லி ஒலிப்பதில்லை என்பர். காலபைரவரே காசியைக் காத்து நிற்கும் காவல்தெய்வம். இவர் மக்களுக்கு உறுதுணையாய் அவர்களைப் பிணி முதலியவைகளினிற்று விடுவித்து அருள் புரிகிறார்.

➤ S.L.S.பழனியப்பன்

**பெரியகலை**

நல்லவற்றை உள்ளத்தில் தங்க வைத்துக்கொள்வதும், தீயவற்றை உள்ளத்திலிருந்து வெளியேற்றுவதும் தான் கலைகளிலேயே மிகவும் பெரிய கலையாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**



# தனுசு


தொட்ட காரியத்தை முடிக்கும் வரை விடாமல் தொடர்ந்து செயல்படும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு முற்பகுதி நற்செயல்களையும் எடுத்த காரியம் ஜெயம் உண்டாகும். பிற்பகுதி தொழிலில் சில சிரமங்களும் ஏற்படும். கடன்கள் விரைவில் தீரும். கொடுத்த இடத்தில் பணவரவு உண்டாகும்.

**பணியாளர்களுக்கு**

தொழிலாளர்களின் கூட்டு முயற்சிகளால் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவீர்கள். சுமையாக இருந்து வந்த பிரச்சினை முடிவுக்கு வரும். உயர் அதிகாரிகளின் நெருக்கடிகள் குறையும். உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். தொழிற்சங்கத்தில் முக்கிய அங்கம் வகிப்பீர்கள். பொருளாதாரம் வளம் பெறும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

அரசியல் காரணங்களால் பல காலம் ஒதுங்கி இருந்த உங்களுக்கு இனி புதிய பொறுப்புகளும், கடமைகளும் வந்து சேரும். மனதில் நினைத்ததை விரைவில் முடித்து வைப்பீர்கள். எதிர் காலத்தை எண்ணி செயல்படுவீர்கள். பொருளாதார நன்மைகள் உண்டாகும்.



**வியாபாரிகளுக்கு**

தொழிலில் நினைத்ததை விட முன்னேற்றம் தந்தாலும் உங்களின் உழைப்புக்கு தகுந்த படி அமையாமல் போகும். நம்பிய நண்பரே உங்களுக்கு இடையூறாக இருப்பது உங்கள் மனதில் கவலையை தரும். மன வலிமையே உங்களை சிறந்த தொழில் அதிபராக ஆக்க உதவும். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் வாய்ப்புகளும் வசதிகளும் வந்து சேரும். விரைய செலவுகள் வரும். தொலை தூர பயணம் செய்ய வேண்டி வரும். வைத்திய செலவுகள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். நிகழ்ச்சி நடைபெறும். பொருளாதாரத்தில் ஓரளவு நன்மை கிட்டும்.

**பெண்களுக்கு**

பெண்களின் தொழில் வாய்ப்பு அமைய பெறுவீர்கள். சகோதரரின் மூலம் சில சிரமங்களை அடைய வேண்டி வரும். கற்பனையான வாழ்க்கையை வாழ்வீர்கள். கிடைத்ததை வைத்து சிறப்பாக வாழ வழி தேடி கொள்வீர்கள். பொருளாதாரம் நலம் பெறும்.

**மாணவர்களுக்கு**

தேர்வுகளில் கவனமாக இருப்பீர்கள். வணிகம், அரசியல், பொருளாதார கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவு உதவியாக அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

01.08.2016 திங்கள் இரவு 09.39 முதல் 04.08.2016 வியாழன் அதிகாலை 03.51 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

விவசாய தொழிலில் வளர்ச்சியை பெற்று நல்ல பலனை அடைவீர்கள். பந்தயத்தில் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவி உறவு நன்றாக இருக்கும்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

முதலீடு இல்லாத தொழிலில் ஆதாயம் கிடைக்கும். மனைவி வழியில் திடீர் அதிர்ஷ்டம் கிடைக்கும். தொழிலில் பதிய வாய்ப்புகளை பெறுவீர்கள்.

**உத்திராடம் 1ஆம் பாதம்**

அரசாங்க பணிகளில் சிறந்து விளங்குவீர்கள். தகப்பனார் வழி சொத்து பிரச்சினை முடிவுக்கு வரும். தன்நிலை அறிந்து செயல்படுவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், வெண்மை, இளம் பச்சை

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, தென்கிழக்கு, வடக்கு

## நகைச்சுவை

**நகைச்சுவை வாழ்க்கைக்குச் சுவையூட்டுகிறது. நகைச்சுவை உணர்வு மனிதனுக்குத்தேவை என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமில்லை. ஆனால் நகைச்சுவை என்ற பெயரால் நாம் பிறர் மனத்தைக் காயப்படுத்தக் கூடாது.**

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வியாழன், வெள்ளி, சனி

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை காலை 06.00 – 07.00 மணிக்கு விநாயகர் வழிபாடு செய்ய தடைகள் நீங்கி நன்மை பெறுவீர்கள். ஞாயிறு மாலை ராகு காலத்தில் பைரவர் வழிபாடு செய்ய எல்லாம் நன்மையாக அமையும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

குருவின் ஆதிக்கத்தில் பிறந்த தனுசு ராசி வாச கர்களே! உங்களின் ராசிக்கு இதுவரை பாக்கிய ஸ்தானத்தில் அமர்ந்து ராசியையும் மூன்றாம், ஐந்தாமிடத்தை பார்வை செய்து வந்த குரு நீங்கள் முயற்சிகளுக்கும், செயல்களுக்கும் அருள் பெற்று சுபிட்சமாக வாழ்ந்து வந்தீர்கள். இனி குரு உங்களின் ராசிக்கு இரண்டாமிடத்தையும் நான் காமிடத்தையும் ஆறாமிடத்தையும் பார்ப்பது உங்களின் வாழ்க்கையில் பல சிறப்புகளையும் பெற்று சிறந்து விளங்குவீர்கள். எனினும் உங்களின் தொழில் ஸ்தானத்தில் குரு அமருவது நல்லதல்ல என்பது கவனத்தில் கொள்ள வேண் டும். உங்களின் எண்ணங்களில் உதிக்கும் காரியங்களை செயல்படுத்துவதற்கு குருவின் அருள் கிட்டும். உங்களின் ராசி நாதன் என்பதால் உங்களுக்கு குரு கெடுபலன்களை தர மாட்டார். ராசிக்கு இரண்டாமிடத்தில் குரு பார்வை படுவது குடும்ப ஒற்றுமையும், குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழ்ச்சிகளும் நடக்கும்.

பணப்புழக்கம் இருந்து வரும். கடவுள் அருளால் உங்களின் மகிழ்ச்சிக்கு எந்த இடை யூறுகளும் வராது. நான்காமிட பார்வையாக தனது வீட்டை பார்ப்பதால் உங்களுக்கு புதிய வாகன வசதியும், புதிய வீடு கட்டும் வாய்ப்பும் அமையும். தாயாருக்கு உடல்நல குறைபாடுகள் சரியாகும். எளிதில் எதையும் சாதிக்கும் வலிமை கிடைக்கும். சிறிய வயதிலுள்ள பெண் பிள்ளைகள் ருதுவாகும் வாய்ப்புகள் அமையும். சுற்றுலா வெளியூர் சென்று வரும் வாய்ப்புகள் அமையும். தனித்திறமைகளை வெளிப்படுத்தி பள்ளியில் சிறந்த மதிப்பெண் பெற்று பாராட்டு பெறுவீர்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கு உதவிகளை செய்து அவரின் அன்பை பெறு வீர்கள். புத்திரர்களுக்கு நல்ல தொழில் அமை யும், வேலை வாய்ப்பும் அமையும்.

உங்களின் ராசிக்கு ஆறாமிடத்தை குரு பார்வை படுவது புதிய கடன் பெற்று பழைய கடன் அடைக்கும் வாய்ப்புகள் அமையும். குறிப்பாக பெண்களின் வாழ்க்கையில் முன் னேற்றம் உண்டாகும். பெண்களுக்கு தொழில் பயிற்சியும் வங்கி கடன் வசதி கிடைக்கும். அதிக வட்டி தொல்லைகள் குறைந்து நிம்மதி அடைவீர்கள். வீடு கட்ட கடன் பெற முயற்சிகள் நன்மையை தரும். தங்க நகைகள் சேர்க்கையும், சேமிப்பு மூலம் வருவாய் மேலும் அதிகரிக்கும். பிணையம் இடுவது, தவிர்ப்பது நல்லது. தொழில் ஸ்தானத்தில் குரு அமர்வது உங்களின் ராசிக்கு பெரிய தொல்லைகளை தராவிட்டாலும் சிறப்பான அமைப்பாக அமையும்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை அதிகாரம் பெற்று குரு துலாத்திற்கு சென்று வரும் வரையிலான காலத்தில் உங்களின் அனைத்து வித காரியங்களும் அனுகூலமாக அமையும். சிலருக்கு திருமணம் கைகூடும். விடுபட்ட காரியங்கள் கைகூடும். வசதிகளை பெருக்கி கொள்வீர்கள். ஆபத்தில் உங்களுக்கு உதவியவர்களை மேலும் உதவிகளை செய்து நட்பை பலப்படுத்திக் கொள்வீர்கள்.

உங்களின் ராசி பரிகாரத்திற்கு உட்பட்டது என்பதால் அடிக்கடி குருவை வணங்கி வரு வதுடன் வாய் பேசாதவர்களுக்கு உதவி செய்வ தன் மூலமும், குருமார்கள் தரிசனம் பணிவிடை செய்வதன் மூலம் கெடு பலன்கள் குறைக்கலாம்.



### உண்மையும் வாய்மையும்

உள்ளத்தில் உண்மையைக் கடைப் பிடித்தல் உண்மை எனப்படும். வாக்கால் உண்மையைக் கடைப்பிடித்தல் வாய்மை எனப்படும். மெய் என்ற உடலால் உண்மை யைக் கடைப்பிடித்தல் (செயலால் பொய்யைத் தவிர்த்தல்) மெய்மை எனப்படும். மற்றவர் களுக்குத் தீமை தராத சொற்களை (இனிய சொற்களை), நாம் பேசுவதை "வாய்மை" என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மா பற்றிய அறிவியல் ஆய்வுகள்

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மனோதத்துவம், மருத்துவம், சமூகவியல், தத்துவம் முதலிய துறையைச் சேர்ந்த அறிஞர்கள் பலர் இத் தலைப்புகளில் நிறைய ஆய்வுகள் செய்து நூல்களாக வெளியிட்டுள்ளனர். இவ்வகையில் நூற்றுக்கணக்கான ஆய்வு அறிக்கைகள் வெளிவந்துள்ளன. பொது அரங்கில், தொலைக்காட்சியில் எல்லாம் அமரத்துவமடைந்த ஆத்மாக்களை மனித மீடியம் வழிக் கொண்டு வந்து, நிதர்சனமாகக் காட்டிய நிலைகள் மேலை நாடுகளில் உண்டு. கெட்டலைந்து வாழ்பவர்கட்குத் தீங்கு இழைக்கும். தவறான ஆத்மாக்களைத் திருத்திய மனித மீடியத் தொண்டுகளும் அங்கும், இங்கு இந்தியாவிலும் உண்டு. இந்தியாவில் முதன் முதல் 1864 இல் இவ்வாய்பு கல்கத்தாவில் தொடங்கியது. அமெரிக்காவில் 1848 இல் பாகிஸ் சகோதரர்கள் இவ்வாய்வைத் தொடங்கியுள்ளனர். கடோபநிடதம், மரணத்தை அடைந்து எம பகவானால் விடுவிக்கப்பட்ட ஒரு முனிவரின் மகனின் கதை வழி எமபகவானுக்கும் நசிகேதனுக்கும் ஏற்பட்ட உரையாடலைக் கூறும் அற்புத நூலாகும்.



**(ஆத்மாக்களின் குரல்களை விஞ்ஞானி பதிவு செய்தல்)**

### மேல் உலகம் பற்றிய கருத்துக்கள்

#### மேல் உலகம்

மேல் உலகம், பிதிர் உலகம், சுவர்க்க உலகம் என்றெல்லாம் அழைக்கப்படும் இறந்தவர் சென்று வாழும் அவ்வுலகம் எவ்வாறுள்ளது என்பது பற்றி எல்லோரும் அறிய விரும்புவது இயற்கை, அது பற்றிய ஆய்வுகளில் மேல் உலகில் இருப்பவர்களின் சூட்சும ஆத்மா மண்ணுலகில் உள்ள ஒருவர் மேல் ஏறி அது பேசிய நிகழ்ச்சிகளில் தரும் செய்தி. யோக தியான நெறியில் கனவில் மேலுலகம் சென்று கண்டு வந்து, எழுதிய செய்தி, நம்முடைய ஊகம் முதலியன ஆய்வுக்குரியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இறந்தவர் உடல்

மண்ணுலகில் இறந்தவர், மண்ணுலகில் மற்ற வர்க்குக் காட்சியளித்த நிகழ்ச்சிகளில், வீடுகளில் தாமாகத் தோன்றி வந்து போகும் நிகழ்ச்சிகள் முதலியவற்றில், வாழ்ந்த நாளில் இருந்த உடலைப் போன்றே, ஆனால் மென்மையான, திரடத்வம் இல்லாத, விரைந்து எதனூடும் ஊடுருவி, நடக்க வேண்டியது இன்றி, பறந்து அல்லது நழுவிச் செல்லும் உடலைப் பெற்று விடுகின்றனர். அச் சூட்சும உடல்களின் தோற்றம் ஒரு சிறிது நேரம் மட்டும் இருந்து, மெழுகாய் உருகி மறைந்து விடும் தன்மையது என்றும் கண்டோம். உயிரோடு இருப்பவர்கள் கூட, தன் உடல் படுக்கையில் கிடக்க தன் சூட்சும உடல் மட்டும் வேகமாகப் பயணம் செய்து விட்டு மறுபடியும் தனது படுக்கையில் கிடக்கும் உடலில் சேரும் நிலையில் வரும் உடலை எத்னிக் டபுள், உடல் இன இரட்டை உடல் என்பர். இவ்வுடல் காற்று போன்றது. ஆனால் தோற்றமுடையது. மேலுலகம் செல்லும் உடல் மனிதத் தோற்றம் உடைய காற்றுப் போன்ற சூட்சும உடல் தானா என்பது வினா?

### மண்ணுலகில் மறுபிரதியா?

பாரதியார் ஞான ரதத்தில் எழுதிய போது, மனித உடல் போன்றே மேலுலகில் உலவியதாகவும், அவண் காமக் குரோத மில்லா கள்ளங்கபடமற்ற அன்பு வாழ்வு அமைவதாகவும் எழுதுகிறார். கால் கடுக்க நடக்காது மிதந்து விரைந்து, நினைத்த மாத்திரம் நினைத்த இடத்தில் இருக்கும் அபூர்வப் பயண நிலையைக் குறிப்பிடுகிறார்.

மறைமலையடிகளும் இது பற்றி மரணத் தின் பின் மனிதர் நிலை நூலில் எழுதியுள்ளார். புராணங்களில் விளக்கப்பட்ட தேவர் உலகில் கணவன் மனைவி, சோம பானம், அமிர்தம், கேட்டதைத் தரும் காமதேனு, கற்பக விருட்சம், இந்திராணி அரம்மையர் ஜாவத யானை முதலியன இருப்பதாகக் கூறப்படுகின்றது. இவை யாவும் மண்ணுலக வாழ்வின் மறு பிரதி யின், மிக உயர்ந்த சுக போகங்களும், செல்வீகமும், போற்றலும் உடையனவாக உள்ளன. இந்திர விமானம், மயில் வாகனம், எருதுவாகனம் அன்ன வாகனம், காக வாகனம், மூஞ்சூறு வாகனம், யானை வாகனம் முதலியன தேவர்களைக் கடவுளர்களை ஏற்றிச் செல்ல அமைந்தவை என்பது புராண மரபு.

### நழுவி விரைதல்

மேல் உலக ஆன்மாக்கள் வாகனம் இன்றி, நடை, ஓட்டம் முதலியன இன்றி, ஓடு பாதை, நடை பாதை இன்றி எங்கும், என்றும் எளிதே பறந்து, நழுவி, மிக விரைந்து, தடைகளைத் தாண்டாது, பிரமாண்டமான மலை, சுவர், மரம் போன்ற தடை களின் ஊடே ஊடுருவிச் செல்லும் இயல்பினர் என் பது இன்றைய ஆய்வுகளில் கண்ட உண்மைகள்.

### அரு, உரு, அருவுரு

தியானத்தின்போது நம் மனத்தோடு இதயத் தோடு இறைவன் பேசும்போது, தொடர்பு கொண்டு, செய்திகளை நல்கும்போது, இறை வனை, முதிர்ந்தவர்கள், அந்தர் பரமாத்மாவாக உணர்கிறோம். மனித உருவில், மட்டும் தான் இறை வனைப் புரிந்துகொள்ள முடியும் என்றவர்கட்கும், இறைவன் நனவு, கனவு ஆழ் உறக்கம் துரிய நிலை, அதீத நிலை (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அவஸ்தை நிலைகள்) முதலிய நிலைகளில் நாம் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் தோன்றுகிறார்.

அதீத யோக, ஞான தியான நிலைகளில், இறைவன் உருவத் தோற்றமே இன்றி நமது அறி வின் மூலம் அறிவுறுத்திச் செயல்படுவதையும்



பார்க்கிறோம். நமது அறிவியல் அறிவுறுத்தல் என்ற நிலையை ஞானியர் அனுபவிக்கும் போது ஒரு நுண்மையான அணுப்பிரமாண தெய்வ சக்தி நம் உடலில் மயிர்க் கூச்செறிப்பை ஏற்படுத்தி தற்காலிகமான ஒரு சக்தியாக இறைசக்தி இயங்குகின்றது என்பதை உணர்வது இயற்கை. இவண் முதிர்ந்த யோக தியான ஞானப் பயிற்சியுள்ளோர் இறைவனை அணுமாத்திர உருவமற்ற தேஜோமயமான பொருளாகக் கருதிக் காண்கின்றனர்.

இவ்விறை அரு உரு அருவுரு எனப்பல நிலைகளிலும் ஐந்தொழில் இயற்றும் ஆற்றல் உடையது என்பதில் ஐயமில்லை.

- வை.தட்சிணாமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்

# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

சனி பகவானின் ஆதிக்கத்திலும் தனித்திறமை கொண்டு விளங்கும் மகர ராசி வாசகர்களே! இதுவரை உங்களின் ராசிக்கு இரண்டாம், நான்காம் பன்னிரெண்டாமிடத்தை பார்த்து வந்த குரு இனிமேல் உங்களின் ராசியையும், மூன்றாமிடத்தையும் ஐந்தாமிடத்தையும் பார்வை இடுவது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பொதுவாக உங்களின் ராசிக்கு குரு பாவியாக இருந்தாலும் பாவி மறைந்தாலும் பலன் தருவார். பார்த்தாலும் நல்ல பலன்களை தருவார். மேலும் உங்களின் ராசியில் குரு நீசம் பெற்று பலம் இழப்பதால் குருவால் என்றும் உங்களுக்கு அதிக பாதிப்பு இருக்காது. உங்களின் ராசிக்கு பாக்கிய ஸ்தானத்தில் குரு அமருவதும் சிறப்பான பல னாக அமையும்.

உங்களின் ராசிநாதன் லாபஸ்தானத்தில் அமர்ந்து உங்களின் ராசியையும் குருவையும் பார்த்து வந்தால் பலருக்கு உடல் நல குறை பாடுகளால் மருத்துவ சிகிச்சையை பெற்று வந்திருப்பீர்கள். இனி அதிலிருந்து விடுபடுவீர்கள். உங்களின் உடல்நிலை முன்னேற்றம் உண்டாகும். மனரீதியான பாதிப்பிலிருந்து வளர்ச்சியை பெற்று திறம்பட செயல்படுவீர்கள். உங்களின் முயற்சி ஸ்தானாதிபதி பார்வை பெறுவது உங்களின் காரியங்களில் வெற்றி நினைத்ததை போல எல்லாம் சிரமமின்றி நடக்கும். இளைய சகோதரர்களின் மூலம் நல்ல ஒத்துழைப்பும் உதவியையும் பெறுவீர்கள். தொழிலாளர்களின் வாழ்க்கையில் வளர்ச்சியையும் வேலை வாய்ப்புகள் தொடர்ந்து கிடைத்து வருமானம் அதிகரிக்கும். பல நாள் பட்ட கஷ்டம் இனி முடிவுக்கு வரும். புதியவர்களின் சந்திப்பு நன்மையையும் எதிர்கால திட்டங்களில் வளர்ச்சி யையும் பெறுவீர்கள். பெண்களின் வாழ்க்கை தரம் உயரும். சகோதரி திருமணம் இனிதாக நடக்க வாய்ப்புகள் அமையும். பொருளாதாரம் சிறக்கும்.

உங்களின் ராசிக்கு ஐந்தாமிடத்தை குரு பார்வை படுவது புத்திரர்களின் வாழ்க்கைக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். பல நாட்கள் குழந்தைகள் இல்லாமல் இருந்த வர்களுக்கு குழந்தை உண்டாக வாய்ப்புகள் அமையும். சிலருக்கு முன் ஜென்ம பாவங்களால் பட்டு வந்த அவஸ்தைகளுக்கு பரிகாரம் மூலம் அதிலிருந்து விடுபட வாய்ப்பு அமையும். குல தெய்வ வழிபாடுகளும், தெய்வ தரிசனமும் உண்டாகும். சிலர் நேர்த்தி கடன் செலுத்தி இறைவனின் அன்பை பெறுவீர்கள். செய்யும் தொழிலில் வளர்ச்சியை பெறுவதுடன் தொழிலில் இருந்து போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை சென்று வருவீர்கள். பண வரவு வந்து மன மகிழ்ச்சி பெறுவீர்கள்.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை அதிகாரம் பெற்ற குரு துலாத்திற்கு வரும் காலம் பல நற்காரியங்களில் உங்களின் வளர்ச்சியை உறுதி செய்து கொள்வீர்கள். முக்கிய பிரமுகர்களின் நட்பு உங்களின் வாழ்க்கை தரத்தை உயர்வடைய செய்யும்.

**உங்களின் ராசிக்கு குரு அனுக்கிரகம் இருப்ப தால் பரிகாரம் தேவை இல்லை என்றாலும் தொடர்ந்து குருவை வணங்குவதன் மூலம் மேலும் நற்பலன்களை பெற்று வளமான வாழ்க்கையை அடைவீர்கள்.**



## ஆன்மீகம் தரும் பலன்கள்

பக்திநெறி, ஞானநெறி, ஆன்மீக நெறி என்பது நடைமுறை வாழ்க்கையிலிருந்து விலகியிருப்பதல்ல. மன அமைதி, ஆத்ம திருப்தி, நல்லொழுக்கம், தியாகம், தொண்டு, அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்ற எண்ணம், ஒற்றுமை போன்றவற்றை ஆன்மீகம் வளர்க்கிறது. இவை ஆன்மீகத்தால் சமுதாயம் பெறும் சில பயன்கள். அதன் முடிவான பயன் ஞானம் முக்தி ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**





மனநிலையை அறிந்து மற்றவர் களிடம் தன் வலிமை காட்டும் மகர ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு முற்பகுதிகளில் ஏமாற்றமும், விரையமும் உண் டாகும். பிற்பகுதி சிறப்பாகவும் எண் ணியதை நிறைவேற்றி கொள்ளும் வாய்ப்பையும் பெறுவீர்கள். தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்றமான காலமாக அமையும். கடல் சார்ந்த மீன் பிடிப்ப வர்களுக்கு நல்ல வருமான வாய்ப்புகள் அமையும். அனைவரையும் அரவணைத்து செல்லும் நீங்கள் எல்லோரின் அன்பை பெறுவீர்கள். நல்ல பொரு ளாதாரத்தை பேணி பாதுகாத்து கொள்வீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது விடயங்களில் எப்பொழுதும் ஆர்வம் கொண்டு நண்பர்களிடம் கல்வியை பெற்று எளிய மக்களுக்கு உதவிகளை செய்யும் பண்பு உங்க ளிடம் இருக்கும். மனநிறைவு பெறுவீர்கள். பொருளாதாரம் சீராக அமையும்.



### வியாபாரிகளுக்கு

வியாபாரத்தில் சிரமங்கள் இருந்தாலும் இலக்கை அடைய பாடுபடுவீர்கள் கைபேசி, அலை பேசி போன்ற தொலை தொடர்பு சாதனங்களின் விற்பனையில் நல்ல லாபம் பெறுவீர்கள். ஆடம்பர விலையுயர்ந்த பொருட் களின் விற்பனை சிறப்பாகவும் ஆதாயமும் தரும். பொருளாதாரம் நன்றாக அமையும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையில் நினைத்ததை சாதித்து காட்டு வீர்கள். உயர் தொழில் நுட்பத்தை கொண்டு ரசிகர்கள் ரசிக்கும்படி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி அனைவரின் பாராட்டுதலை பெறுவீர்கள். விட்டு போன விடயங்களில் மீண்டும் புத்துணர்வு பெற செய்வீர்கள். நல்ல பொருளாதார நன்மை அடைவீர்கள்.

### பெண்களுக்கு

ஆசிரியராக பணிபுரியும் பெண்களுக்கு வர வேற்பு அதிகரிக்கும். சுயதொழிலில் வளர்ச்சியும் நன்மையும் பெறுவீர்கள். சிற்பக்கலையில் ஆர்வம் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் நீங்கள் எதிர் பார்த்த வளர்ச்சியை பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் சில மாற்றங்களை ஏற்படுத்தும். உயர்கல்வி வாய்ப்புகள் அமையும். தடைகளை நீக்கி உங்களை படிப்பில் உயரும் விதத்தில் அமைத்து கொள் வீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

04.08.2016 வியாழன் அதி காலை 03.52 முதல் 06.08.2016 மணி பகல் 12.38 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்

விருப்பத்திற்கு தகுந்த வேலையை செய்து நன்மை பெறுவீர்கள். குறுகிய நோக்கம் கொண்ட வர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

#### திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சொந்த காரணங்களுக்காக உங்களுக்கு சில இடையூறு செய்தாலும் அதை காலம் அறிந்து செயல்பட்டு வெற்றியை நிலை நாட்டுவீர்கள். தொழிலில் சிறந்து விளங்குவீர்கள்.

#### அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

சின்ன சந்தோசத்திற்காக எதையும் இழக்கமாட்டீர்கள். தொழிலில் போட்டியாளர்களை நேராக போட்டி போடுவீர்கள். சொந்த நண்பர்களின் உதவி கிட்டும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** நீலம், சிவப்பு, வெண்மை

## எல்லா உயிர்களிடத்தும் அன்பு...

உலக மக்கள் மீதும், உலக உயிர்கள் மீதும் ஒருவன் கொள்ளும் அன்பு, அவனைப் பண்பாளனாகவும் சுயநலமற்றவனாகவும் ஆக்குகிறது.

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, தென்மேற்கு, தெற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** சனி, ஞாயிறு, திங்கள்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

- வியாழக்கிழமை காலை 06.00 – 07.00 மணிக் குள் விநாயகரை வணங்கி தேங்காய் எண்ணெய் விளக்கு ஏற்றி நீல நிற பூ வைத்து வணங்கி வர சகல காரியமும் அனுகூலமும் வாரா கடன் வசூல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய - ராகு கேது கெடுபலன்களுக்கான பரிகாரங்கள்!

ஆர்.மகாலட்சுமி

பிரம்மன் உலகைத் தோற்றுவிக்கும் போது அவரது மனதிலிருந்து சந்திரனும், கண்களிலிருந்து சூரியனும், நெருப்பிலிருந்து செவ்வாயும் பூமியிலிருந்து புதனும், ஆகாயத்திலிருந்து பிருஹஸ்பதியும் (குரு) நீரிலிருந்து சுக்கிரனும் காற்றிலிருந்து சனியும் தோன்றினர் என்பர். பின்பு வான மண்டலம் 12 ராசிகளாகவும், 27 நட்சத்திரங்களாகவும் பிரிக்கப்பட்டது.

## சூரியன், சந்திரன், ராகுகேது

பாற்கடலைக் கடைந்த போது உண்டான அமிர்தத்தைக் குடிக்க சுவர்ணபானு என்னும் அசுரன் முயன்ற போது, சூரியனும் சந்திரனும் அவர்களை விஷ்ணுவிடம் காட்டிக் கொடுக்க, கோபமடைந்த விஷ்ணு அவ்வசுரனை இரு துண்டாக்கினார். அமிர்தம் உண்டதால் அவன் இறக்கவில்லை. அவ்வசுரனே ராகு கேது என்னும் இரு கிரகங்கள் என்று புராணம் கூறுகிறது.

அதனால் எப்போதுமே ராகு கேதுக்கள் சூரியன், சந்திரனைப் பகைவர்களாகக் கருதினர். அதனாலேயே சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படுகின்றன.

ராகுகேதுக்கள் நிழல் கிரகங்கள். அவர்கள் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே வரும் போது அவர்களின் நிழல் சூரிய சந்திரரை மறைக்கும். அதனால் சூரியனும் சந்திரனும் பலமிழந்து கிரகணமாகி விடுகின்றனர். சந்திரனுடன் ராகு கேதுக்கள் சேரும் போது மனநிலை பாதிப்பை உண்டாக்குவதோடு, தாயார் நிலையையும் கெடுக்கின்றனர். இது போலவே சூரியனுடன் சேரும் ராகு கேதுக்கள் கண் பாதிப்பு, உடல்நிலை கோளாறு, தந்தைக்குக் கெடுதல், கௌரவக் குறைச்சல் போன்றவற்றை உண்டாக்குகின்றனர்.

இதற்கு சிவாலயங்களில் நெய் தீபம் ஏற்றுதல், தீப தானம் போன்றவை சிறந்த பரிகாரங்களாகும். சூரியன், ராகு சேர்க்கை பெறின் பிற மதத்தவர்க்கு அல்லது பிற மத வழிபாட்டுத் தலங்களுக்கு விளக்கு மின் விளக்கு உபயம் செய்தலும் நல்ல பலனைத் தரும். அதுபோல சந்திரன், ராகு சேர்க்கை பெறினும், பிற மதத்திலுள்ளவர்க்கு அல்லது பிற மத வழிபாட்டுத் தலங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுப்பது மிக நல்ல பரிகாரமாகும்.

## செவ்வாயும் சனியும்

காலபுருஷ தத்துவப்படி மேஷம் முதல் வீடு என்பதும், மீனம் 12ஆம் வீடு என்பதும் எல்லாரும் அறிந்ததே. அதன்படி காலபுருஷனுக்கு மேஷம் என்னும் சர ராசிக்கு பாதகாதிபதி 11ஆம் வீட்டுச் சனி ஆவார் அவரின் அட்டமாதிபதி செவ்வாய் ஆவார். எனவே ஒரு ஜாதகத்தில் சனி, செவ்வாய் சேர்க்கை, பார்வை சம்பந்தமானது மண வாழ்வில் மிகப் பெரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. எனவே தான் இது போன்ற அமைப்புள்ள ஜாதகருக்கு 27 வயதிற்குமேல் திருமணம் செய்ய வேண்டும் என்கிறார்கள். அவ்வாறு செய்யும் போது மாங்கல்ய தோஷம் வலுவிழந்து, ஒரு திருமணத்தோடு வாழ முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலருக்கு, சனி, செவ்வாய் சேர்க்கை காதல், கலப்பு மணம் நடக்கவும் காரணமாகிறது. ஏனெனில் 8ஆம் இடம் எனும் மாங்கல்ய ஸ்தானாதிபதியுடன் 11 என்னும் பாதகாதிபதி சம்பந்தம் ஏற்படும்போது ஏதேனும் ஒரு வழியில் மாங்கல்யத்துக்கு தோஷத்தை பாதகத்தை ஏற்படுத்தி விடுகிறார். சிலருக்கு விவாகரத்து கருத்து வேறுபாடு விபத்து போன்றவை உண்டாவதற்கும் இதுவே காரணமாகும். இதற்கு தாலி தானம், ஏழைகளின் திருமணத்திற்கு உதவுதல், இஷ்ட தெய்வத்திற்கு தாலி செய்து அணிவிப்பதாக பிரார்த்தனை செய்தல், குலதெய்வ வழிபாடு போன்றவை சிறந்த பரிகாரம் ஆகும்.



## செவ்வாயும் சுக்கிரனும்

செவ்வாய் இயற்கை அசுபர், பெண்களின் களத்திரகாரகர், சுக்கிரன் இயற்கை சுபர். ஆண் களின் களத்திரகாரகர். காலபுருஷ தத்துவப்படி செவ்வாய் 1ஆம் அதிபதியும், சுக்கிரன் 7ஆம் அதிபதியும் ஆவர். மேலும் நாடி ஜோதிடம் செவ்வாய் கணவன் என்றும், சுக்கிரன் மனைவி என்றும் கூறுகிறது. எனவே ஒரு ஜாதகத்தில் செவ்வாய், சுக்கிரன், 6, 8 எனும் சஷ்டாஷ்டக தோஷம் பெற்றாலும் கணவன்மனைவிக்குள் அடிக்கடி சண்டை வரும். எனவே, திருமண சம்பந்தமான ஜாதகப் பொருத்தம் பார்க்கும் போது பெண்ணின் சுக்கிரனும் மணமகனின் செவ்வாயும் நல்ல நிலையில், மறைவு இல்லாமல் இருப்பதும். அதுபோல பெண்ணின் செவ்வாயும், ஆணின் சுக்கிரனும் 6, 8ஆக இல்லாமலும் மறைவு இல்லாமலும் இருப்பதும் தாம்பத்திய வாழ்வில் நல்ல இணைவுடன் வாழ வழி செய்யும், செவ்வாய், சுக்கிரன் இணைந்திருப்பின் ஜாதகர் தாம்பத்திய வாழ்வில் அதிக ஈடுபாட்டுடன் இருப்பர். மேலும் இப்படி சேர்க்கை அமைந்த தம்பதிகள் அடிக்கடி சண்டைவிட்டாலும் பிரிவு இல்லாமல் இருப்பார்.

## ராகு அல்லது கேதுவுடன் செவ்வாய் சேர்க்கை

செவ்வாயின் மற்றொரு காரகம் சகோதரம். மேலும் செவ்வாய் நோய், விபத்து, ஆயுதம் போன்றவற்றையும் குறிப்பார். இவ்வாறு சேர்க்கை உள்ள ஜாதகர்களுக்கு திருமணத் தடை ஏற்படும். மேலும் அவரின் சகோதரருக்கும் அதன் தசா புக்தி காலங்களில் விபத்து போன்றவை ஏற்படும். சில சமயம் கணவன் மனைவிக்குள் பிரிவினை போன்றவை ஏற்படும். ராகு கேதுக்களுடன் செவ்வாய் சேர்ந்திருந்தால் நாக சுப்பிரமணியரை வணங்க வேண்டும். அதனால் இடர்கள் தீரும். மேலும் செவ்வாய், ராகு சேர்க்கைக்கு துர்க்கை வழிபாடு மிகச் சிறந்தது. சிவப்பு மலர்களால் துர்க்கையை அர்ச்சனை செய்வதும், குங்கும அர்ச்சனை செய்வதும் பலமான பரிகாரம் ஆகும். மேலும் மிருத்யுஞ்ஜய ஜெபமும் ஏற்றது.

## ராகு அல்லது கேதுவுடன் சுக்கிரன் சேர்க்கை

சுக்கிரன் களத்திரகாரகன், திருமணத்திற்கு உரியவன் என்பது எல்லாரும் அறிந்ததே. ராகுவோ விஷமுள்ள பாம்பு கிரகம். கொடுத்துக் கெடுப்பவன் ராகு. ஆனால் கேதுவோ எதையும் பிரிப்பார் அல்லது சுருங்கச் செய்வார். முக்கியமாக இந்த அமைப்பு 7ஆம் பாவத்தோடு சம்பந்தப்பட்டால், திருமணத் தடை, மண வாழ்வில் ஈடுபாடு இன்மை, விவாகரத்து போன்றவற்றை ஏற்படுத்தி, ஜாதகருக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கிறார்.

இதே அமைப்பு 5ஆம் பாவத்தோடு சம்பந்தப்பட்டால் கர்ப்பப்பை சம்பந்தமான கோளாறுகளை ஏற்படுத்துகிறார். ஜாதகத்தில் சுக்கிரன், ராகு சம்பந்தப்பட்டால் ராகுவுக்கு தேன் அபிஷேகம் செய்வது சிறந்தது. மேலும் லட்சுமி நரசிம்மர் வழிபாடு, துர்க்கை வழிபாடும் சிறந்தது. பழங்கால நூல்களில் பூசணிக்காய் தானம் சிறந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

## சூரியனும் சுக்கிரனும்

சூரியன் சுக்கிரன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் தொடர்ந்தே வருவார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். சில சமயங்களில் சூரியனுக்கும் சுக்கிரனுக்கும் இடையே 43 பாகை இடைவெளி இருந்தால் மிகத் தாமதமான திருமணம் ஏற்படும். சிலருக்கு திருமணமே நடக்காமலும் போகலாம். இதற்கு வெள்ளை மலர்களால் சுக்கிரனை வணங்குவது பரிகாரமாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்முகி ஆண்டு ஆடி மாதம்
16.07.2016 முதல் 16.08.2016 வரை





தனக்கென்று தனி வழியை ஏற்படுத்தி செயல்படும் கும்பராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம கேதுவும், ஏழாமிட ராகுவும் சில கஷ்டங்களை தந்து வைத்தாலும் முற்பகுதி குருபார்வை பெறுவதால் நன்மையும், பிற்பகுதி நட்புகளால் சில சிரமத்தை அடைய வேண்டி வரும். வரும் முன் காத்து கொள்வது நன்மையை தரும். பொருளாதார ஏற்றம் பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியின் உங்களின் கடமைகளை திறம்பட செய்து வருவீர்கள். தொழிலாளர்களின் ஒற்றுமைக்காக தொழிற்சங்க பதவியில் இருப்பவர்கள் சிறப்பாக செயல்பட்டு தொழிலாளர்களின் அன்பை பெறுவீர்கள். யாரிடமும் சமாதானத்தை விரும்ப மாட்டீர்கள். பொறுப்புடன் செயல்படுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

புதுமையை விரும்பும் நீங்கள் எல்லோரிடமும் இனிமையாக பேசி காரியத்தை சாதித்து கொள்வீர்கள். மன வலிமையுடன் செயல்படும் நீங்கள் பொது விடயத்தில் கவனமாக இருந்து விரும்பும் வாழ்வை அமைத்து கொள்வீர்கள். பொருளாதார நன்மை அடைவீர்கள்.



**வியாபாரிகளுக்கு**

உங்களின் தொழிலில் பல போட்டிகளும் அவசரமான முடிவுகளை எடுக்கும் சூழ்நிலை உண்டாகும். திரவப் பொருட்களின் விற்பனை நன்றாக இருக்கும். மருத்துவத்துறையில் மருந்து விற்பனை அதிகரிக்கும். தொழிலில் நீங்கள் எதிர்பார்த்த உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும். திடீர் வருமானம் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் திறம்பட செயல்படுவீர்கள். ஆரம்பதில் சில விடயங்களில் தயக்கம் இருந்தாலும் பின்பு பிறப்பான வளர்ச்சியை பெறுவீர்கள். தொலைதூர பயணம் பயனுள்ளதாக அமையும். நண்பர்களின் உதவி கிட்டும்.

**பெண்களுக்கு**

பெண்களின் பலருக்கு வேலை வாய்ப்பு அமையும். சிறந்த கல்வியாளராக விளங்குவீர்கள். மருத்துவ கல்வி சிறப்பாக அமையும். சுயதொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதாரம் மேலும் வளம் பெறும்.

**மாணவர்களுக்கு**

தரமான கல்வியை பெறுவீர்கள். மருத்துவம், பொருளாதாரம் ஆராய்ச்சி போன்ற கல்வி யில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் ஆதரவு வளர்ச்சியை கல்வியில் பெற்று தரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

06.08.2016 பகல் 12.39 முதல் 08.08.2016 திங்கள் இரவு 01.29 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்**

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற பல சிரமங்களை அடைவீர்கள். குறித்த நேரத்தில் காரியம் நடக்காமல் தாமதமாவது சிரமத்தை தரும். உறுதியான மன நிலை வெற்றியை தரும்.

**சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

வெளியூர், வெளிநாட்டு தொடர்புகளால் சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி கொள்வது நல்லது. கல்வியை சேமிப்பீர்கள்.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரர்களின் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள உங்களில் உண்டான உதவிகளை செய்வீர்கள். தொழிலில் நினைத்ததை அடைவீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** நீலம்,

## சீரிய ஆன்மிக வாழ்க்கை

சீரிய ஆன்மிக வாழ்க்கையின் ஒரு கூறாக, சுயநலமின்றி மக்களுக்குத் தொண்டு செய்வதை சுவாமி விவேகானந்தர் பெரிதும் வலியுறுத்தினார்.

மஞ்சள், கருப்பு

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** சனி, வியாழன், ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமை, ஞாயிற்று கிழமைகளில் பைரவர் வழிபாடு செய்து நல்லெண்ணெயை தீபம் போட்டு வழிபட்டு வர நற்பலன் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

## கும்பம்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

சனி பகவானின் ஆதிக்கம் பெற்று பிற ருக்கு உதவி செய்யும் மனம் கொண்ட கும்ப ராசி வாசகர்களே! இதுவரை உங்களின் ராசிக்கு ஏழாமிடத்தில் அமர்ந்து உங்கள் ராசியை பார்த்தும் மூன்றாமிடத்தையும், லாபஸ்தானத்தை யும் பார்த்த குரு இனி உங்களின் ராசிக்கு விரைய ஸ்தானத்தையும் தனஸ்தானத்தையும், நான்காமிடத்தையும் பார்வை இடுவதும். உங் களின் வாழ்க்கையில் பல மாற்றங்களையும் தந்து சிறப்பான வளர்ச்சியை தருவார். மேலும் உங்களின் ராசிக்கு அட்டம ஸ்தானத்தில் குரு அமருவது நல் லதல்ல என்பதால் எதிலும் சற்று எச்சரிக்கையாய் இருப் பது மிகவும் நல்லது.

குரு பௌர்ணமி உங் களின் ராசிக்கு இரண்டா மிடமான குடும்ப ஸ்தானத்தை பார்வை இடுவது குடும்பத்தில் சுப காரியங்களும், மகிழ்ச்சி யான சம்பவங்களும் நடக் கும். பொருளாதாரத்தில் வளர்ச் சியை பெறுவீர்கள்.

பணப்புழக்கம் தொடர்ந்து வளர்ச் சியை பெற்று நல்ல பலன் கிடைக்க பெறுவீர்கள். சொன்னபடி நடக்கும் வாய்ப்புகள் அமையும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையும் முன் யோசனையையும் செய்து கொள்வது நல்லது. ஆரம்ப கல்வி சிறப்பாக அமையும். தெரிந்த சிலருக்கு ஒதுங்கி இருந்தாலும் ஏதாவது பிரச்சி னைகள் தேடி வரும்.

உங்களின் ராசிநாதன் பத்தாம் பார்வையாக ஏழாமிடத்தை பார்ப்பது உங்களின் கூட்டு முயற் சிக்கு நல்ல பலனை தரும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் ஒப்பந்தங்களில் சரி பார்த்து பின்பு கையொப்பமிடுவது நன்மை தரும்.

குரு நான்காமிடமான சுகஸ்தானத்தை பார்ப் பது வாகன வசதிகளும், கணவன், மனைவி ஒற் றுமையுடன் இணக்கமான உறவுகள் கொள்வது நன்மையை செய்யும். வீட்டு பராமரிப்பு, வீட்டு உபயோக பொருட்கள் வாங்கும் வாய்ப்புகள் அமையும். விளைநிலங்கள் நல்ல விளைச்சல் பெற்று சிறப்புடன் செயல்படுவீர்கள். வசதிக ளுடன் வாழ்வு மலரும். எதிர்காலத்தில் மேலும் நன்மைகளை அடையும் வாய்ப்புகள் வந்து சேரும். குரு அமர்ந்த இடம் சரியில்லாததால் பல இடையூறுகள் வந்து சேரும். அதிலிருந்து மீண்டு வருவது தான் நீங்கள் செய்யும் மிகப் பெரிய காரி யமாக இருக்கும். வாழ்க்கைக்கு உகந்த வளர்ச்சி யையும் தொழிலில் வாய்ப்புகளையும் அமைத்து கொள்வீர்கள். எதிர்பார்க்கும் காரியம் தாமதமா னாலும் உங்களுக்கு சாதகமாக அமை யும். உண் மையும், சத்தியத்தையும் நம்புவீர்கள்.

உங்களின் ராசிக்கு பன்னிரெண்டாமிடமான விரைய ஸ்தானத்தை குரு பார்ப்பது உங்க ளுக்கு நல்ல பலன் தரும். ஒரு செலவு தவிர்க்க முடியாது என்றாலும் அதை அதிகம் செலவில்லாமல் தடுத்து நிறுத்துவார். உடல் நல குறைபாடுகளால் மருத்துவ செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற் பட்டாலும் தேவையற்ற செலவுகளை குறைத்து விடுவார். பொருள் வாங்க சென்றாலும் அதில் சில ஆதாயம் கிடைக் கும்படி செய்வார். பொதுபலன் என்று எடுத்துக் கொள்ளும் போது உங் களின் ராசிக்கு லாபமும் நஷ்டமும், இன்பமும், துன்பமும் கலந்தே இருக்கும். உங்களின் ராசிநாதனும், விரையாதி பதியும் சனியாக இருப்பதால் உங்களுக்கு நெருக்கமான வர்களே உங்களை ஏமாற்றுவார்கள் என்பதால் பலரையும் முழுமையாக நம்பி செயல்படாமல் இருப்பது நல்லது.

வரும் 17.01.2017 முதல் 10.03.2017 வரை குரு அதிகாரம் பெற்று துலாம் ராசிக்கு சென்று திரும்புவது உங்களின் வலிமை மேலும் அதிக ரிக்கும். உங்களின் வளர்ச்சிக்கு நல்ல பாதையை காட்டும் குரு பார்க்க கோடி நன்மை சில காலம் வருமானம் தொடர்ந்து கிடைக்க பெறு வீர்கள்.

**உங்களின் ராசி பரிகாரத்திற்கு உரியது என்ப தால் வியாழக்கிழமை விநாயகரையும் நவக்கிரக குருவையும் வணங்கி வருவது நன்மையை தரும்.**

### அகிம்சை

சொல் செயல் சிந்தனை களால் பிறரையும், பிற உயிர் களையும் துன்புறுத்தாமல் இருப்பது அகிம்சையாகும். இந்த அகிம்சை நெறிதான் மனித வாழ்க்கைக்கு அடிப்ப டையாக இருக்க வேண் டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறமுறையின் ஐந்து நறுமணங்கள்!



தூப தீபம் என்பது ஊதுபத்தி, சாம்பிராணி போன்ற கந்தாதிகளையல்ல. ஐம்புலன்களால் அறிய முடியாத (intangible) அறமுறைகளே ஆகும். அசுத்தம், அறியாமை, பாப காரியங்கள் ஆகியவற்றை அறமுறையின் நறுமணம் விரட்டியடிக்கும். அறமுறையின் ஐந்து நறுமணங்களாகக் குறிப்பிடப்படுபவை) முதலாவது ஒழுக்க முறைமை (morality) தீயதைத் துறந்து ஒழுக்கப் பண்பை வளர்த்துக்கொள்வது. இரண்டாவது தியானம் (மஹாயானத்தை உறுதியாக நம்புவது), மூன்றாவது விவேகம் உடலையும் மனத்தையும் பற்றிய ஆழ்ந்த சிந்தனை, நான்காவது விடுதலை அறியாமை ஏற்படுத்திய கட்டுகளை அறுத்தெறிவது, ஐந்தாவது முழுமையான அறிவு (சுத்த ஞானம்) எப்போதும் விழிப்புடன் எவ்விதத் தடையுமின்றி இருப்பது.

புத்தர் இவற்றையே சிறந்த நறுமணப் பொருள்களாக தமது சீடர்களிடம் குறிப்பிட்டார். இவற்றைவிட மதிப்புமிக்க தூபப் பொருட்கள் உலகில் இல்லையென்பதே அவருடைய கருத்து, ஆனால் மக்கள் ஊதுபத்தி, சாம்பிராணி போன்ற கந்தவர்க்கங்களையே நறுமண புகைப் பொருட்களாகக் கருதிப் பயன்படுத்துகின்றனர். புத்தரைப் பொறுத்தவரை நற்பண்புகளே வாச மலர்கள். தன்னுடைய சொந்த ஆன்மாவுக்கும், மற்றவர்களுக்கும் பயன்தரக்கூடியவை அந்தப் பூக்களே. அவை ஒரு போதும் வாடுவதில்லை.

புத்தர் தீபம் என்றது, எப்போதும் அணையாமல் ஒளிவீசக்கூடிய விழிப்புணர்வையே ஆகும். ஆன்ம விடுதலையை நாடுகிறவர்களுக்கு அவர்களுடைய சரீரமே ஒளிவிளக்கு, மனமே விளக்குக்கான திரி, ஒழுங்குமுறையே (கட்டுப்பாடு) விளக்கெரிக்கும் எண்ணெய், விவேகமே சுடரொளி. விழிப்புணர்வு தீபத்தை ஏற்றுவதன் மூலம் இருளை அறியாமை அவர்கள் விரட்டியடிக்கிறார்கள். அறமுறையை (தர்மம்) மற்றவர்களிடமும் எடுத்துச் செல்வதன் மூலம் ஒரு விளக்கில் இருந்து ஓராயிரம் விளக்குகளை அவர்களால் ஏற்ற முடிகிறது. அந்த ஒளி எப்போதுமே நிலைத்திருக்கும்.

அறியாமை நிரம்பிய மக்களோ, "விளக்கேற்றுதல்" என்றாலே, "தாவர எண்ணெய் ஊற்றிய விளக்கை வீட்டினுள் ஏற்றி வைக்க வேண்டும்" என்று கருதிக் கொள்கிறார்கள். புத்தரின் போதனை எல்லா காலத்திலும் அவ்வாறே தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. ஒரு புத்தரின் புருவ மத்தியில் தோன்றும் மங்கலக் குறிகள் முப்பத்திரண்டு. அவற்றுள் ஒரு சுழிப்பில் நெறிக்கும் சுடர்போதும், உலகங்களை ஒளிரச் செய்வதற்கு.

ஆறு காலமும் சாதனை புரிவது என்றால் ஆறு புலன்களையும் கொஞ்சமும் தொய்வின்றிக் கட்டுப்பாட்டில் வைப்பது, விழிப்புணர்வைக் காப்பது என்றே கொள்ள வேண்டும். "இரவும் பகலும் ஸ்தூபிகளை வலம் வருதல்" என்றது. நம்முடைய உடலையும் மனதையும் "ஸ்தூபி" யாகக் குறிப்பதாகும். நம் விழிப்புணர்வு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய உடலையும் மனத்தையும் ஓயாமல் சுற்றிச் சூழ்ந்திருப்பதையே "வலம் வருதல்" என்றது.

நிர்வாண நிலையை அடைய மகான்கள் இந்த வழியையே பலகாலமாகப் பின்பற்றி யிருக்கின்றனர். ஆனால் இன்றைய மக்களோ உள்நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக வெளியே பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சுற்றி வருகிறார்கள். இரவு பகலாகச் சுற்றிக் களைத்துப் போகிறார்கள். எவ்விதப் பயனு மில்லாமல், தங்கள் ஆன்மாவின் பக்கம் அவர்கள் இன்னமும் சென்றபாடில்லை.



நோன்பிருப்பதிலும் அப்படித்தான். அது உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளாவிட்டால், அந்த முயற்சியும் பயனற்றதே.


உடலையும் மனத்தையும் ஒழுங்குப் படுத்துவதற்காகவே நோன்பிருப்பது. அப்போது தான் அவை கலக்கம் கொள்ளாமலும், அமைதிக் குலைவுக்கு உள்ளாகாமலும் இருக்கும். புலன்களின் இச்சைகளுக்கு இரையாகாமல் தன்னைக் காத்துக் கொள்ளவே நோன்பிருப்பது. பலன்களின் இச்சை வெளியேயிருக்கும் அபாயம் என்றால், மூன்று நச்சுத் தன்மைகள் (கோபம், பேராசை, அறியாமை) உள்ளேயிருக்கும் அபாயங்கள்.

அழகர் நம்பி

## அதிசயத்திலும் அதிசயம்

உலகப் படைப்பிலேயே மனிதன் தான் முதன்மையான அதிசயமாக விளங்கு கிறான். உலகில் பிறப்பும் ஆச்சரியமானது, இறப்பும் ஆச்சரியமானது, வாழ்வதும் ஆச்சரியமானது. இவ்வை அனைத்துமே நினைக்க நினைக்க ஆச்சரியமானவை. இந்த மனித உடலில் உயிர் தங்கி யிருப்பதுதான் ஆச்சரியமே தவிர, உடலை விட்டு உயிர் போவது ஓர் ஆச்சரியமான விடயம் அல்ல. ஒன்பது ஓட்டைகள் கொண்ட ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி னால், அந்த நீர் ஒழுகிப் போவதில் வியப்பு ஒன்றுமில்லை.

ஒழுகாமல் இருந்தால் அதுதான் வியப்புக்குரிய விடயம். அதுபோல் நவத்துவாரங்களை (ஒன்பது ஓட்டைகளை) உடைய இந்த மனித உடலில் உயிர் போகாமல் தங்கியிருப்பது தான் வியப்புக் குரியதே அன்றி, உயிர் நீங்குவது வியப்புக்குரியது அன்று இது "யோக வாசிட்டம்" கூறும் கருத்து. இந்தக் கருத்தை ஆதிசங்கரரும் கூறியிருக்கிறார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யட்சனின் கேள்விகள்!

மனவேதனையும் களைப்பும் தாகமும் மேலிட தண்ணீருக்காக ஏரியை நோக்கி விரைந்தார் அவர். அப்போது அதே குரல் கேட்டது "யுதிஷ்டிரா, என் சொற்களைப் பொருட்படுத்தாததால் தான் உன் சகோதரர்கள் இறந்தார்கள். என் கேள்விகளுக்கு விடையளிக்காமல் தண்ணீர் குடிப்பாயானால் உனக்கும் உன் சகோதரர்களின் கதியே நேரும்."

அதற்கு யுதிஷ்டிரர், "யார் நீ? நீ என்ன ருத்ரர்களை, மருத்துக்களை, வசுக்களை விட உயர்ந்தவனா? மறுபடியும் உன்னைக் கேட்கிறேன். யார் நீ?" என்று கேட்டார். "நான் ஒரு யட்சன்" எனக் கூறிய வண்ணம் ஒரு யட்சன் யுதிஷ்டிரர் முன்பு தோன்றினான். அவன் பனைமரம் போன்று உயர மானவனாகவும் விசாலமான கண்கள், பெரிய உடல் கொண்டவனாகவும் இருந்தான். அவனைப் பார்த்து யுதிஷ்டிரர் கூறினார்.

"கேள், எனக்குத் தெரிந்த வரை உன் கேள்விகளுக்குப் பதில் கூறுவேன்."

யட்சன் கேட்கலானான்

சூரியனை உதிக்கச் செய்வது எது? அவனை மறையச் செய்வது எது? அவனுடன் துணை செல்வது யார்? அவனது இயக்கத்திற்கு காரணம் யார்?

பிரம்மத்தின் சக்தி அவனை உதிக்கச் செய்கிறது. தர்மம் மறையச் செய்கிறது. கடவுள் அவனுக்குத் துணை போகிறார். உண்மை அவனது இயக்கத்திற்குக் காரணம் ஆகிறது.

லாபத்தில் சிறந்தது எது?

ஆரோக்கியம்.

மிக உயர்ந்த மகிழ்ச்சி எது?

திருப்தி.

உண்மை அறிவு எது?

கடவுளைப் பற்றிய அறிவு.

எது கருணை?

எல்லோருக்கும் இன்பத்தை விரும்புவதே கருணை.

அறியாமை எது?

தன் கடமையை அறியாமல் இருப்பது.

நேர்மையானவன் யார்?

எல்லார் நன்மையையும் நாடுபவன்.

சோம்பல் என்பது எது?

தன் கடமையைச் செய்யாதிருப்பது.

ஒருவனை பிராமணனாகச் செய்வது எது பிறப்பா? நற்குணமா? கல்வியா? விவேகமா?

ஒருவனின் பிறப்போ கல்வியோ, விவேகமோ அல்ல. நற்குணம் ஒன்றே ஒருவனை பிராமணனாக ஆக்குகிறது.

உண்மையிலேயே ஆனந்தமாக இருப்பவன் யார்?

கடனே இல்லாதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகில் மிக ஆச்சரியம் தருவது எது?

தினமும் ஆயிரக்கணக்கானோர் இறக்கிறார்கள். அதே சமயம் உயிருடன் இருப்போர் தாங்கள் நிரந்தரமாக இருக்கப் போவதாக நம்புகிறார்கள். இதுவே உலகினில் மிகவும் ஆச்சரியமானது.

ஆனந்தத்தை அடையச் சிறந்த வழி எது?

சான்றோர் வகுத்த வழி.

யுதிஷ்டிரரின் பதில்கள் யட்சனுக்கு மிகுந்த திருப்தியை அளித்தன. "குழந்தாய், எனக்கு மிகுந்த திருப்தி அளிக்கும் முறையில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளித்து விட்டாய். உனக்கு நான் வரமொன்று தருகிறேன். உனக்குப் பிடித்த எந்த ஒரு சகோதரனையாவது தேர்ந்தெடு. அவனை நான் மீண்டும் உயிர் பெறச் செய்கிறேன்" என்று கூறினான் அவன். உடனே யுதிஷ்டிரர், "யட்சா, நகுலன் பிழைக்கட்டும்" என்று கூறினான். அவரை ஆச்சரியத்துடன் பார்த்த யட்சன் "யுதிஷ்டிரா, பீமன் உனக்கு மிகவும் பிரியமானவன், அர்ஜுனன் உனக்கு ஆதாரம் போன்றவன் என்றெல்லாம் கூறுகிறார்கள். நீ ஏன் நகுலனைக் கேட்கிறாய்? அவன் ஒன்றுவிட்ட சகோதரன் தானே" என்று கேட்டான். அதற்கு யுதிஷ்டிரர், "நேர்மையைத் தியாகம் செய்பவன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான். அதனால் நான் நேர்மையைத் தியாகம் செய்ய விரும்பவில்லை. என் தந்தைக்கு குந்தி, மாத்ரி என்ற இரண்டு மனைவியர். அவர்கள் இருவரையும் சமமாகப் பாவிக்கிறேன் நான். அதனால் நகுலன் மறுபடி வாழ்வு பெறட்டும். அதனால் மாத்ரியின் ஒரு மகனாவது உயிருடன் இருப்பான்" என்று கூறினார்.

இதைச் சொன்ன கணமே, எல்லா சகோதரர்களும் உயிர் பெற்றெழுந்தனர். அவர்களது தாகம், பசி, களைப்பு அனைத்தும் மறைந்து விட்டிருந்தது. யுதிஷ்டிரர் கூறினார் "ஐயா, நான் ஒன்று கேட்க வேண்டும். உண்மையில் நீர் யார்? உம்மை சாதாரண யட்சனாக நினைக்க முடியவில்லை." யட்சன் சிரித்துக் கொண்டே, "ஓ! குழந்தாய்! நான் தான் தர்மம், உன் தந்தை, உன் செயல் என்னை மிகவும் மகிழ்ச்சி அடையச் செய்தது. நீ ஏதாவது ஒரு வரம் கேள்" என்று கூறினார். அதற்கு யுதிஷ்டிரர், "தர்ம தேவரே, மானால் எடுத்துச் செல்லப்பட்ட இந்த நெருப்புக் கட்டையில் தீ அணைந்து விடாமல் இருக்கட்டும்" என்றார். அப்போது அந்த யட்சன், "யுதிஷ்டிரா, உன்னைச் சோதிக்கவே மான் உருவில் வந்து பிராமணனின் நெருப்புக்கல்லையும், கட்டைகளையும் தூக்கிச் சென்றேன் நான். நீ கேட்ட வரம் தந்தேன். வேறு ஏதாவது கேள்" என்றார். "நாங்கள் பன்னிரண்டு வருடங்கள் வனத்தில் கழித்து விட்டோம். இனி வரும் ஒரு வருட அஞ்ஞான வாசத்தின் போது எங்களை யாரும் அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது" என்பதை அடுத்த வரமாக வேண்டினார் யுதிஷ்டிரர். இந்த வரத்தையும் உனக்குக் கொடுத்தேன். உலகம் முழுவதும் அலைந்து திரிந்தாலும் உங்களை யாரும் அடையாளம் காண முடியாது. மறைமுகமாக இந்தப் பதின்மூன்றாம் வருடம் நீங்கள் விராட நகரத்தில் வாழ்வீர்கள். நீங்கள் விரும்பிய உருவத்தை அடையும் சக்தியையும் பெறுவீர்கள்" என்று கூறி அவர்களை வாழ்த்தி மறைந்தார் தர்மதேவர். பாண்டவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுக் கொண்டு, தௌம்யரும் சேர்ந்து வர பதின்மூன்றாம் வருட வாழ்க்கையைப் பற்றித் திட்டம் போட்டவாறு தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசித்திரக் கண்ணாடி

ஒரு நாள் அர்ச்சுனன் குமாரன் அபிமன்யுவின் இல்லத்துக்கு ஒரு முனிவர் வந்தார். அவரை வரவேற்றுப் பாத பூஜை செய்து உபசரித்தாள் அவன் மனைவி வத்சலா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சியைத்தந்த தற்பெருமை

வெகு காலத்திற்கு முன் கோரேலால் என்ற சிற்பி ஒருவர் இருந்தார். அவருடைய திறமைக்கு ஈடு இணையே இல்லை.

அவர் யாரைச் சிற்பம் வடித்தாலும் அவரைப் போல அப்படியே அந்தச் சிற்பம் இருக்கும். சிறு வேறுபாடும் யாராலும் கண்டு பிடிக்க முடியாது.

இதனால் அவர் புகழ் உலகம் எங்கும் பரவியது.

ஒரு நாள் அவர் கனவில் சாவுக் கடவுள் தோன்றினார். "இன்றைய பதினைந்தாம் நாள் உன் உயிரை எடுத்துச் செல்லப் போகிறேன்" என்று சொல்லி மறைந்தார்.

சாவிலிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தார் அவர். நல்ல வழி ஒன்று தோன்றியது. தன்னைப் போலவே ஒன்பது சிற்பங்கள் செய்தார்.

பதினைந்தாம் நாள் வந்தது.

அந்தச் சிற்பங்களுக்கு இடையே தானும் ஒரு சிற்பம் போல நின்று கொண்டார்.

எம தூதர்கள் அங்கு வந்தார்கள். பத்துக் கோரேலால் அங்கு நிற்பதைப் பார்த்தார்கள். எது உண்மையான கோரேலால் என்று ஒவ்வொரு சிற்பமாகக் கவனித்தார்கள்.

உண்மையான கோரேலாலோ மூச்சை அடக்கி அசைவின்றி சிற்பம் போலவே இருந்தார். அவர்களால் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

எமனிடம் சென்று நடந்ததைச் சொன்னார்கள்.

எம தூதர்களுடன் எமனும் அங்கு வந்தார். பத்துச் சிற்பங்களில் எது உண்மையான கோரேலால் என்பதை எமனாலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

எப்படி உண்மையான கோரேலாலைக் கண்டுபிடிப்பது என்று குழம்பிய எமன் சிந்தனையில் ஆழ்ந்தார். நல்ல வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

"கோரேலால்! நீ செய்த சிற்பங்கள் அற்புதமாக உள்ளன. இருந்தாலும் அவற்றில் ஒரு குறை உள்ளது" என்றார்.

"என் சிற்ப வேலையில் குறையா? இருக்க வாய்ப்பே இல்லை" என்று நினைத்தார் கோரேலால்.

ஓர் அடி முன்னால் வந்த அவர் "எமனே! என் சிற்பங்களில் என்ன குறை கண்டாய்?" என்று கேட்டார்.

அவரைச் சுட்டி காட்டிய எமன் "இந்தச் சிற்பத்திற்குத் தற்பெருமை என்ற குறை உள்ளது. அதனால் சாகப் போகிறது" என்றார்.

* எ.சோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருபெயர்ச்சி

## சிறப்பு பலன்கள்

02.08.2016 முதல் 02.09.2017 வரை
குரு பெயர்ச்சி பலன்கள்

குரு பகவானின் ஆதிக்கத்தில் பிறந்த மீன ராசி வாசகர்களே! இது வரை உங்களின் ராசிக்கு ஆறாமிடத்தில் அமர்ந்து தொழில் ஸ்தானத்தையும் பன்னிரெண்டாமிடத்தையும், இரண்டாமிடத்தையும் பார்வை செய்த குரு இனி உங்களின் ராசியை பார்ப்பதுடன் ராசிக்கு ஏழாமிடத்தில் அமர்ந்து லாபஸ்தானத்தையும், மூன்றாமிடத்தையும் பார்ப்பது உங்களின் பல கனவுகளை இனி செயல் படுத்தும் வாய்ப்புகளை பெறுவீர்கள்.

உங்களின் ராசியை ஏழாம் பார்வையாக பார்ப்பது உங்களின் திருமண வாய்ப்புகள் இனிதே நிறைவேறுவதும் கூட்டு தொழிலில் சிறந்து விளங்குவீர்கள். பணபலம் பெருகும். கடல் கடந்து வேலை செய்ய வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் அமையும். திறமைகளை வெளிப்படுத்தி உங்களின் மரியாதையும், மதிப்பையும் பெருக்கிக் கொள்வீர்கள். உங்களின் ராசிக்கு ஏழாமிடத்தில் குரு அமர்வது உங்களின் தொழிலில் பல மாற்றங்களையும் எளிமையான வியாபார வாய்ப்பையும் பெறுவீர்கள். உங்களின் லாப ஸ்தானத்தை ஐந்தாம் பார்வையாக பார்ப்பது உங்களின் எண்ணங்களை செயல்படுத்தி லாபகரமான தொழில் வாய்ப்புகளை பெறும் வாய்ப்பும் அமையும். புத்திரர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அமையும். வீட்டில் சுபகாரிய முயற்சிகள் கைகூடும்.

மூன்றாமிடமான முயற்சி ஸ்தானத்தை ஒன்பதாம் பார்வையாக பார்ப்பது உங்களின் செயல்பாடுகளின் பிறரின் உதவிகள் கிடைக்கும். மாணவர்களின் கல்வியில் வளர்ச்சியை பெறுவீர்கள். எடுத்த காரியம் துவங்கவும், கொண்ட பணி சிறக்கவும் உங்களுக்கு குரு அனுக்கிரகம் கிடைக்கும். உங்களின் ராசிநாதன் குரு என்பதால் குரு மறைந்தாலும் குரு பார்வை பட்டாலும் உங்கள் ராசிக்கு எந்த பாதிப்பையும் தராது என்றாலும் மகரத்தில் குரு இருக்கும் காலம் உங்களின் ராசிக்கு பாதிப்பை தரும் மற்ற காலங்களில் குரு உங்களுக்கு எந்த சிரமும் வராது. ரேவதி நட்சத்திரர்கள் அவசர முடிவுகளை தவிர்த்து நிதானமாக செயல்படுவதன் மூலம் நினைத்ததை சாதித்து காட்டுவீர்கள். கடல் சார்ந்த தொழில் செய்து வருபவர்களும், நகை அடவு கடைகள் வைத்திருப்பவர்களுக்கு நற்பலன்களும், பொருளாதார மேன்மையும் உண்டாகும். தாயார் உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும். உங்களின் மனைவி மூலம் ஆதாயமும் புதிய தொழில் துவங்குதல், வேலை வாய்ப்புகள் அமைந்து பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். சகோதரர்களின் மூலம் பேச்சு வார்த்தை மூலம் சொத்து சார்ந்த பிரச்சினைகளை சுமுகமாக பேசி தீர்த்து வைத்துக் கொள்வீர்கள்.

வரும் 12.01.2017 முதல் 10.03.2017 வரை ஒரு அதிகாரம் பெற்று துலாத்திற்கு சென்று திரும்பும் காலம் உங்களின் தொழில் மேலும் வலுப்பெற்று சிறப்பான பலன்களை அடைவீர்கள். அதிகாரத்தில் குரு இருக்கும் காலம் நவக்கிரக குருவை வியாழக்கிழமை வணங்கி வர எல்லாம் சுபமாக அமையும். மேலும் வளர்ச்சியை பெற்று வர வியாழக்கிழமைகளில் பைரவருக்கு நெய் விளக்கு போட்டு வர நினைத்ததை குறித்த நேரத்தில் முடித்து கொள்வீர்கள்.


கணித்தவர்
வாடிப்பட்டி



R. ஆனந்தன்
919789341554


### பிறவியின் நோக்கம்!

இறைவனின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்புடன் நாம் ஒவ்வொருவரும் பிறந்திருக்கிறோம். மனிதப் பிறவி எடுத்ததன் பெரும் பயனே இறைவன் திருவடியைச் சேர்வதுதான் என்பதை வள்ளுவனார், "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்" என்ற குறள் மூலம் நமக்கு உணர்த்தியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துர்முகி ஆண்டு ஆடி மாதம்**
**16.07.2016 முதல் 16.08.2016 வரை**




காலம் அறிந்து பல மாற்றங்களையும் வளர்ச்சியையும் தரும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு இதுவரை பட்ட சோதனைகளுக்கு முழுமையான நற்பலன்களை பெறுவீர்கள். கடனி லிருந்து விடுதலை, வழக்குகளிலிருந்து விடுதலை குடும்பத்தில் இருந்த பிரிவினை நீங்கி நன்மை பெறுவீர்கள். இனி எல்லாம் ஏற்றமாக அமையும்.

**பணியாளர்களுக்கு**

தொழிலாளர்களின் பலர் பல்வேறு சோதனைகளை தாங்கி வருவீர்கள். இனி அதிலிருந்து நிரந்தர தீர்வுகள் அமையும். ஏற்கனவே பார்த்து வரும் இடத்தை காட்டிலும் கூடுதல் சம்பளம் பெற வேறு இடத்திற்கு முயற்சி செய்து பணி பெறுவீர்கள். பொருளாதாரம் படிப்படியாக முன்னேறும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

கோவில் காரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். எல்லோரின் வாழ்வும் வளம் பெற உங்களால் இயன்ற உதவிகளை செய்வீர்கள். அனைத்து தரப்பு மக்களிடமும் அன்பாய் இருப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் இன்றி இருக்க உதவுவீர்கள். பொருளாதார நிலை சீரடையும்.

**வியாபாரிகளுக்கு**

உங்களின் தொழிலில் விருத்தி அடைய முன்பகுதி சிரமம் இருந்தாலும் பிற்பகுதி நன்றாக அமையும். நகை அடவு கடை வர்த்தக கமிஷன் ஏஜென்சி, வெளிநாட்டு பணப்பரிமாற்றம் போன்ற வற்றில் ஆதாயம் பெறுவீர்கள். உங்களின் வாழ்க்கை தரம் உயரும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையின் வளர்ச்சியை பெறுவீர்கள். நடன கலை, இசைக்கலைஞர்களுக்கு ஏற்றமான காலமாக அமையும். பல நாள் பட்ட கஷ்டம் இனி விரைவில் தீர்ந்து நன்மையை பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதாரம் பெருகும்.

**பெண்களுக்கு**

பெண்களின் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். மன அழுத்தம் குறையும். சுயதொழில் சிறக்கும். குடும்ப ஒற்றுமையில் பிரச்சினைகளுக்கு முடிவு உண்டாகும். பொருளாதாரம் சிறக்கும்.

**மாணவர்களுக்கு**

ஆசிரியர் பயிற்சி, தொழில் நுட்ப, கணணி தொலை தொடர்பு வளர்ச்சியையும் சுயவேலை வாய்ப்பும் அமையும். ஆசிரியர்கள் கவ்னம் உங்களை மேம்படுத்தும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

08.08.2016 திங்கள் இரவு 11.30 முதல் 11.08.2016 வியாழன் பகல் 11.11 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**பூரட்டாதி 4ஆம் பாதம்**

மருத்துவ காரணங்களால் சிலருக்கு சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டி வரும். தொழிலில் சில கஷ்டம் இருந்தாலும் இம்மாதம் இறுதியில் எல்லாம் சரியாகும்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

உழைப்பை நம்பி இருக்கும் நீங்கள் எங்கும் உங்களின் மதிப்பை விட்டு கொடுக்க மாட்டீர்கள். மற்றவர் சந்தோசத்தில் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

புத்திசாலியான நீங்கள் சில நேரம் தொழிலில் ஆலோசனைகள் மூலம் தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். பொருளாதார வளர்ச்சிக்கு வழி கிடைக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்** : இளம் மஞ்சள், வெண்மை, கருநீலம்

**அதிர்ஷ்ட திசைகள்** : வடக்கு, வடகிழக்கு, கிழக்கு

**பாவத்தினின்றும் விடுதலை**

தான தர்மங்கள், நற்செயல்கள், நல்லொழுக்கம், தவம் போன்ற வற்றால் ஒருவன் பாவங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும் என்பது உண்மையே.

**அதிர்ஷ்ட கிழமைகள்** : வியாழன், திங்கள், புதன்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

செவ்வாய்க்கிழமை சுப்பிரமணியரை வணங்கி இலுப்பெண்ணெய் விளக்கு போட்டு வரவும். வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் நெய்தீபம் அம்மனுக்கும் போட்டு வர நினைத்த காரியம் கை கூடும்.

**கணித்தவர்**
**வாடிப்பட்டி R. ஆனந்தன்**
**919789341554**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடகேசரியில் பிரசுரிக்கப்பட்டு வரும் மாத சிறப்புக்கள் சம்பந்தமான கட்டுரைகள் இந்துக்களின் விழாக்கள் மற்றும் பண்டிகைகள் பற்றியும் அவை தொடர்பான சடங்குகள் பற்றியும் அறிந்து கொள்ள நல்ல சந்தர்ப்பத்தை தருகின்றன. தொடரட்டும் உங்கள் சேவை. நன்றி!

மா.கைலாசநாதர்,
நீர்கொழும்பு

சோதிடகேசரி மாத ஆன்மீக சஞ்சிகையில் வெளியிடப்பட்டு வரும் வெளிநாட்டு கோயில்கள் தொடர்பான கட்டுரைகள் மிகவும் அருமையாக உள்ளன. சம்பந்தப்பட்ட கோயில்களை நேரில் சென்று பார்த்து வந்த உணர்வு ஏற்படுகின்றது. ஆலயங்கள் தொடர்பான படங்களும் அற்புதமாக உள்ளன. இவ்விதமான கட்டுரைகள் தொடர்ந்து பிரசுரிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

சுலக்ஷனா தேவி
கொழும்பு

கடந்த பல மாதங்களாக சோதிடகேசரி மாத சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டு வரும் மகரிஷிகளின் வரலாறு இப்போதைய தலைமுறைக்கு பல அரிய ஆன்மீக புராண செய்திகளை தந்து ஊக்கப்படுத்தும் விதமாக அமைகின்றன. நன்றி!

மா.சிவசுப்பிரமணியன்
வெள்ளவத்தை

சோதிடகேசரியில் பிரமிடுகள் பயன்படுத்தும் விதங்கள் பற்றியும், பிரமிடுகள் வழங்கிடும் பலன்கள் பற்றியும் மிகத்துல்லியமாக தெரிவித்து வருகிறீர்கள். இது எங்கள் குடும்பம் முழுவதற்கும் பயனளிப்பதாக உள்ளது. நன்றி!

எம்.கிருஷ்ணகுமார்
யாழ்ப்பாணம்

சோதிடகேசரியில் பல மாதங்களாக பிரசுரிக்கப்பட்டு வரும் தசாவதாரம் தொடர்பான கட்டுரைகள் யாவும் படிக்க படிக்க சுவராஸ்யமாகவும், பகவானின் அருளை வெளிப்படுத்துவதாகவும் இருக்கின்றன. தொடர்ந்து பிரசுரிக்கவும். நன்றி!

ஆர்.கோகுலகிருஷ்ணன்
திருகோணமலை

சோதிடகேசரியில் அவ்வப்போது வெளியிடப்பட்டு வரும் தியானம் குறித்தான கட்டுரைகள் மிகவும் பிரயோஜனமாகவும் தியானத்தின் பல்வேறு பலன்களை தெரிவிப்பதாகவும் உள்ளன. தொடர்ந்து இவ்விதமான கட்டுரைகளை சோதிடகேசரியில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

மா.சந்தானலட்சுமி
தெஹிவளை

# சோதிடகேசரி

**ஆடி - ஜூலை 2016**

# விமர்சன சிற்பிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசக்தி வாய்ந்த பரம்பரை மலையாள மாந்திரீகம்

ஆண் பெண் இருபாலரையும் வசியம் செய்யும் மாந்திரிகத்தில் விசேட சக்தி பெற மந்திராச்சாரியாரான ஜீவகாந்தி சாமியிடம் உங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி மனநிம்மதி பெறுங்கள். 62 வருடங்களாக நம்பிக்கை நிறைந்த சேவையாற்றி வந்துள்ளேன். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் எழுத்தோலைகளில் எழுதப்பட்டு பாதுகாப்பாக பேணப்பட்டு வந்திருக்கும் அந்த உண்மையான மலையாள மந்திரங்கள் என்னிடம் உள்ளன. என்னால் முடித்துத்தரப்படும் மாந்திக வேலைகள் முழுமையாக பலன்களைத் தருவதன் இரகசியம் இதுதான்



வெளிநாடுகளில் வசிப்போருக்கு விசேட காப்பு மந்திரம் அருளப்படும்

*ஆண் பெண் வசிய மாந்திரீகத்தில் பாரம்பரிய நிபுணத்துவம் கொண்ட மஹா குரு*

சந்திப்பு : புதன்,ஞாயிறு
நேரம் : 10.00 - 5.00 வரை
சந்திப்பு : திங்கள்,வெள்ளி
நேரம் : 10.00 - 2.00 வரை
சந்திப்புக்கட்டணம் : 300.00

**24 மணிநேரத்துள் பலன் கிடைக்கும் என்ற உத்தரவாதம்**


என்னால் முடித்துத் தரக்கூடிய எனைய மாந்திரிக வேலைகள் : நீண்ட காலமாக உங்களுடன் நெருக்கமாகப் பழகி எல்லா பலன்களையும் அனுபவித்துவிட்டு பின்னர் பிரிந்துசென்ற காதலனை/காதலியை உங்கள் காலடிக்கு கொண்டுவர வேண்டுமா ? கண்டதும் காதல் வந்துவிட்டதா ? வாழ்நாள் முழுவதும் பிரியத்துடன் வாழ்வதற்கு காரியம் செய்து கொடுப்போம், விலகிச்சென்ற தொடர்புகளை திரும்ப ஏற்படுத்தியும் கொடுப்போம். விலகிசெல்லவும் வைப்போம்,விவாகம் தாமதமாகிச் செல்லகிறதா ? குழந்தைகள் இல்லையா ? தொழில் நேர்முகத்தேர்வில் வெற்றிபெறவும்,திடீர் பணவரவுக்கும் காரியம் செய்து கொடுப்போம்.வீடு,வியாபார ஸ்தலம் மென்மேலும் விருத்தியடைய செய்வோம், செய்வினை அச்சுறுத்தல்,விற்கமுடியாத காணியை விற்றுத்தரல்,அதிக இலாபம் பெறுவதற்கு என பல காரியங்களை செய்து முடித்துத் தருவோம்,சகல மாந்திரீக வேலைகளினதும் முழுப்பலன்கள் சர்வ நிச்சயம்,இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

max adz

## ஜீவகாந்தி

**இரகசியம் பேணப்படும்**

**No.07-2/1**(2nd Floor), **W.A.** சில்வா மாவத்தை,வெள்ளவத்தை.
கொழும்பு -06. **TEL : 0770416205 / 0765529844**
**website : www.jeewakanthi.com** (காலி வீதி சிக்னலுக்கு மிக அருகாமையில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ ராம ஜெயம்

# 52 வருட காலமாக என்னால் நிரூபித்துகொண்டிருக்கும் மலையாள மாந்திரிக சக்தியின் வேகம்

**உலக மக்களில் என்னை தெரியாதவர் யாருமில்லை**

ஒரு கூரையின் கீழ் 52 வருட காலமாக மலையாள யந்திர மந்திர சக்திகளை உண்மை வெளிச்சத்துடன் காட்டும் ஒரே ஒரு நிறுவனம் இதுவே...

செய்யத்தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான் செய்யத் தெரிந்த தொழிலை செய்யாதவனும் கெட்டான். இந்த பழமொழிக்கொப்ப, ஒரு சிலர் தொலைபேசி இலக்கத்தை மட்டும் போட்டு மாந்திரீக விளம்பரங்களை செய்கின்றார்கள் . அவர் முகம் தெரியாது இருக்கும் விலாசம் தெரியாது இதை யோசித்து செயற்பட வேண்டியது நீங்களே...!



எண் தத்துவ கணிப்பில் ஒருவருடைய ஆயுள் ஜனன ஜாதகக் குறிப்பை தன் முகத்தை கண்ணாடியில் பார்ப்பது போல தன் ஜாதகத்தை திட்ட வட்டமாகத் தெரிந்துக் கொள்ளலாம். இது ஓர் அற்புத கணிப்பு கணனி முறை ஜாதகம் என்றாலும் ஆண்டாண்டு காலம் என் ஆராய்ச்சிக்கு பின் எழுதி வைத்த கணிப்பே.

நடந்தது நடக்கபோவது, நடக்க இருப்பது, நீங்கள் யார்? நீங்கள் என்ன தொழில் செய்யலாம்? உங்கள் பிறக்கும் குழந்தை வருங்காலத்தில் எத்துறையில் வெற்றி கிடைக்கும்? நீங்கள் செய்யம் தொழில்? அதுவா விதி அல்லது விதியின் பிரகாரம் என்ன தொழில் செய்யலாம்? எப்படிப்பட்ட கணவன் மனைவி அமையும்? எந்த வயதில் வாகன யோகம் உண்டு? எந்த வயதில் திருமணம்? திருமண தோஷங்கள் நீங்க நீங்களே அனுக வேண்டிய மாந்திரீக சுலோகங்கள் உங்களுக்கு எண் கணிப்பில் காட்டப்படும்.

வீடு மனை எத்தனை அடி நீளம் எத்தனை அடி அகலம் அமைய வேண்டும். நீங்கள் போடும் கையெழுத்தில் யோகம் இருக்கிறதா இல்லையா? காலம் காலம் கஷ்டப்படுபவர்களுக்கு நான் ஆராய்ச்சி செய்த அதிர்ஷ்ட விஞ்ஞானம் மூலம் அதிர்ஷ்ட பெயரை அமைத்துக்கொண்டால் விதியை மதியால் வெல்லலாம் என்ற வசனத்திற்கு அமைய பெயர் இலக்க வரிசைகள் மூலம் நீங்களும் குபேர வாழ்வு பெறலாம்.

அதுமட்டுமா என் ஜாதக கணிப்பில் அந்தந்த மாதம் உங்களுக்கு என்ன நடக்கும் அந்த வருடம் என்ன நடக்கும் என்று ஒருவருடமும் கணித்துப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது ஒன்பது வருடங்களுக்கும் கணித்துக் கொள்ளலாம்.

உங்களுக்கு எந்த அதிர்ஷ்டக்கல் அமைந்தால் அதிர்ஷ்டம் ஏற்படும் இந்தக்கணிப்பில் வாஸ்து முறையில் வீடு கட்டுபவர்களுக்கு விரிவான வாஸ்து புத்தகம் ஒன்று ஜாதகம் எழுதிக்கொள்பவர்களுக்கு கொடுக்கப்படும்.

பெரியார் சொல்லின் செல்வன் பேராசிரியர்
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல,
ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

- திருமண கருத்து முரண்பாடு உள்ள காதலன் காதலி திருமணங்கள் எத்தனை எத்தனையோ என்னால் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது.
- என் அருள் ஞான சித்தியால் கல்வியில் சித்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ!
- குடும்பம் நிலைத்தோங்க, குடிபோதையில் அவதிப்படுபவர்களுக்கும் கூட்டங் கூட்டமாக போய் குடிப்பவர்களுக்கும் குல தெய்வ அனுகிரகத்துடன் குடிப்பழக்கத்தை என்னால் முற்றாக இல்லாதொழிக்கப்படும்.
- கடனின்றி வாழ அறிவுரைப் புத்தகமும் அதிஷ்ட குபேர யோகமும் வழங்கப்படும்.
- புத்திர தோஷம் இல்லாதோர்க்கு புத்திர பாக்கியம் கிட்ட எண்கணித ரீதிப்படி அட்சரங்கள் கொடுக்கப்படும்.
- ஆண்மை குறைபாட்டில் அவதிப்படுவோருக்கு அற்புத லேகியங்கள்.
- தலைமுடி வளர வெள்ளை முடி இல்லாது கருப்பு முடியாக திகழ டை கலவாது தலைக்கு எண்ணெய் "நீராவி ஔஷதம்" கொடுக்கப்படும்.
- சூனியத்தால் ஏற்படும் இரவில் பயந்து எழுதல், தூக்கமின்மை, கை கால் நடுக்கம், பசியின்மை இப்படிப்பட்டவர்களுக்கு அபூர்வ உட்சாட்டத்தின் மூலம் என் மூலம் எத்தனை எத்தனையோ பேர் குணமாகியுள்ளார்கள்.

எமது ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் மாத கடைசியில் சுமார் 4 மணித்தியாலம்
அக்கினி குண்டல பூஜையில் உங்கள் குறை நிறைகளை போக்கிக் கொள்ளலாம். அன்றைய தினம் தானதர்மங்களும் உண்டு.

உண்மைக்கு எடுத்தக்காட்டு எமது நிறுவனமே

● அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம் ● இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
● இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது. உறுதி

உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.உங்கள் பிரச்சினை தீரும்.

P.K.Samy Advertising

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

**தலைமை காரியாலயம்**
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

**தொலைபேசியில் ஆலோசனை பெற**
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

Airtel மூலம் உங்கள் இராசி பலாபலன்களை அறிய 2626 தொடர்பு கொண்டு எண் 2ஐ அழுத்தவும்.

இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்க ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org